
என்றும் உங்களுடன்
ங்கையர் மலர்
ம்பர் 2010
MANGAYAR MALAR
256 பக்கங்கள் ரூ.20/-
பச்சைக் கிளிகள் தோளோடு...
சாந்தி துரைசாமி சிறப்பு பேட்டி!
துவரம் பருப்பு இல்லாத சூப்பர் குழம்புகள்!
சின்னக் கண்ணன் ஸ்ரீநாதன்!
இலட்ச தீபத் திரிகள்
ணைப்பு
னிய
லறம்
64!
தீபாவளி+ கார்த்திகை ஸ்பெஷல்!


இந்தியாவின்
நாகரிக நங்கையர்கள்
விரும்பி அணிவது VBJ
ஹேப்பி
தீபாவளி


பாரம்பரியத்தில் புதுமை
ஆரெம்கேவி
Vannajaalam silks
இந்த தீபாவளிக்கு,
ஆரெம்கேவியின் வர்ணஜாலம்
பட்டுப்புடவை கலெக்ஷனில்
ஜொலித்திடுங்கள். ஆரெம்கேவியின்
டிசைன் ஸ்டுடியோவில் கைதேர்ந்த
கலைஞர்களால் இந்த
தீபாவளிக்கென்றே விசேஷமாய்
உருவாக்கப்பட்ட புதிய
பட்டுப்படைப்புகள். ஒவ்வொரு
படைப்பும் நவீனகாவியம்.
வர்ணஜாலம் பட்டுப்புடவைகளை
அணிந்து தீபாவளியை
ஆனந்தமாய் கொண்டாடுங்கள்.
subrata bhowmick design
சென்னை | பனகல்பார்க்
கோயம்புத்தூர் | ப்ரூக்-ஃபீல்ட்ஸ்
திருநெல்வேலி | வண்ணார்பேட்டை
toll free no 1800 425 3105
(applicable within india only from 10 am to 9 pm)
to know more about our new diwali collection
sms RmKV to 53636
email silks@rmkv.com
purchase online at
www.rmkv.com


52


84


108



சிகரம் தொட்ட பெண்கள்!

புதிய பகுதி ஆரம்பம்...



திருமண மலர் பக்கங்கள் 145

சந்தித்தோம்...
சிந்தித்தோம்...
சந்தோஷித்தோம்!
அடுத்த இதழில்...

டையில்... பிரணதி

ண்ணப்படம் : 'சன்ஷைன்' மனோஜ் கிருஷ்ணா

A to Z பெண்கள் மருத்துவம்

புதிய தொடர் ஆரம்பம் 20



ர் மாத இதழ்!

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

மலர் : 30 இதழ் : 10 நவம்பர் 2010

கல்கி தீபாவளி மலர் 2010




ஆழ்வார்களும் தமிழும்

- வேளுக்குடி கிருஷ்ணன் சுவாமிகள்



தில்லை அம்பல நடராசா

- சுகி.சிவம் அட்டைப்பட கட்டுரை



கோபுலு, மாருதி,
மணியம் செல்வன், வேதா
ஓவியங்களுடன்...



- நடிகைகள் கனவுக்கன்னியாக இருந்தா போதும்!?

- மதன் சினிமா பார்வை

விலை ரூ.120 மட்டும்

உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்யுங்கள் அல்லது கூரியர் மூலம் பெற ரூ.30/- சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்: விற்பனை மேலாளர், கல்கி தீபாவளி மலர், கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை - 600 032. தொடர்புக்கு : 044-4343 8844

லேடி பேர்ட் சைக்கிளிலிருந்து ஒயி
ாக இறங்குகிறாள் ஆஷிகா! தோளோடு
வட்டப்பட்ட முடிக்கற்றைகள் பட்டு
ழையாக மின்னுகின்றன. அவள் நிச்சயம்
ழகிதான்!


பின்னாலேயே ஸ்கூட்டியில் வந்து
வளை ஒட்டியபடியே நிற்கின்றனர்,
திவ்யாவும், சதீஷும்!

''லவ்வா, இல்லையா?''

''ச்சீ.. போங்கடா!'' ஆஷியின் முகத்தில்
ணம் கலந்த பெருமிதம்.

''இரண்டு பேருமே ப்ரபோஸ் பண்
ாம்! அப்புறம்
ன் சாய்ஸ்!''

''ஆமா ஆஷி! நீ
ரை செலக்ட்
ன்றியோ அவன்
ன்னோட பாய்
ிரண்ட்! மற்றவன்
ஸ்ட் ஃபிரண்ட்!
ேகுவா? என்
ாட ஃபேஸ்
கைப் பாரு!''



ஒரு வார்த்தை!

''ஐயோ! என்
டி இது? உன்
ாட செல்
ான்ல கண்ணா
ன்னான்னு ஃபோட்டோஸ்? இவனுங்
ல்லாம் யாருடி?'' அம்மா பதறியபடி
ட்க, லதிகா என்னவோ சொல்லி
ாளிக்கப் பார்த்தாள்.

''நீ வழிக்கு வர மாட்டே! அப்பா
ட்டும்! என்ன துணிச்சலடி உனக்கு?''
று அம்மா அழ...

வெளியே விருட்டென்று கிளம்பிப்
ான லதிகா... சாயங்காலம் ஆகியும்
வை. கவலையும் வேதனையுமாக அம்மா
ித்த போது அந்த ஃபோன் வந்தது.

''ஆன்ட்டி.. லதிகா ஸ்லீப்பிங் பில்ஸ் சாப்பிட்டு...''

மருத்துவ மனையில் இருபதாயிரம் ரூபாய் செலவு செய்து, லதிகாவை வீட்டுக்கு அழைத்து வருகின்றனர்.

இப்போதும் லதிகா இரவு நேரம் கழித்து வருகிறாள். மொட்டை மாடியில் ஃபோன் பேசுகிறாள். படிப்பிலும் சுழிதான்! ஆனாலும் லதிகாவின் பெற்றோருக்குப் பயம்! ஏதாவது தட்டிக் கேட்டால், மறுபடி தற்கொலைக்கு முயல்வாளோ என்று!

ஷிவானி மீது டெஸ்ட் நோட்டைத் தூக்கி வீசியடிக்கிறார் டீச்சர்.

''இரண்டு சப்ஜெக்ட்டுல ஃபெயில். ஸ்டைலா டிரஸ் பண்ணிக்கிட்டா போதுமா? பெரிய நயன்தாரான்னு நினைப்பு!''

டீச்சர் இரண்டொரு வார்த்தைகளைக் கடுமையாகப் பேசுகிறார். வீட்டுக்குப் போனால் அம்மாவும் தன் பங்குக்குத் திட்டுகிறார். அடுத்த நிமிடம் தன் அறைக்குள் புகுந்து ஷிவானி, கதவைச் சாத்திக் கொள்கிறாள்.

அரைமணி நேரம் கழித்து கதவைத் தட்டினால்... உட்புறம் தாளிடப்பட்டு... ஐயோ!

லேடி பேர்ட் அழகி ஆஷிகா, செல்ஃபோன் டார்லிங் லதிகா, சென்சிடிவ் ஷிவானி... இவர்கள் எல்லாம் நீங்கள்

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
தரத்திலும் நம்பர் 1 மகளிர் மாத இதழ்!

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

பொறுப்பாசிரியர்: அனுராதா சேகர்
வடிவமைப்பு:
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்
தொலைபேசி: 044 - 4343 8888
தொலைநகல்: 044 - 4343 8899
ஆசிரியர் குழு:
044 - 4343 8877
mangayarmalar@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு:
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
விற்பனை பிரிவு:
044 - 4343 8844
sales@kalkiweekly.com
இன்டர்நெட் முகவரி:
www.mangayarmalaronline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்):
உள்நாடு : ரூ.250/-
வெளிநாடு : ரூ.2,200/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நினைப்பது போல... இருபதைக் கடந்த இளை களோ... கல்லூரி மாணவிகளோ அல்ல!

ஆஷிகா... இன்னும் வயசுக்கே வராத ஆறாவ படிக்கும் பதினொரு வயது சிறுமி! ஆதித்யாவு சதீஷும் எட்டாங்கிளாஸ் மாணவர்கள்! லதிக ஒன்பதாம் வகுப்பு மாணவி!

ஷிவானி... நம்புங்கள்... பத்து வயதுப் பெண்!

இதெல்லாம் நானறிந்த நிஜக்கதைகள்! இவ்வள சிறு வயதில், இப்படியெல்லாம் குற்றங்கள் செய் இவர்களைத் தூண்டுவது எது? பெற்றோரி வளர்ப்பா, பள்ளிச் சூழ்நிலையா? சினிமா, டீ.வி இன்டர்நெட்டின் பயன்பாடா? அல்ல... எல்லா கலந்த பாதிப்பா?

எனக்கென்னமோ, மனித மூளையைவிட அதிவே மாகச் செயல்படும் இன்டர்நெட்டின் தகாத பய பாடும், அதன் விளைவுகளும் சற்று தீமை கூடி தெரிகிறது.

"என்னமோ, கம்ப்யூட்டர்ல பண்ணிக்கிட்டு இருக்கா என்று இனியும் அலட்சியமாக இல்லாமல் கவனத் டன் கண்காணியுங்க. குழந்தைகள் தவிர்க்க வே டிய வேண்டாத இணையதளங்களின் பெயர்க ப்ரௌஸரிலேயே போய், அந்தப் பெயர்களை தடைசெய்யும் வசதியுள்ளது. Net Nanny என்றொ சாஃப்ட்வேரை வாங்கி, உங்கள் கம்ப்யூட்டர் போட்டு வைத்தால், அது கம்ப்யூட்டரில் நடைபெற கூடிய அனைத்துச் செயல்பாடுகளையும் ட்ர செய்து வைத்து விடும். அதன் மூலமும் நமது குழந்த களை கண்காணிக்கலாம். நமது கணினியில் தேவை யற்ற அந்த வலைத்தளங்களை தடைசெய்யலாம்.

என்னை கேட்டால், இந்த புதுயுக அம்மாக்க தீபாவளி முடித்த கையோடு, ஒரு கம்ப்யூட் கிளாஸுக்குப் போய், தாங்களும் கணினி அறிவை வளர்த்து கொண்டால் கூட தேவலாம்... இளை சக்தியை நல்லபடி வளர்க்க இந்த வகுப்புக அவசியம் உதவும் என்று தோன்றுகிறது!


ஏனென்றால்... எந்தக் காலத்திலும் எ விஷயத்திலும் பெண்ணுக்குத்தான் பாதிப்பு அதிகம்

அனுஷா நடராஜன்

தீராத ARTHRITIS வலியிலிருந்து விடுதலை

அறுவை இல்லா நவீன சிகிச்சை

PEMF treatment works to stop the pain ..



- வலி இல்லை
- அறுவை சிகிச்சை இல்லை
- நீண்ட நாட்கள் மருந்து இல்லை
- குறைந்த கால சிகிச்சை
- பக்கவிளைவுகள் இல்லை
- மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை.



NEOMED HOSPITAL

SPECIALITY & RESEARCH CENTER

Chennai : 2181, L-Block, 12th Main Road, Anna Nagar, Ph : 044-2620 1147 / 2620 0882. Fax : 2620 0631
Madurai : 11, Lakeview Road, Opp. Sundaram Theatre, K.K. Nagar, Ph : 0452-2581414, 2581515.
Salem : 127 / 1, Varalakshmi Towers/ Gandhi Road, Ph : 0427-2311818, 2311819.
Trichy : No. 52, Central Bazaar Street, Tennur, Trichy. Ph : 0431-2791051, 2791052.

www.neomedhospitals.com

மொகலாய மன்னரான அக்பர், ஒருமுறை ஜெய்ப்பூருக்குச் சென்றிருந்தார்.

அங்கு ரஜபுத்திர இளவரசியான ஜோதா பாய், அவரை மிகவும் கவர்ந்து விடவே அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்டார். கிருஷ்ண பக்தையான ஜோதாபாய் திருமணத்தின் பொழுதே ஒரு நிபந்தனையை விதித்தாள்.

தன் பூஜை அறையில் ஸ்ரீ கிருஷ்ணரை வைத்து வணங்க, அக்பர், அனுமதிக்க வேண்டும் என்று கூறினாள்.


அக்பரும் அவளது நிபந்தனையை ஏற்றுக் கொண்டார். மணமுடித்து ஆக்ரா நகருக்கு வந்த ஜோதா, தன் பூஜை அறையில் கிருஷ்ண விக்ரஹத்தை வைத்து பிரமாதமான அலங்காரங்களோடு தினமும் ஆராதனை செய்து வந்தாள்.

ஆனால் அவளுக்கு ஒரு குறை இருந்து வந்தது. தான் இருக்கு இடத்தில் கிருஷ்ண கோயில் ,நரிசன எதுவும் கிடைக்காமல் போன என்பதுதான்.

தன் பக்தையின் குறையை பொறு பானா அந்த மாயக் கண்ணன்?

பிருந்தாவன் க்ஷேத்திரத்தில் கண்ண னுக்காக ஒரு பிரத்யேகக் கோயில் இருந்தது (இன்றும் இருக்கிறது). நான்கு அடுக் களைக் கொண்ட அந்தக் கோயிலி தினமுமே தீப வழிபாடு மிகவும் சிறப்பா

தொடர்ச்சி பக்கம் 10...





என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
அடுத்த இதழ்
மார்கழி ஸ்பெஷல்!
பொங்கல் சிறப்பிதழுக்கு...
கிராமிய மணம் கமழும் குட்டிக் குட்டிச் செய்திகளை... பத்தே வரிகளுக்குள் அஞ்சலட்டையில் மட்டுமே எழுதி அனுப்பவும். அது நெல்லுச் சோறு முதல் ஜல்லிக்கட்டு வரை எதைப் பற்றியும் இருக்கலாம். சுவையானவை பிரசுரமாகும்!
கடைசித் தேதி 25.11.2010
உங்கள் அபிமான குட்டி புக்கில்
ண்ணே, நலமா?
கோவை 'தி ஐ ஃபவுண்டேஷன்'
ழங்கும் கண் மருத்துவ டிப்ஸ் 64!

8ஆம் பக்கத் தொடர்ச்சி..

நடைபெற்று வந்தது.

அந்தி சாயு நேரத்தில் நான்காவ அடுக்கின் மேல் தளத்தி மிகப் பெரிய கொப்பரையி பல கிலோக்கணக்கில் நெய்ை ஊற்றி, தேர்வடம் போன்ற திரியை போட்டு தீபத்தை ஏற்றும் பழக்க இருந்தது.

திருவண்ணாமலையில் ஏற்று கார்த்திகை தீபம் போல் ஸ்ரீகிரு ணன் கோயில் தீபமும் வெகுதூர வரை தெரியுமாம்.

ஆக்ராவில் தன்னுடைய அர மனை உப்பரிகையிலிருந்து, தினமு அந்த ஜோதியை தரிசனம் செய்வா ஜோதாபாய். அந்த தீப ஒளியை த சித்தால் ஸ்ரீகிருஷ்ணனின் அனுக் ஹம் கிடைக்கும் என நம்பிக்கை.

ஆனால் அக்பரின் காலத்திற்கு பிறகு அவரது பரம்பரையில் வ ஔரங்கசீப்பினால், தன்னுடை அரண்மனையை விட உயரமான ஒ கட்டடம் (கோயில்) இருந்ததையு அங்கிருந்து ஒளிர்ந்த ஜோதியான ஜோதா அக்பரின் வழிபாட்டுச் முக்கியமாக அமைந்திருந்ததை ஜீரணிக்க முடியவில்லை.

கோயிலின் நான்காவது தளத்ை இடிக்கச் செய்தான். அக்கோயில் மாடியில் தீப தரிசனம் இருக் கூடாது என்று தடைவிதித்தா இன்றும் பிருந்தாவனத்தில் ஜோ அக்பருக்கு ஜோதி ரூபமாய் தன் சனத்தை அருளிய ஸ்ரீகிருஷ்ண கோயில் இருக்கிறது.

உருவ வழிபாடு அல்லாத ம தினைச் சார்ந்த மன்னனை மண சரித்திரத்தில் தனக்கென்று ஒரு இ தைப் பிடித்த ரஜபுத்திர இளவரசி நற்கதியைக் கிடைக்கச் செய்த ஜோதி தரிசனமில்லாது வே எதுவாக இருக்க முடியும்?

- மாலதி சந்திரசேக

ரூ.150/- பரிசு பெறும் பெட்டிக் கதை

புது மருமகள்!

சமையல் அறையிலிருந்து ஹால் நோக்கி நடந்த சாரதா, படுக்கையறை அருகே வந்ததும் நின்று விட்டாள்.

''ஏய், ப்ரியா! எத்தனை தடவை கூப்பிடுறேன்?''

''என்னக்கா?''

''மாப்ளை சரியான 'அம்மா கோண்டு' வா இருக்காருடி.''



''இருக்கட்டுமே!''

''அடிப் பைத்தியமே! அப்படியிருந்தா கஷ்டம் உனக்குத்தான். ஆரம்பத்து லேயே லகானை இழுத்துப் பிடிச்சாத்தான் நீ சொல்ற தைக் கேட்பார்.''

-இதைக் கேட்ட சாரதா அதிர்ந்தாள். இந்த வார்த் தைகளை நான் என் பெண் ணுக்குச் சொன்னேனே!

''அக்கா!''-புது மருமக ளின் குரல் கேட்டதும் காதைத் தீட்டிக் கொண் டாள்.

''என்ன நொக்கா?''

''பாத்தியா, உன் பேச்ச கேக்கலேன்னதும் உனக்கே கோபம் வருது. இத்தனை வருஷமா அம்மா பேச்சைக் கேட்ட எம் புருஷனை மட்டும் மாத்துனா என் மாமியாருக்குக் கோபம் வராதா?

''அட! புது மருமகள் நல்லவளா இருக் காளே. அவளைப் பொண்ணு மாதிரி பார்த் துக்கணும்!'' - மனதில் தீர்மானித்தாள் சாரதா.

- சோனா.மணிமொழி, மயிலாடுதுறை



கவிதை

எதுவும் பழுதில்லை!

இது வேண்டுமா?
அது வேண்டுமா?
எத்தனை டிசைன்கள்!
எத்தனை நிறங்கள்!
களைப்பின்றி கடைக்காரர்
எடுத்துப்போட...
சலிப்பின்றி நானும் கலைத்துப்போட்டேன்!
அடுத்த பண்டிகைக்கு அழகானது கிட்டும்
அரைகுறை மனதுடன் துணிகள் சில வாங்கினேன்.
பண்டிகை நாளன்று...
பலரது உடலிலும்
நான் ஒதுக்கிய துணிமணிகள்...
ஆடைகளாய்!
எதுவும் பழுதில்லை...
நமக்குள் இருப்பவற்றில்!
இது... புத்தாடை தந்த
புதிய சிந்தனை!

இ.டி.ஹேமமாலினி, வேப்பம்பட்டு.


KALEESUWARI
நாம் நம்புகிறோம் நமது நலனை சந்தோஷத்தை


Gold Winner

'நிலா நிலா ஓடி வா, நில்லாமல் ஓடி வா, மலை மீது ஏறி வா, மல்லிகைப் பூ கொண்டு வா...' என்று சின்ன வயதில் பாடியது நினைவுக்கு வருகிறது. இன்று திருமணம் போன்ற விசேஷங்களில் கூட, இரண்டு முழம் மல்லிகையைத் தலையில் வைத்துக் கொள்ள, இளம்பெண்களிடையே ஏகப்பட்ட முனகல்கள். எனக்கு நெருங்கிய உறவினர் வீட்டுத் திருமணத்தில், பூப்பந்துகள் சீந்துவாரில்லாமல் கிடந்து வாடியது. நான் கத்தரியை தேடிப் பிடித்து, பூ விள்ளல் களுடன், மகளிர் கூட்டம் மத்தியில் புகுந்தால், கிடைத்த பதில்களை என்னவென்பது? சாம்பிளுக்கு ஒருசில....

● ''ரொம்பவே மலர்ந்திடுச்சில்ல...? வேண்டாமே!''

● ''மல்லியா? வேண்டாம்பா. ரோஸ் இருக்கா? ஒண்ணு இருந்தாக்கூட போதும்.''

● ''ஹேய், பூவெல்லாம் வேண்டாம். ஹேர் ஸ்டைல் கலைஞ்சிடும்.''

● ''எங்கிட்ட ஹேர் கிளிப் இல்லை. பூ இல்லாட்டா பரவாயில்லை.''

● ''பாவம், அப்பலேருந்து கெஞ்சறீங்க. ஒரு பிட் குடுங்க போதும். ஐயோ, அவ்வளவெல்லாம் வேணாம், தலை கனக்கும்.'' (பிற்பாடு அந்த 'பிட்', பின்னலின் நுனியை மட்டுமே சுற்றியது வேறு விஷயம்).

அட, மணப்பெண்ணே கூட மலர்களை சூட ஏகப்பட்ட தடங்கல்களை விதித்தாள் என்றால் நம்புவீர்களா? ''விரதத்திற்கு கண்டிப்பாக மூன்றே முழம் மல்லிகை, கனகாம்பரம் பக்கத்திலேயே வரக்கூடாது. மாப்பிள்ளை அழைப்பிற்கு, புடைவைக்கு ஏற்ற 'நிறம் ஏறி மாறிய' அலங்கார மலர்கள். முகூர்த்தத்திற்கு நெற்றியிலிருந்து பின்னல் நுனி வரை நகை அலங்காரத்திற்கே முதலிடம், ரிசப்ஷனிற்கு ப்யூட்டி ஃபார்லர் ஃபாஷன்தான்'' என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டாள்.

முழுதாக மீந்த மூன்று பூப்பந்துகள் பாவமாக முழிக்க, எதிரே கல்யாண காண்டிராக்டர் தென்பட்டார்.

''என்னம்மா, பூ அதிகமா இருக்கா? இப்படி குடுங்க, சுற்றி விட்டுடலாம்'' என்று 'மளமள' என அத்தனையையும் பிரித்து, மேடையில் ஊசலாடிய ஃபான்சி மலர்களிடையே அந்த மல்லியையும் தொங்க விட்டார்!

- லலிதா கிருஷ்ணமூர்த்தி, சென்னை-42

"மல்லியா? வேண்டாம்பா!"







கண்ணின் கருமை மறைய கூல் பேக்!

தேவை : பாதாம் ஆயில் - 4 சொட்டுக்கள், தக்காளிச்சாறு, தேன், கடலை மாவு - தலா 1/2 டீஸ்பூன்.

செய்முறை : தரையில் ரிலாக்ஸாகப் படுக்கவும். கண்களைச் சுற்றி, பாதாம் ஆயிலை, நுனிவிரலால் மெல்ல தடவி, மிக நிதானமாக வட்டமாகவும், ஆன்ட்டி கிளாக்காகவும் மசாஜ் செய்யவும். பத்து நிமிடம் ஊறவிடவும். மற்ற பொருள்களைக் குழைத்து கண்கள் மீது 'பேக்' போட்டு, இருபது நிமிடம் கழித்து, குளிர்ந்த நீரில் கழுவவும். கருமையும் நீங்கும். கண்களும் பொலிவு பெறும்.

பிரச்னை: கண்ணைச் சுற்றி கருவளையம், ஏஜ் க்ருப் 30+
தீர்வு: ஐ பேக் + வைட்டமின் சி சப்ளிமெண்ட்

பல பெண்களுக்கு முகம் நல்ல லட்சணமாக இருக்கும். ஆனால் அவர்களுடைய கண்களுக்குக் கீழே உள்ள கருவளையங்களால், வயது கூடிய தோற்றம் வந்துவிடுகிறது. சிலருக்குக் கண்ணின் கீழ் கருமையுடன், சுருக்கங்களும் விழுந்து, 'சிக்லி லுக்'கைத் தந்துவிடும்.

எனவே, முதலில் உங்கள் பிரச்னை என்ன என்று ஆராயுங்கள். சத்துக் குறைபாடு இருப்பின், அதைத்தான் முதலில் சரி செய்ய வேண்டும். வைட்டமின் சி சத்து நிரம்பிய ஆரஞ்சு, தக்காளி, எலுமிச்சை, திராட்சை போன்ற பழ ரசங்களையும், முளைகட்டிய தானியங்களையும் நிறைய உட்கொள்ளுங்கள்.

சரும உலர்வு ஏற்படாத வண்ணம் அடிக்கடி குளிர் நீரில் முகம் கழுவி, தண்ணீர் குடித்துவந்தால் இந்தப் பிரச்னை மறைந்துவிடும். சரியான நேரத்துக்குத் தூங்குவதும், மனத்தை ரிலாக்ஸாக வைத்துக்கொள்வதும் அவசியம். கம்ப்யூட்டரில் அதிக நேரம் பணிபுரிய நேர்ந்தால் அரை மணி நேரத்துக்கு ஒருமுறை, கண்களை மூடி ஐந்து நிமிடம் ஓய்வு எடுக்க வேண்டும். வெகுநேரம் கண் விழித்து டி.வி. பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

உங்கள் அருகாமையில் உள்ள அழகு நிபுணரை அணுகி, 'கோலோஜென்' கன்டென்ட் உள்ள தரமான பேக் ஒன்றினை பொரிக செய்யும்படி கேட்டு, பயன்படுத்தி வர, சுருக்கம் நீங்கிவிடும்.

கண் மருத்துவரிடம் சென்று ஒரு சில சிம்பிள் ஐ எக்ஸர் சைஸ்கள் செய்யக் கற்றுக்கொள்ளலாம். இதனால் கண்களைச் சுற்றி இரத்த ஓட்டம் அதிகமாகி, விரைவில் கருமை மறையும்.



அழகுக்கலை நிபுணர்
ஆர்த்தி பாலாஜி

என்றும் 16

குழம்பு மசாலா

ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...
ஈஸ்டர்ன் மசாலாவில் குழம்பு செய்தால்
பாட்டியின் கை மணம் ஞாபகம் வருதே!

ஈஸ்டர்ன் குழம்பு மசாலா, தமிழ் நாட்டுக்கே உரிய குழம்பின் அருமையான சுவையை, உங்கள் பாட்டியின் கை மணத்தோடு அப்படியே உங்களுக்குத் தருகிறது! இட்லிக்கோ, சாதத்திற்கோ இதை விட பொருத்தமான ஜோடி இருக்க முடியுமா? காய்கறிக் குழம்பு, வெங்காயக் குழம்பு, வெண்டைக்காய் குழம்பு, வத்தக் குழம்பு, மீன் குழம்பு, முட்டைக் குழம்பு என எது செய்வதாக இருந்தாலும், ஈஸ்டர்ன் குழம்பு மசாலாவையே பயன்படுத்துங்கள்.

செய்வது

ஈஸ்டர்ன் குழம்பு மசாலா - 2 டேபிள் ஸ்பூன்
வெந்தயம் - 1/2 டீஸ்பூன்
சின்ன வெங்காயம் - 10
பூண்டுப் பற்கள் - 10
நல்லெண்ணெய் - 1/2 கப்
புளிக் கரைசல் - 1/3 கப்
கறிவேப்பிலை - 1 ஆர்க்கு

கடாயில் இரண்டு டேபிள் ஸ்பூன் எண்ணெயைக் காயவைத்து, அதில் நறுக்கிய வெங்காயத்தில் பாதி, துருவிய தேங்காய், வெந்தயம் போன்றவற்றை, மெல்லிய தீயில், பொன்னிறமாக வதக்கவும். அத்துடன் ஈஸ்டர்ன் குழம்பு மசாலா சேர்த்து நன்கு அரைக்கவும். மீதமுள்ள எண்ணெயை சூடாக்கி, கடுகு, கறிவேப்பிலை, வெங்காயம், பூண்டு இவற்றை தாளித்து, 1 நிமிடம் வதக்கவும். அத்துடன் அரைத்த விழுதையும், புளிக் கரைசலையும் சேர்த்து 5 நிமிடம் கொதிக்க விடவும். எண்ணெய் பிரிந்து வரும் வரை கொதிக்க விடவும். இட்லி அல்லது சாதத்துடன் சூடாகப் பரிமாறவும்.



பாரம்பரிய
தமிழ் சமையல்



FLAVOUR LOCK

A quality product from Eastern





நமது பண்பாட்டிலும், கலாசாரத்திலும் இரண்டற சேர்ந்து கலந்திட்ட புடைவையை அணிந்து செல்வதில்தான் பெண்களாகிய நம்மிடையே எத்தனை பூரிப்பு? அந்தப் புடைவைக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வண்ணம் பலவிதமான புதுப்புது வடிவங்களை புகுத்தியிருக்கிறார் ஸ்ரீ பாலம் சில்க்ஸின் உரிமையாளர் ஜெயஸ்ரீ ரவி.

ஸ்ரீ பாலம் சில்க்ஸ் இந்த ஆண்டின் பெருமை மிகு படைப்பாக பட்டுப் புடைவைகளில் நாற்பத்தியொரு புது டிசைன்களை அறிமுகப்படுத்தியது. சென்ற இதழில் 'Silkline 11' என்ற பெயரில் சென்னை பார்க் ஷெரட்டன் ஹோட்டலில் இதற்கான 'ஃபேஷன் ஷோ' நடத்தியதைப் பற்றி வெளியிட்டிருந்தோம். அதில் அறிமுகப்படுத்தப்பட்ட பத்துவிதமான கான்செப்ட் சேலைகளில் நான்கு சேலைகளைப் பற்றி இப்போது பார்ப்போம்...

பெருமைமிகு

டாட்டூ சில்க்ஸ்

அந்தக் காலத்து அழகான மருதாணி டிசைன்களின் தொடர்ச்சி அல்லது வளர்ச்சிதான் இந்த டாட்டூஸ். கைகளில் அழகான மருதாணி மற்றும் விதம்விதமான டாட்டூஸ் டிசைன்களை வரைந்து கொள்ள விரும்பும் பெண்கள், அதே டிசைன்கள் தங்களது புடைவையிலேயே இருக்கப்பெற்றால், எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள்! கைத்தறிப் பட்டில் வியக்கவைக்கும் கலைநயத்தோடு உருவாகி இருக்கும் இந்த டாட்டூ சில்க்ஸின் விலையும் கைக்கு அடக்கமாகவே இருக்கிறது. சாதாரண டாட்டூ சில்க்ஸ் சேலைகளின் விலை 6,000 ரூபாய், இதே டாட்டூ பட்டை மணப்பெண், தன் மணநாளில் அணிந்து கொள்ள விரும்பினால், அதற்கேற்றபடி அதிக வேலைபாடுகள் நிறைந்த பட்டுப் புடைவை 30,000 ரூபாய்.



த்ரிகந்திகா பட்டு

சென்ற வருடத்தின் மிகப் பெரிய ஹிட் டான த்ரிஷாலா பட்டினை ஒட்டியபடி கொண்டு வரப்பட்டதுதான் இந்தத் த்ரிகந்திகா பட்டு. புடைவையில் பல்லுவிலும், கழுத்தை ஒட்டிய பகுதியிலும் மட்டும் காணப்படும் ஜரிகை வேலைப்பாடு, புடைவையின் மற்ற இடத்தில் கலை நயத்துடன் வெளிப்படும் வண்ணங்களின் கலவை என பட்டில் புதுமை விரும்பும் பதுமைகளுக்காகவே நெய்யப் பட்ட சேலை இது.

அறிமுகம்!



கார்ப்பரேட் பட்டு

பெரிய பெரிய கார்ப்பரேட் களில் வேலைப் பார்க்கச் செல்லும் பெண்கள் விரும்பி உடுத்துவது, பட்டுச் சேலை களைத்தான். அதிக வேலைப்பாடு இல்லாமல், ஆனால் பார்ப்பதற்கு, புதுமையாகவும் கலை நயத்துடன் உருவாக்கப் பட்ட சேலைகள்தான் இந்த 'கார்ப்பரேட் சேலைகள்'. உப்படா ஸ்டைலில் சில சேலைகள், சணல் மற்றும் பட்டுக்களை அங்கங்கே பயன்படுத்தி நெய்யப்பட்ட சேலைகள் என அவரவர் விருப்பத்திற்கேற்ப சேலைகள் இருக்கின்றன.



அந்தரிக்ஷா பட்டு

இயற்கை அன்னை அள்ளி தெளித்திருக்கும் படைப்புக்களை ரசிக் காதவர்களே இருக்க முடியாது. அந்தரிக்ஷா புடைவையின் பல்லு மற்றும் பார்டரில் அழகாக காலை நேரத்து வானத்தின் நிறத்தை காட்ட, புடை வையோ இரவு நேர நட்சத்திர ஜாலத்தை ஜம்மென பிரதிபலித்து, ஜொலி ஜொலிக்கிறது.

''சென்ற வருடம் நாங்கள் அறிமுகப்படுத்திய நவரச பட்டு, அங்கரிகா பட்டு, மற்றும் த்ரிஷாலா பட்டுக்களுக்கு இன்றளவும் அதிக டிமாண்ட் இருந்து வருகிறது. அதே பாட்டர்ன்களில் புது புது டிசைன் களைத் தொடர்ந்து சேர்த்துக்கொண்டே இருக் கிறோம். இந்த வருடத்தின் பெருமைமிகு அறிமுகங் களின் அறிமுகத்தை அடுத்துவரும் இதழ்களிலும் வாசகியரோடு பகிர்ந்துகொள்ள ஆவலோடு காத்திருக்கிறேன்'' என்கிறார் ஜெயஸ்ரீ ரவி.

தொகுப்பு:- நளினி சம்பத்குமார்



புதிய பகுதி

பெண்களின் A to Z உடல் பிரச்னைகளை அலசும் புதிய மருத்துவப் பகுதி ஆரம்பம்.

பெண்களும் பூப்புப்

பெண்ணும் பூவும் ஒரு ஜாதி. இரண்டுமே பூத்தால்தான் அழகு! சில பெண்களுக்கு பூக்கும் பருவத்திலோ, பூத்த பிறகோ பிரச்னைகள் ஏற்படுகின்றன.

பிரச்னைகளும்!

பெண்களின் உடல்நலனைப் பாதிக்கும் பல விஷயங்கள், அவர்கள் வயதுக்கு வரும் நேரத்திலேயே தொடங்குகின்றன. அவர்களது சராசரிபூப்பெய்தும் வயது 10½ யிலிருந்து 13 வயதுக்குள் எனலாம். சில சமயம் இது இன்னும் கொஞ்சம் துரிதமாகவோ அல்லது இன்னும் கொஞ்சம் காலதாமதமாகவோ வரலாம்.



டாக்டர் மானு லக்ஷ்மி
குழந்தையின்மை சிகிச்சை நிபுணர்

பருவ வயதை அடையும் பெண்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். மூன்றில் ஒரு சதவிகிதம் பெண்களுக்கு மாத விலக்கு என்பது தவறாமல் 28-32 நாட்களுக்குள் வந்து, ஒன்றிலிருந்து ஐந்து நாட்கள் வரை நீடிக்கும். இன்னொரு வகை, மாதவிலக்கு தள்ளிப்போவது. இரண்டு மாதம், மூன்று மாதம் அல்லது பத்து மாதம் கூட தவறிப்போகலாம். இந்த வகை, குழந்தைகளை அவர்களது வயது கருதி 15 அல்லது 16 வயது வரை காத்திருக்கச் சொல்லலாம். அவர்களது தேக ஆரோக்கிய ஊட்டத்துக்கு, இரும்புச் சத்து மாத்திரைகளை உட்கொள்ளச் சொல்லலாம்.

மூன்றாவது வகை, மாதவிலக்கு கட்டுப்பாடின்றி, தாறுமாறாக வருவது. பதினைந்து நாட்களுக்கு ஒரு முறையே மாதவிலக்கு வந்துவிடும். அப்படி வந்ததும், 10-15 நாட்கள் தொடர்ந்து அதிக உதிரப் போக்கு ஏற்படும். இந்தக் குழந்தைகளுக்கு உடனடியாக மருத்துவப் பரிசோதனை தேவை. ஸ்கேன், ஹார்மோன் டெஸ்ட், தைராய்டு சுரப்பி டெஸ்ட் போன்றவற்றை செய்து, தகுந்த மருந்துகளை உட்கொள்ளச் செய்ய வேண்டும். பெரும்பாலோருக்கு ஸ்கேன் உள்ளிட்ட பல சோதனைகளில் பயப்படும்படி எதுவுமிருக்காது. இருந்தாலும், பரிசோதனை செய்து கொள்வதே நல்லது.

பொதுவாக, டீன்-ஏஜ் பெண்களைப் பாடாய்ப்படுத்துவது வயிற்றுவலிதான். மாதவிலக்குக்கு பத்து நாட்கள் முன்பாகவோ, அல்லது ஒரிரு மணி நேரம் முன்பாகவோ கடுமையான அடிவயிற்றுவலி, வாந்தி, கால்வலி, மயக்கம் போன்ற உபாதைகள் இருக்கும். இந்த மாதிரி வலி மிகுந்த மாதவிலக்குகள், சாதாரணமாய் முட்டைப்பையில் சினைமுட்டை பெருத்து உடைவதனால் ஏற்படுகிறது. இது இயற்கையான ஒன்றுதான். எனவே பயப்படத் தேவையில்லை. அந்தச் சமயத்தில் மருத்துவரின் ஆலோசனைப்படி வலி நிவாரண மருந்துகளை உட்கொண்டாலே போதும். வலி குறைந்துவிடும். பள்ளிக்கோ, கல்லூரிக்கோ, வேலைக்கோ இயல்பாகச் செல்ல முடியும். ஆனால், இதிலும் விதிவிலக்குகள் இருப்பதால் ஒரு ஸ்கேனிங் அவசியம் தேவைப்படும்.

இந்த மாதிரி மாதவிலக்கு கோளாறுகளுக்கு பல சமயம், கருமுட்டை பையில், முட்டைகளைச் சுற்றி நீர் கொப்பளங்கள் உண்டாகும் தன்மை (Poly cystic Ovaris) இருக்கலாம். இதைப் பற்றி பிறிதொரு

நந்தினி (பெயர் மாற்றப்பட்டது) என்ற பதினான்கு வயதுப் பெண், வயிற்றுவலி, அதிக உதிரப்போக்கு என்று சொல்லி வந்தாள். மாதவிலக்கு காலம் தவறி வருதல் பிரச்னையும் அவளுக்கு இருந்தது. ஸ்கேன் செய்து பார்த்தபோது, சினை முட்டை அருகே ஏழு செ.மீ. அளவில் நீர்க்கட்டி ஒன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் அது லாப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டு, இப்போது நந்தினி முழு நலத்துடன் இருக்கிறாள். இதுபோல ஏதாவது அபூர்வமாக நீர்க்கட்டியோ ரத்தக் கட்டியோ இருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதால், ஸ்கேன் எடுப்பது அவசியமாகிறது.



இதுதாங்க லேட்டஸ்ட் சிகிச்சை!

நந்தினிக்கு ஏற்பட்ட Ovarian Cyst பிரச்னையை லேப்ரோஸ்கோபி முறை சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்த யூரோகைனகாலஜிஸ்ட் மற்றும் லாப்ராஸ்கோபிக் ஃபெர்டிலிடி சர்ஜன் டாக்டர் கார்த்திக் குணசேகரன்:-

''இதுபோன்ற கட்டிகள் 10-25 வயதிற்கு உட்பட்ட பெண்களில் அதிகமாகக் காணப்படுகிறது. இக் கட்டிகள் 25-30 செ.மீ வரையில் மேல்வயிறு வரையிலும் கூட வளரலாம். இதைப்பற்றித் தெரியாத தாய்மார்கள், ''டாக்டர், எம்பொண்ணு குண்டாயிட்டே வர்றா'' என்று கூறிக் கொண்டு வருவார்கள். ஸ்கேன் செய்தால் அதிர்ச்சிக்குள்ளாவார்கள்.

மேலும், இதில் ஒரு அபாயம் என்னவென்றால், சினைப்பை கட்டிகள் தங்களுடைய எடையினால் தங்களைத் தாங்கியுள்ள கிளைகளைச் சுற்றிக்கொள்ள வாய்ப்பு உள்ளது. இதற்கு Torsion என்று பெயர். இதனால் அந்தப் பகுதியில் இரத்த ஓட்டம் குறைந்து மிகுந்த வலி ஏற்படக்கூடும். எனவே, உடனடி கவனிப்புத் தேவை. 'கீ ஹோல்' எனப்படும் இந்த நவீன சிகிச்சை, இத்தகையப் பிரச்னைகளுக்கு பெரியதொரு வரப்பிரசாதம். ஒரே நாளில் வீடு திரும்பலாம். வலி இருக்காது. தழும்பு இருக்காது.

கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்.

எங்களிடம் வரும் மிக அதிகப் புகார் ஒன்று இருக்கிறது. ''என் பெண்ணுக்கு வெள்ளைப் போக்கு அதிகமா இருக்கு டாக்டர். அதனால் குழந்தை ரொம்பவே இளைச்சுப் போயிட்டா'' என்று குறையுடன் வரும் தாய்மார்கள் அநேகம். இது பயப்பட வேண்டிய பிரச்னை இல்லை. கருப்பை, சினைப்பை இவையெல்லாம், சமீப காலமாக வேலை செய்ய ஆரம்பித்து இருப்பதால், அதிக ரத்த ஓட்டம் உற்பத்தியாகி இந்த மாதிரி வெள்ளை வீழ்கிறது. இதற்கு ஊட்டச் சத்துகள் கொடுத்தாலே போதும். சில சமயம், ஃபங்கஸ் என்ற நோய்க்கிருமி தாக்கி வெள்ளைப்படுதல், அரிப்பு முதலியன ஏற்படலாம். இதைக் கண்டுபிடித்து தக்க மருந்து உட்கொண்டால் சரியாகிவிடும். பெண்களுக்கு, கரு உற்பத்தித் தொழிற்சாலை என்பது மிகவும் பிரத்யேகமாக இருப்பதால் அவர்களது பிரச்னைகள் தொடர்கதைதான்!

இன்றைக்கு மருத்துவ அறிவு மிகவும் நவீனமாகியுள்ளதால் பெண்கள் பயப்படத் தேவையில்லை. ஆரோக்கிய மேம்பாட்டுக்கான அத்தனை வசதிகளும் தற்போது உள்ளன.

(பூ மலரும்)



Whirlpool
Home Appliances
RO WATER PURIFIER
Water you can trust
WHEN LIFE TRUSTS YOU,
WHO WOULD YOU TRUST?
NOW WITH UNIQUE
MES
MINERAL ENRICHMENT SYSTEM
Ag
Na
K
Ca
Service
ek jodi kapda
Whirlpool initiative
in support of Vastra samman movement by GOONJ.
இந்த பண்டிகை சீசனில்
உங்களின் பழைய துணிகளை
தானமாக அளித்திடுங்கள்..
ஏழை எளியவர்களின் முகங்களில்
புன்னகை மலரச் செய்யுங்கள்..
To give clothes, log on to www.ekjodikapda.com
or SMS <EJK> to 58558 or call us at
1860-180-4558/6000-8558*
*Toll Free
NNAI : Jagan: 97910 73229 | Ansari: 98417 04045 | Gowrishankar: 96000 13735 | Kumaran: 92824 11442 | Gautham: 98407 10716 | COIMBATORE & ERODE: Murugan: 99408 91048 |
...mal: 98438 85343 | MADURAI: Madan Kumar: 98421 51617 | Senthil Kumar: 92824 00226 | PONDY & CUDDALORE: Suresh: 92823 45304 | SALEM: Karthikeyan - 92824 01663 |
TIRUNELVELI & NAGERCOIL: Sivan Pandian: 92824 24429 | TANJORE & TRICHY : Madan: 92824 46492 | Venkat: 94428 17046 | VELLORE Rajesh: 92823 45144

தீபாவளி பட்சண விடுகதை

ஏமாளிக்குக் கிடைக்கும் பலகாரம்!



1. மாப்பிள்ளையிடம் கட்டாயம் இருக்கும், மணப்பாறையில் மலிவாய்க் கிடைக்கும்

2. அதிகம் என்பதில் அது பாதி, சமரசம் என்பதில் சரிபாதி

3. எட்டு தட்டு பலகாரத்தில் ஏழுமலையான் விரும்பியது

4. பாகில் ஊறி ஜாகிங் போகும் கிரிவலம் வந்து வாயில் நுழையும்

5. தலைசீவ உதவாத இது சண்டியர் மீசையில் வீற்றிருக்கும்

6. தட்டிப் பொரித்த பட்டை வட்ட பலகாரம்

7. திருநெல்வேலி போகாமலே ஏமாளிக்கு எங்கும் கிடைக்கும் பலகாரம்

8. ஆங்கில உலக உருண்டை அந்த நிலாவுக்குப் போகுதாம்

9. கொலு நகரத்தில் பிறந்து பாகுடன் கலந்து வரும் பலகாரம்

10. பத்திரிகை ஜாம்பவான் சோவை பக்கத்தில் வைத்திருக்கும் பலகாரம்

-என். ரங்கநாயகி, கோவை-2!

விடைகள்:
1. முறுக்கு, 2. அதிரசம், 3. லட்டு, 4. ஜாங்கிரி, 5. சீப்பு முறுக்கு, 6. தட்டை, 7. அல்வா, 8. குலோப்ஜாமூன், 9. மைசூர்பாகு, 10. சோமாசா



வாடிக்கையாளர்களுக்கு இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
1.50 ct வைர நெக்லஸ்
18.00 gm தங்கத்தின் எடை
விலை ரூ. 1,11,000
சலுகை விலை
ரூ. 95,000
1.04 ct பேன்சி வைர நெக்லஸ்
13.00 gm தங்கத்தின் எடை
விலை ரூ. 83,000
சலுகை விலை
ரூ. 71,000
பாரம்பரிய வைர வளையல்
1.65 ct
தங்கத்தின் எடை
26.00 gm
விலை
ரூ. 1,58,000
சலுகை விலை
ரூ. 1,39,000
வைரத்தோடு
ஜிமிக்கியுடன் சேர்த்து
3.15cts
தங்கத்தின் எடை 20.00gm கிராம்
ரூ. 1,99,000
தள்ளுபடி விலை
ரூ. 1,67,000
ஒரு ஜோடி வைர வளையல்
0.95 ct
தங்கத்தின் எடை
26.00 gm
விலை
ரூ. 1,01,000
சலுகை விலை
ரூ. 91,000
01.11.2010 முதல் 10.11.2010 வரை
வைரம் வாங்கும் அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும்
ஒரு அழகிய நகை பெட்டி இலவசம்
24.10.2010 முதல் 10.11.2010 வரை
23,000க்கு மேல் வைரம் வாங்கும்
அனைத்து வாடிக்கையாளருக்கும்
ஒரு சிறப்பு பரிசு வழங்கப்படும்
*conditions Apply
31.10.2010 Sunday Working Day
• வைர நகைகளுக்கு Pent 4000 தள்ளுபடி • 7 கல் வைரத்தோடு - 23000 முதல் • வைர மூக்குத்தி 1700 முதல் • பேன்சி வைரமோதிரம் 4000 முதல் • பேபி வைரதோடு 4000 முதல் • பேன்சி காது வளையம் 10,000 முதல் • பேன்சி டாலர் சும்மலுடன் சேர்த்து 6500 முதல் • அனைத்து வைரங்களும் V V S E F கலர்
• திருப்பி தரும்பொழுது வைரத்திற்கு மட்டும் 100% அன்றைய மார்கெட் விலை
• 500 முதல் 5000 வரை மாத சீட்டு + இரட்டிப்பு போனஸ் • உங்களுடைய பழைய வைரங்களைக் கொண்டு எங்களுடைய புது டிசைனில் ஆர்டரின் வைர நகைகள் செய்து தரப்படும்.
Sri Palsani Jewels
110, Dr. Radha Krishnan Road, (Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036 | www.sripalsanijewels.net

பளபளக்கும் அழகான, அம்சமான நகைகளை அணிய வேண்டும், அதே சமயம் அது பர்ஸையும் கடிக்கக் கூடாது என்ற ஆசை யாருக்குத்தான் இருக்காது? அப்படி ஆசைப்படும் அனைத்துப் பெண்களுமே, தங்கள் ஆசை தீர நகைகளை வாங்கி, கொண்டாட முதலில் தேர்ந்தெடுப்பது 'ஒரிஜினல் நாராயணா பேர்ல்ஸ்' கடையைத் தான். கைராசி, கண்ணைக் கவரும் டிஸைன்கள், நல்ல தரம், நம்பிக்கை இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம் ''நல்ல நகையைத் தேடி வாங்க... ஒரிஜினல் நாராயணா பேர்ல்ஸுக்கு நம்பி வாங்க'' என்று அழைப்பு விடும் சென்னை தி.நகரில் இருக்கும் 'ஒரிஜினல் நாராயணா பேர்ல்ஸ்' உரிமையாளர் திரு நாராயணாவிடம் பேசினோம்...

''எங்க முத்து பிஸினஸ் என்பது எங்க தாத்தா காலத்துல அதாவது, 1900களிலேயே துவக்கப்பட்டது. எனக்கு என் தாத்தாவின் பெயரை (நாராயணா) சூட்டியதை பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன்.

எங்க தாத்தா 1900கள்லேயே முத்து வியாபாரத்துக்காக பாம்பேல ஒரு ஆஃபீஸ் போட்டிருந்தார். அப்பவே உலகத்தோட எல்லாப் பகுதிகள்ல இருந்தும் முத்து, பவழம், வைரம், வைடூரியம், மாணிக்கம், மரகதம்னு வந்து இறங்கும். அந்தக் காலத்து அரசக் குடும்பங்களுக்கெல்லாம், நல் முத்து கொடுத்து ராஜ குடும்பத்தினர்களிடம் நல் பெயர் எடுத்த எங்க தாத்தாவுக்கு அடுத்தபடியா, அப்பா இந்தப் பிஸினஸ்ல இறங்கினாரு. சின்ன வயசுல பசங்க எல்லாம் பொம்மைகளோட விளையாடுவாங்க. ஆனா, நான் விளையாடியது எல்லாம் முத்துச்சரங்களோடதான். இப்படி வாழ்க்கைல ஒவ்வொரு காலக்கட்டத்திலேயும் என்னோட இரண்டறக் கலந்து விட்டது இந்த முத்து. இந்த முத்து வியாபாரத்துல நான் எத்தனை எத்தனையோ சோதனைகளைச் சந்தித்திருக்கிறேன்.

அது 1969-ம் வருஷம். தனி தெலுங்கானா இயக்கம் ரொம்பத் தீவிரம் அடைஞ்ச சமயம்.



* குடும்பத்தினருடன்...



ஆந்திராவே கொந்தளிச்சிட்டு இருந்தது.

நாங்க கடை வெச்சிருந்தது ஹைதராபாத்ல. ஆந்திராக்காரங்க யாரும் இங்க தெலுங்கானாவுல இருக்கக்கூடாதுன்னு துரத்துறாங்க. தீ வைச்சுக் கொளுத்துறாங்க. எங்களோடது ஹோல்சேல் கடைங்கிறதால, 90 சதவிகிதம் க்ரெடிட் பிஸினஸ்தான். வெளியிலிருந்து எக்கச்சக்கமான பணம் வர வேண்டியிருந்தது. கடையைத் திறக்குறதும் மூடுறதுமா ஒரு வருஷம் பிரச்னை இழுத்தது. 1970ல ஒரேயடியா கடையை மூடி ஆக வேண்டிய கட்டாயம்.

என்ன செய்ய? எட்டு பேர் கொண்ட எங்கக் குடும்பம் ரொம்பக் கஷ்டப்பட்டது. கஷ்டம்னா, வெறுமனே சில வார்த்தைகள்ல அதைச் சொல்லிட முடியாது. நம்பிக்கை மொத்தமும் இழந்து போய், எதிர்காலமே பெரிய இருட்டா தெரிஞ்சது. ஓஹோன்னு வாழ்ந்த குடும்பம். நொடிஞ்சு போய் நின்னோம். ஆனால் விழ்வது தவறில்லை. வீழ்ந்து கிடப்பதுதான் தவறுன்னு புதிய சக்தியோட புறப்பட்டோம்.

ஏக்கரா கணக்குல இருந்த நிலத்துல பாதியை வித்தோம். மீதியில விவசாயம் செஞ்சோம். ஆனா, கைக்கும் வாய்க்கும்தான் சரியா இருந்தது. ஆனாலும், 'அன்னிக்கு சாப்பாட்டுக்காவது வழி இருக்கே'னு எங்களை நாங்களே தேத்திக்கிட்டோம். இந்தச்

> “வீழ்வது தவறில்லை. வீழ்ந்து கிடப்பது தான் தவறுன்னு புதிய சக்தியோட புறப்பட்டோம்!”



திரு. கே.வி. நாராயணா

முத்தல்லவோ!

சமயத்துல எங்களை வழிநடத்திக்கிட்டு இருந்த எங்கக் குலதெய்வமான எங்கப்பாவும் காலமானார். ரொம்பவே தத்தளித்துப் போயிட்டோம்.

கும்மிருட்டுச் சூழும்போது, பயப்பட வேண்டாம்; விரைவிலேயே விடியல் ஒண்ணு கிழக்கிலே உதிக்கும்னு பெரியவங்க சொல்வாங்க இல்லையா? அது தான் எங்களுக்கும் நடந்தது. எங்க வாழ்க்கைக்கு ஒரு விடிவு காலம் வந்தது. புகையிலை ரூபத்துல.

அந்த வருஷம் புகையிலை பயிரிட்டவங்களுக்கு நல்ல லாபம். அடுத்தடுத்து, தொடர்ந்து புகையிலை பயிரிட்டோம். நாலே வருஷத்துல விட்டதைப் பிடிச்சிட்டோம். வித்த இடம் மாதிரி ரெண்டு மடங்கு நிலத்தை வாங்கினோம். திடீர்னு பார்த்தா, நாங்க வாங்கிப் போட்ட நிலத்தோட மதிப்பு உயர ஆரம்பிச்சது. ஒரு ஏக்கர் வெறும் ஆயிரம், ரெண்டாயிரம்னு வாங்கினது... பத்து லட்சம் விலைக்குப் போச்சு. 'கொடுக்கற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக்கிட்டுக் கொடுக்கும்'னு சொல்வாங்களே... அது இதுதானான்னு கடவுளுக்கு நன்றி சொன்னோம்.

கிட்டத்தட்ட பதிமூணு வருஷமா வனவாசம் மாதிரி இருந்த எங்களை வளமா வாழ வெச்சது 1983-வது வருஷம் தான்! அதே வருஷத்துல நானும் பெரிய அண்ணனும் சேர்ந்து முத்து வியாபாரத்தைத் திரும்பவும் தொடங்கினோம்!'' என்று சொன்னவர் முகத்தில்தான் எத்தனை பெருமிதம். அதில் தடைக்கற்களையெல்லாம் படிக்கற்களாக்கி சிகரம் ஏறிவிட்ட களைப்பும், களிப்பும் சேர்ந்தே தெரிந்தது.

ரொம்பப் பெரிய நஷ்டத்தைப் பார்த்துட்டோம். இப்போவாவது, க்ரெடிட் பிஸினஸா இல்லாம, ரெடி கேஷ் வர்ற மாதிரி ஆரம்பிக்கணும்னு முடிவு பண்ணினோம். எல்லா மாவட்டத் தலைநகரங்களுக்கும் போவோம். அங்க ஸ்டார் ஹோட்டல் எதுன்னு பார்த்து அதுல ஹால் புக் பண்ணி, எக்ஸிபிஷன்ஸ் நடத்துவோம். ஸ்டார் ஹோட்டல்ங்கிறதால, ஹைகிளாஸ் கஸ்டமர்ஸ் மட்டும்தான் வருவாங்க. இந்த முத்துக்கள், கற்களோட மதிப்பும் தெரியும் அவங்களுக்கு.



இப்படி எக்ஸிபிஷன்ஸ் போட்டப் போதான், சென்னை எங்களுக்கு ரொம்பவும் பிடிச்சுப் போனது. இங்க முத்தும் பவளமும் நல்லா வாங்கினாங்க. நல்ல டிமாண்ட் இருந்தது. இங்கேயே தங்கி, ஆறு மாசம் ஸ்டடி பண்ணினோம். தொடர்ந்து நல்ல வரவேற்பு இருக்கவே, தி.நகர்ல முதல் கடையைத் தொடங்கினோம்'' என்கிறார்.

''அடுத்தடுத்து ஐந்து கடைகளாக விரிந்த வெற்றியின் ரகசியம் இடைவிடாத உங்களது உழைப்புதானே?'' என்றோம்.

''என்னுடைய உழைப்பு மட்டுமல்ல. இன்ப துன்பம், ஏற்ற இறக்கம், எல்லா சூழலிலும் என் கூடவே இருந்து என்னைத் தாங்கி நின்ற என் மனைவி புஷ்பா, மற்றும் அன்பால் அரவணைக்கும் என் குழந்தைகள் முதல் காரணம். வாடிக்கையாளர்களின் திருப்தி இரண்டாவது காரணம்.

முத்து, கல் நகைகள் வியாபாரம், வியாபாரிக்கும், வாடிக்கையாளர்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கிற தொழில். பெண்கள் மனதார வாழ்த்தி பொருளை வாங்கிட்டு போற தொழில் இதுதான். திருப்தியும், சேவையும் சேர்ந்தாப்ல இருக்கிறதாலதான் கடவுளோட ஆசியும்



இந்தத் தொழில்ல இருக்கு'' என்றார்.

''ஓட்டல் தொழிலிலும் அசத்தறீங்க போலிருக்கே?'' என்றோம்.

''அது ரொம்பத் தற்செயலா தொடங்கினது. என் தங்கையின் கணவரது ஹோட்டல் அது. ஆந்திராவுல இருக்கு. 'ரொம்ப நஷ்டம் ஆகிடுச்சு. வேற யாருக்கும் வித்தா பணம் வருமானு தெரியலை. நீங்க வாங்கினா ஒரு தொகை கிடைக்கும்'னார் தங்கச்சி கணவர்.

'அனுபவம் இல்லாத துறை யாச்சே!'னு ரொம்பத் தயங்கினேன். அருணா ஹோட்டல் அதிபர் காளிதாஸ், ராஜ் பேலஸ் அதிபர் ராஜன் எனக்கு நல்ல நண்பர்கள். அவங்க 'பண்ணிடலாம்'னு தைரியம் கொடுத்தாங்க. 'ராஜ் பேலஸ்'காரர், தன்னோட ஹோட்டலுக்கு இன்டீரியர் பண்ற வரையே வெச்சு சூப்பரா இன்டீரியர் பண்ண வெச்சார். ஆந்திராவுல எனக்கு 25 வருஷமா தெரிஞ்ச நண்பர் ஒருத்தரை ஹோட்டலுக்கு இன்சார்ஜா போட்டேன். அவருக்கு இந்த ஃபீல்ட் பத்தி எதுவும் தெரியாது. படிப்பு கம்மி. ஆனா, இப்ப அவருக்குக் கீழ 30 பேர் இருக்காங்க. அருமையா பிஸினஸ் பண்ணிட்டு இருக்கார்.

வருமானம் வருதோ இல்லையோ... நம்பிக்கையான ஆளு... நம்ம காசை எடுக்க மாட்டார்னுதான் அவரை அந்த இடத்துல உட்கார வெச்சேன். ஆனா, அவரு எனக்கு பிஸினஸ் பண்ணிக் கொடுக்கறார். அவ்ளோதான். நம்பிக்கைதான் வாழ்க்கை'' என்று தன் வெற்றியின் ரகசியத்தைப் பகிர்ந்துகொண்டார்.

''**பொ**துவா, தொழிலதிபர்களுக்கும் ஆன்மிகத்துக்கும் நெருங்கின தொடர்பு இருக்கு. இது எப்படி?''

''ஒருகட்டத்துக்கு மேல போய்ட்டா பணத்துக்கு மரியாதை கிடையாது. இன்னிக்கு என் கையில இருக்குற பணத்தை வெச்சுக்கிட்டே இருக்க முடியாது. நாலு பேருக்குப் பிரிச்சுத் தரத்தான் வேணும். என்கிட்ட இருக்குற சொத்து எதையுமே நான் போகும்போது எடுத்துட்டுப் போக முடியாது. இது புரிஞ்சவங்களுக்கு ஆன்மிகம் மேல நாட்டம் வர்றது இயல்புதான்.

அதிகபட்சமா ஆந்திராவுல என்னோட சொந்த ஊர்ல ஒரு முதியோர் இல்லம் கட்டணும்னு ஆசைப்படுறேன். அதை விடப் பெரிசா வேற எந்த ஆசையும் இல்ல. மனிதன் சாதிக்க வேண்டிய மிகப் பெரிய சாதனை, தானும் மகிழ்ச்சியாக இருந்து, தன்னைச் சுற்றியுள்ளோரையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பதுதான். இரக்கத்தோடு இருப்பதே ஆன்ம திருப்திக்கு வழிவகுக்கும்!'' என்று புன்முறுவலுடன் சொல்லி முடித்த திரு நாராயணன் வார்த்தைகளில்தான் எத்தனை ஜொலிப்பு!

அது நல்முத்துக்களுக்கே உரிய தனிமதிப்பு!

– நளினி சம்பத்குமார்

இதுதானா இந்தியா?




சீரியல் பிரேக்ல
சேனலை மாத்துங்கப்பா
வெள்ளச் சேதமும்
வானிலை நிலவரமும்
என்னாச்சுன்னு பார்ப்போம்!

- எஸ்.கௌரிலக்ஷ்மி,
ஸ்ரீரங்கம்

பின் வ(வி)ளைவுகள்
பயங்கரமாய் இருக்கு(ம்)!

- சுபஸ்ரீ, பழங்காநத்தம்






சம்சாரச் சிக்கலில்
இருந்து விடுபட்டு
மின்சாரச் சிக்கலில்
மாட்டிக் கொண்டது
மாடி வீடு!

- சு.சுப்பிரமணி,
சென்னை

ஹரே மம்தா...
நானும் தொற்ற
ஒரு தம்தா..
செல்ல வேண்டிய
இடம் கோவிந்தா!

- ஆர்.உமா,
நெல்லை



இப்ப நிறைய
ஏ.டி.எம்.
மிஷின்களின்
சேவை ஒரே
குப்பையாப்
போச்சு. அதான்
கண்ணு
அள்ளிட்டுப் போக
வந்தேன்!

-மலர்விழி,
கோவை




ஓ...! இவருதான்
கிரெய்க்
'செப்பல்'லா...?

- ஆர்.பத்மப்ரியா,
ஹூப்ளி



**ரூ.250/- பரிசு பெறும்
பளிச் காமெண்ட்டுகள்.
அசத்திட்டீங்க வாசகர்களே!**



குடைக்குள் லவ்வு மழை
குறையாத ஜொள்ளு மழை!

- எஸ்.பாலாஜி, திருநீலக்குடி





குக்கரி க்வீன்!

குக்கரி தர்பாரில் கலந்துக் கொள்ள சமையல் ராணிகளை அழைக்கிறோம். ஒரிஜினல் சமையல் குறிப்புகளைத் தெளிவாக எழுதி, கீழே உள்ள கூப்பனையும் நிரப்பி அனுப்புங்க. தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து ரெஸிபிகளுக்கு தலா ரூ. 300/- பரிசு!

குக்கரி க்வீன் சமையல் போட்டி (நவம்பர்)

டீனேஜ் பார்ட்டி ஸ்பெஷல்!

பெயர்:...

முகவரி:...

....

....

கடைசித் தேதி: **25.11.2010**

இந்த இதழில் 'ஆஹா 50!' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள டிப்ஸ்களைப் படியுங்கள். மிகச் சிறந்த ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதி அனுப்புங்கள். உங்கள் தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும் பொருந்தினால் குலுக்கல் முறையில் ரூ.150/- பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு மட்டுமல்ல. அந்தக் குறிப்பை எழுதியவருக்கும் ரூ.150/- பரிசு! 'நவம்பர் ஆஹா பரிசு' என்று மறக்காமல் குறிப்பிட்டு பக்க எண், வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்கள்.

கடைசித் தேதி: **15.11.2010**



ஆஹா பரிசு!

அடிச்சாங்க பரிசு!

அக்டோபர் (2010) ஆஹா பரிசுப் போட்டியில் ''தானியங்கி படிகளுக்குப் பதிலாக, சாய்வாக தானியங்கித்தளம் அமைத்தால் (ஷாப்பிங் மால் சினிமா ஹால்) முதல், இரண்டாம் தளங்களுக்கு பயமில்லாமல் போகலாம்'' என்ற குறிப்பை எழுதி ரூ.150/- பரிசு பெறுகிறார் மல்லிகாதேவி பெங்களூரு. அதே டிப்ஸை தேர்வு செய்த பல வாசகியரில் குலுக்கல் முறையில் ரூ.150 பரிசு பெறுகிறார் எம். உமயபார்வதி கன்யாகுமரி.



பாத்திரங்களைக் கழுவப் பயன்படுத்தும் சோப், லிக்விட், சோப் பவுடர் போன்றவற்றிலுள்ள வேதிப் பொருட்கள் குழந்தைகளிடம் வயிற்றுக்கோளாறுகளை ஏற்படுத்தவல்லது. அதனால் பாத்திரங்களை சோப் முழுவதும் சுத்தமாகும்படி கழுவ வேண்டியது மிகவும் அவசியம்.

- விஜயலக்ஷ்மி, பெங்களூர்

தலைவலி அதிகமாக இருக்கும்போது ஒரு பென்சிலை எடுத்து மேல்வரிசை பற்களுக்கும், கீழ் வரிசை பற்களுக்கும் இடையில் வைத்து பிடித்துக் கொண்டால் தலைவலி குறையும். பென்சிலை அழுத்த வேண்டாம்.

- வி.பத்மாவதி, அரியலூர்

கிராம்பு, கடுக்காய், இலவங்கப் பட்டை தலா பத்து கிராம் எடுத்து, வறுத்துப் பொடித்து ஒரு டீஸ்பூன் பொடிக்கு ஒரு டீஸ்பூன் நெய் கலந்து சாப் பிட சீதபேதி குணமாகும்.

- செ.கலைவாணி, ஆலந்தூர், சென்னை-16



இவை எல்லாமே ஆஹா 50 தான்!

பச்சையாக இருக்கும் ஒருவகைப் பூச்சி நம்மீது பட்டாலோ, நம்மையும் அறியாமல் தொட்டாலோ அருவருக்கத்தக்க ஒரு நாற்றம் அடிக்கும், அதைப் போக்க சிறிது விபூதியை எடுத்து தடவிக் கொண்டால் போதும். நாற்றம் மறைந்து விடும்.

-எஸ்.லோகநாயகி, ஈரோடு

நன்றாகக் காய்ச்சிய சூடான பாலில் சுத்தம் செய்த அரிசி அவலைப் போட்டு ஊறவிடவும். வெல்லத்தைப் பாகு வைத்து, ஏலப் பொடி, வாழைப் பழத் துண்டுகளையும் சேர்க்கவும். ருசியான பால் அவல் தயார்!


- எம்.பானுமதி, திருச்சி-8

அசிடிட்டிக்கு உண்டான மாத்திரை, மற்றும் ஜெலுசில், டைஜின் போன்ற மருந்து மாத்திரைகளை, சாப்பிடும் முன் அரை மணி நேரத்துக்கு முன்பே சாப்பிட வேண்டும். அப்போதுதான் காலி வயிற்றில் மருந்து ஒரு கோட்டிங் கொடுக்கும்.

- எஸ்.ரமாமணி, சென்னை-49

பெரிய மால்களில் வழுவழுப்பான கிரானைட், மார்பிள் தரைகளுக்கு ஓரத்திலோ, நடுவிலோ சொரசொரப்பான டைல்ஸ்கள் பதித்திருந்தால், வயதானவர்கள் நடக்க வசதியாக இருக்கும்.

- மல்லிகா தேவி, பெங்களூரு


vanessa
வழங்கும்
அப்பீல்
V-Star
vanessa



படிப்பு என்னவோ வெறும் ஆறாம் வகுப்பு மட்டும்தான்! ஆனால், ஒரு குடும்பத் தலைவியாகவும், பிஸினஸ் பெண்மணியாகவும் 'சக்தி மசாலா' சாந்தி துரைசாமி செய்துள்ள சாதனைகளும், தேசிய அளவில் அவர் பெற்றுள்ள விருதுகளும் பிரமிக்க வைக்கின்றன. சமீபத்தில் கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், இவருக்கு வழங்கிய கௌரவ டாக்டர் பட்டம், சாந்தி துரைசாமியின் மகுடத்தில் இன்னுமொரு வைரக்கல்!

விருது பெண்மணி

பச்சைக் கிளிகள்

ஈரோடு, மாமரத்துப் பாளையம் பிர தான சாலையில் பயணிக்கும்போதே, சக்தி மசாலாவின் இதமான வாசனை நம்மைச் சூழ்கிறது. சக்தி மசாலா தொழிற்சாலையை ஒட்டியபடி இருக்கும். 'சக்தி தேவி மறுவாழ்வு மையம்', மருத்துவமனை, மனவளர்ச்சி குன்றியோர் சிறப்புப் பயிற்சிப் பள்ளி போன்றவை கண்ணில்படுகின்றன.

''வாங்க!'' என்று நமது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு, அன்புடன் அழைக் கிறார் சாந்தி துரைசாமி.

இவரா...? ஆண்டு தோறும் நானூறு கோடி ரூபாய்க்கு பிஸினஸ் செய் யும் பெண்மணி?

ஒரு அலட்டல் இல்லை! பந்தா இல்லை! எல்லோரையும் 'ஏங் கண்ணு!' என்றே அன்பாக விளிக்கிறார். ஒவ்வொரு கேள்விக்கும் கனகச்சிதமாக, கபடமில்லாத பதில்கள் வருகின்றன.

''ஏன் மாமா... எப்படி மாமா?'' என்று கணவர் துரைசாமியைக் கலந்து ஆலோசித்தே பதிலளிக்கிறார்.



அனுராதா சேகர்

அவருடைய அழகான வார்த்தை களின் படியே...

''விவசாயப் பின்னணி கொண்ட குடும்பம் எங் களுடையது. எங்கப்பா கோவிந்தசாமி கவுண்டர், ஈரோட்டுல சின்னதா ஒரு ஹோட்டல் வெச்சிருந்தாரு. எங்க அம்மா அம்மணியம்மாள்தான், டிபன் கடையோட ஃபுல் இன்சார்ஜ். காலையில நாலு மணிக்கு எழுந்தாங்கன்னா, கடையை அடைக்க இரவு பதினொரு மணி ஆயிரும்.

நான், ஈரோட்டிலிருக்குற கலைமகள் பள்ளியில் படிச்சேன். எப்பவும் ஃபர்ஸ்ட் ரேங்க்தான். பேச்சுப் போட்டி, திருக்குறள் போட்டின்னு எல்லாத்துலயும் ஜெயிச்சுடு வேன். ஆனால் குடும்பச் சூழ்நிலையால மேற்கொண்டு படிக்க முடியலை. வீட் டைக் கவனிக்கவும், என் தம்பி மற் றும் அக்காவோட குழந்தையைப்

தோளோடு...



பார்த்துக்கவும் ஆள் வேண்டியிருந்தது. அத னால, ஆறாங் கிளாஸோட நிறுத்திட்டாங்க.

காலையில் அஞ்சு மணிக்கு எழுந்தா, வீட்டு வேலைகளே சரியா இருக்கும். எனக் குப் பதினாலு வயசு ஆனதும் கல்யாணப் பேச்சு எழுந்துச்சு. திடீர்னு ஒரு நாள், எங்கப்பா கையில கொஞ்சம் பூவோடு வந்தாரு. ''உன்னைப் பொண்ணு பார்க்க வர்றாங்கம்மா!''ன்னாரு... பெரியம்மாவும் அத்தையும் வந்து புடைவை கட்டி விட் டாங்க. பெண் பார்க்கும் படலம் நடந்தது. நான் மாப்பிள்ளையை கடைசி வரை பார்க்கவேயில்லை. அந்த வயதில் எனக்கு அதெல்லாம் தெரியவு மில்லை.



● தாய் - தந்தை



● மாமியார் - மாமனார்

''மாப்பிள்ளை பேரு துரைசாமி. பி.ஏ. படிச்சிருக் காரு. போலிஸ் உத்யோகத் துக்கு முயற்சி பண் ணிக்கிட்டிருக்காரு. நான்கு ஆண்கள், இரண்டு பெண் கள்னு எல்லோரும் கூட்டுக் குடும்பமா இருக்காங்க!'' போன்ற விவரங்கள் மட்டும்தான் தெரியும். எங்க வீட்டுல நான் பெரும்பாலும் தனிமை யிலதான் இருந்தேன். துணைக்கு பத்திரிகைகளும், லக்ஷ்மி, சிவ சங்கரி போன்றவர்களின் நாவல்களும் மட்டுமே. அதனால பெரிய குடும்பத்துல வாழ்க்கைப்படப் போறோம்; எப்பவும் ஆளும் பேச்சுமா ஜாலியா இருக்கும்னு தோணுச்சு!''

சாந்தியின் பேச்சில் இங்கு ஒரு குட்டி ப்ரேக் போட்டு இடையில் புகுந்தார் துரை சாமி, ''எங்கக் கல்யாணத்துக்குச் சீதனமா ஒரு ஐயாயிரம் ரூபாய் தர்றதா ஒரு பேச்சு இருந்தது. இடையில, அந்தப் பணத்தைத் தர முடியாத நிலை ஏற்படவே, இந்தக் கல் யாணமே டிராப் ஆயிடுமோங்கிற சூழ்நிலை ஏற்பட்டுச்சு. அப்போ, ''முடிஞ்சா அந்தப் பொண்ணைக் கட்டி வையுங்க; இல்லாட்டி கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்''னு உறுதியா சொல்லிட்டேன் என்றவர், ''நான் இவங்களைப் பார்த்ததில்லை. ஆனா என் னோட நண்பர்கள் சிலர் 'ஒட்டல்காரர் பொண்ணு. நல்ல சிவப்பா அழகா இருக் கும்னு சொல்லியிருந்தாங்க!'' என்று ரக சியத்தைப் போட்டு உடைத்தார்.

அப்போது சாந்தியின் முகத்தைப் பார்க்கணுமே செம்பருத்திப் பூ போல சிவந்து விட்டது. நாணத் தோடு தொடர்ந்தார்...

''**பெ**ரியார் மன்றத் துல வெச்சு, எங்கக் கல் யாணமாச்சு. வேளைக்கு மூணு படி சாதம் வடிக் கணும். மாவு ஆட்டுறதுல இருந்து, மளிகைச் சாமான்களைப் புடைத்து சுத்தமாக்குறது வரை எல்லா வேலைகளையும் வீட்டுப் பெண்கள் செய் வோம். குறிப்பா, எங்க மாமியார் செல்லம்மாள் இருக்காங்களே, அவங்க ஒரு நிமிஷம் அசந்து போய் உட்கார மாட்டாங்க. கடுமை யான உழைப்பாளி. நாங்க மொத்தம் நாலு மருமகள்ங்க. ஒரு தடவை கூட, அவங்க யாரையும் கடிஞ்சு பேசுனதேயில்ல. எங் களை செகண்ட் ஷோ சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போவாங்க.

எங்க மாமனார், சென்னிமலை கவுண் டர், எங்கக்கிட்ட சொந்தப் பொண்ணுங்க மாதிரி பாசமா இருப்பாரு. வீட்டுச் செல வுக்கு, மாமனார் பாக்கெட்டிலிருந்து கா எடுக்கும் அளவுக்குச் சுதந்திரம் கொடு

திருந்தார். எங்களைச் சில சமயம் சந்தைக்குக் கூட்டிக்கிட்டுப் போய், பூரி, தேங்காய் பன், தயிர் வடை, முறுக்கு எல்லாம் வாங்கித் தருவார். அந்த வயசுல, எங்களுக்கு அதெல்லாம் கொண்டாட்டமா இருக்கும்.

ஓரகத்திகள், நாத்தனார்கள், மைத்துனர்கள் எல்லாமே நல்ல ஃப்ரெண்ட்ஸ் போல பழகுவோம். புளியங்காய் பறிச்சு, உப்பு, காரம் வெச்சு இடிச்சு, லாலிபாப் போல செஞ்சு சாப்பிடுவோம். ஜவ்வு மிட்டாயை வீட்டுலயே செஞ்சு சுவைப்போம். ஒரு நல்ல நாள், பண்டிகைன்னா, பேச்சும் பலகாரமுமா வீடே மணக்கும். பெரிய சௌகரியங்கன்னு எதுவும் இல்லாட்டாலும், கூட்டுக் குடும்பமா நிறைவா வாழ்ந்தோம். இப்பவும் எனக்கு, 'பச்சைக் கிளிகள் தோளோடு', 'ஆனந்தக் குயில்கள் பாடும்' 'முத்துக்கு முத்தாக' மாதிரியான பாடல்களைக் கேட்டால் அழுகை வந்துடும்.


ஆனால், இந்தக் காலத்துப் பெண்களுக்குக் கூட்டுக் குடும்பத்தில் உள்ள அன்பும், புரிதலும் எவ்வளவு அருமையானதுன்னு தெரியலை. தனிக்குடித்தனம் போறாங்க; கொஞ்ச நாள்லயே சலிச்சுப் போய், கருத்து வேறுபாடுகள் வந்து, எலியும் பூனையுமா வாழ்றாங்க!'' என்று பெருமூச்சு விட்டார் சாந்தி துரைசாமி.

''உங்கக் கணவர் போலிஸ் உத்யோகத்துக்கு முயற்சி செய்தாரே... அது என்ன ஆச்சு?''

''ஒரே ஒரு பாயின்ட்டுல போயிடுச்சு. அதனால, குடும்ப பிஸினஸுக்கே வந்துட்டாரு. வெறும் பத்தாயிரம் ரூபாய் மூலதனத்தோட, முந்நூறு சதுர அடியில மஞ்சள் தூள் அரைச்சு விற்பனை செய்யும் தொழிலை ஆரம்பிச்சாரு. முன்னேறணுங்கிற துடிப்பு, உழைக்கிற ஆர்வம் இரண்டும் அவர்கிட்டே நிறையவே இருந்தது. அவருடைய நல்ல முயற்சிகளுக்கெல்லாம் தோள் கொடுத்து உதவுற புரிதல் எனக்கு இருந்தது. எங்கக் குலதெய்வமான சீதேவி அம்மன் சக்தியின் வடிவங்கிறதால 'சக்தி மசாலா'ன்னு ஆரம்பிச்சோம்.



மகன் குடும்பம்



மகள் குடும்பம்

''முதல்ல, மஞ்சள் தூளை அரைச்சு, பாக்கெட்டுகள்ல அடைச்சு விற்பனை செஞ்சோம். தரமான பொருளா இருக்கவே, நல்ல வரவேற்பு கிடைச்சது. அப்புறம் மிளகாய்த் தூள், தனியா தூள்னு மெள்ள ஒவ்வொண்ணா ஆரம்பிச்சதுல, இன்னிக்கு நாற்பதுக்கும் மேற்பட்ட தயாரிப்புகள்.. நானூறு கோடி டர்ன் ஓவர் உள்ள வியாபாரமா உருவாகியிருக்கு.''

''இந்த சாதனையில உங்களுக்கு உறுதுணையா இருந்தவங்க, இருக்கறவங்க யார் யார்?''

''முதல்ல என்னுடைய அப்பா. ஒழுக்கத்தையும், கடின உழைப்பையும் சொல்லிக் கொடுத்த ஆசான் அவர்தான். என்னுடைய மாமனார் - அவர் எங்களுக்குக் கிடைத்த பொக்கிஷம்! அவருடைய ஆசியால்தான் நிறைவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்புறம் என் கணவர். குழந்தைத்தனமான என்னுடைய குணத்தை அப்படியே ஏத்துக்கிட்டு, சம உரிமையோடு நடத்தும் பரந்த மனப்பான்மை உள்ளவர். புதிய பிஸினெஸ் ஐடியாக்களின் ஊற்றுக்கண் அவர்தான். அடுத்தபடியா, என் தம்பி வேணுகோபால்.

எங்கக் குடும்பத்தின் இரும்புத்தூண் அவன். எங்க வளர்ச்சிக்காக அவன்பட்ட பாடு கொஞ்சம் நஞ்சமல்ல.

அதற்கடுத்து, என்னுடைய மகள் சக்தி தேவி, மருமகன் இளங்கோ, மகன் செந்தில் குமார், மருமகள் தீபா செந்தில்குமார். எங்களுடைய முயற்சிகளை அடுத்தகட்டத் துக்கு எடுத்துச் செல்லும் இளையதலை முறையினர். இதுதவிர, எங்களுடைய உறவு கள், நண்பர்கள், திறமையான முகவர்கள், விசுவாசமான ஊழியர்கள், ஊக்கமும் ஆக்க மும் தரும் எண்ணற்ற வாடிக்கையாளர்கள், குறிப்பாக இல்லத்தரசிகள் என எல்லாரை யுமே இந்தத் தருணத்தில் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.''

பெண்களுக்கு நீங்க சொல்ல விரும்புறது என்ன?

''பெண்ணாகப் பிறப்பதற்கு மாதவம் செய்யணும்னு சொல் றாங்களே... அது நிஜம் தான்! ஒரு மகளா, சகோதரியா, மனை வியா, மகளா, தாயா எந்தப் பாத்திரத்தை நீங்கத் தாங்கினாலும், அதை முழு மன சோட திருப்தியா வாழணும். அதுக்கு உண் டான தகுதிகளை வளர்த்துக்கணும். அப்பத் தான் வீடும், நாடும் சுபிட்சமா இருக்கும்.

பெண்களுக்கு இப்பல்லாம் எல்லாத்துக் கும் ஒரே சலிப்பு! தானும் சந்தோஷமா இல்லாம, மத்தவங்களையும் வெறுப்படிக்க றாங்க. இந்த மனப்பாங்கை மாத்திக்கணும். ரசனை, மகிழ்ச்சி, மனநிறைவு எல்லாமே மனசு சம்பந்தப்பட்டது. அது வெளியில கிடைக்காது. என்ன கிடைக்குமோ அதைப் பகிர்ந்துண்டு வாழறப்போ கிடைக்குற மகிழ்ச்சியே தனி!

குடும்பம்னா, ஏதாவது சிக்கல் இருக்கத் தான் செய்யும். கொஞ்சம் விட்டுக் கொடுத்து, சகிப்புத்தன்மையோட அணு கினா, நாம்பதான் ஜெயிப்போம். குடும் பம்னா, தன் கணவன், தன் குழந்தைகள் மட்டுமேன்னு இருக்காமல், எல்லா உறவு களையும் பேண, பெண்கள் கற்றுக் கொண்டுவிட்டால், உண்மையா சொல் றேங்க... சொர்க்கம் வேறெங்கியுமில்ல... நம்ம வீட்டுலதான்!

எங்க ஊருல தை மாசம், பௌர்ணமி வளர்பிறையில ஊரே கூடி நிலாச்சோறு சாப்பிடுவோம். அப்ப கிடைச்ச அதே சந் தோஷத்தை, நான் என் பேரப் பிள்ளைகளின் மழலைப் பேச்சைக் கேட்கும்போது அனு பவிக்கிறேன். அவங் களுடைய கிறுக்கல் கள் எனக்கு ஆயிரம் ஓவியங்களுக்கு ஈடாக வசீகரிக்கின்றன. அத னால எங்க வீட்டை பெயிண்ட் கூட அடிக் காம வெச்சுருக்கேன்.



டாக்டர் பட்டம் பெறுகிறார்...


பெண்களின் சுய முன்னேற்றங்கிறது அவங்களோட கையிலதான் உள்ளது. முதல்ல குடும்ப நலன், அப்புறம் சமூக நலன் இரண்டை யும் கவனத்துல கொண்டு இயங்கும் பெண் கள்தான் புதிய சக்திகள். அந்தச் சக்திதான் ஜகத்தை ஆளும் மகா சக்தி. அது ஒவ் வொரு பெண்ணுடனும் கூடவே பிறந்துள் ளது. வீட்டைத் திறம்பட நிர்வகிக்கும் ஒரு பெண்ணால், ஒரு நிர்வாகத்தையும், நாட் டையும் கூட நிர்வாகிக்க முடியும். தன்னம் பிக்கை, விடாமுயற்சி, உழைப்பு போன்ற தகுதிகளை வளர்த்துக்கிட்டா, நம்மால எந்தத் துறையிலேயும் சாதிக்க முடியும்'' என்றார் உறுதியான குரலில்!

சாந்தி துரைசாமியின் வெற்றி ரகசியம் புரிந்ததா? ●



கழுத்து, இடுப்பு, முதுகு, மூட்டுனு
எந்த வலியாக இருந்தாலும் உபயோகியுங்கள்
ORTHOCURE
ஆர்த்தோக்யூர்
LINIMENT & TABLETS
100%
ஆயுர்வேதம்
பக்க விளைவுகள்
இல்லாதது
ஆயில் மற்றும் மாத்திரை
இது ரொம்ப
Powerful
அதிவேக பலனுக்கு
மாத்திரை மற்றும்
ஆயில் சேர்த்து
உபயோகிக்கவும்
Marketed by: KUREWEL PHARMA, Chennai - 600 083. PH: 2489 3013
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

நந்தினிக்கு நாற்பத்து இரண்டு வயது. மிகவும் அமைதியான குடும்பப் பாங்கான தோற்றம். புன்னகை தவழும் முகம். இருபது வயதில் அவருக்குத் திருமணம் நடந்தது. மிகவும் நல்ல கணவர் அமைந்தார். நந்தினியை எல்லா விதத்திலும் மிகவும் நன்றாக கவனித்துக் கொண்டார். குறை என்றால் என்ன வென்றே தெரியாதபடி மிகவும் நிறை வான வாழ்க்கையை அவளுக்கு உருவாக் கித் தந்தார்.



ஒரு சம்பவம் நிகழும்பொழுது அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நிச்சயம் ஒரு பாதிப்பு இருக்கும். ஆனால், சில நேரங்களில் அந்தச் சம்பவத்தின் பாதிப்பைவிட மற்றவர்களின் நடவடிக்கை அதிக பாதிப்பை ஏற்படுத்துவதும் உண்டு. நந்தினியின் விஷயத்தில் அதுதான் நேர்ந்தது.

மணி மணியாக இரண்டு பிள்ளை களும் பிறந்தனர். நந்தினியும் பிள்ளை களும், கணவரும்தான் உலகம் என்று தன் வாழ்க்கையை மனநிறைவுடன் வாழ்ந்து வந்தார். அந்தச் சமயத்தில் நான் இரண்டு வருடங்களுக்கு முன் எதிர்பாராத விதமாக திடீரென்று ஒருநாள் மாரடைப்பு ஏற்பட்டு அவர் கணவர் காலமாகிவிட்டார். நந்தினியின் வாழ்வு அப்படியே ஸ்தம்பித் துப் போனது. கிட்டத்தட்ட ஒரு மாதம் பிரமைபிடித்தாற் போல் அமர்ந்து விட் டார். அவரது தாய் வீட்டிலும் சரி, மாமி யார் வீட்டிலும் சரி யாரும் அவரது துயரத் தைப் பகிர்ந்துகொள்ளுமளவுக்கு இல்லை. எல்லோரும் வந்தார்கள். வருத் தப்பட்டார்கள். சடங்குகள் முடிந்ததும் கிளம்பி விட்டார்கள். நந்தினியும் அவ ளது பிள்ளைகளும் வீட்டில் தனியே இருந்தனர்.

இதோ அவரே சொல்கிறார்.

''ஒரு மாதம் எனக்கு ஒண்ணுமே புரி யலை. என் கணவர் நடத்தி வந்த கடையை, ஊழியர்கள் ஓரளவுக்குப் பார்த் துக்கிட்டாங்க. ஆனா, அவங்களும் தலை மைப் பொறுப்பில் ஆளின்றித் திணறுவது எனக்குப் புரிஞ்சது. என் துக்கத்தைப் பார்த்து என் பிள்ளைகள் உள்ளூரக் கலங்குவதும் என்னை வேதனையடையச் செய்தது. என்னை நானே தேத்திக்கிட்டுக் கடையை கவனிக்க ஆரம்பிச்சேன். நிறைய கத்துக்கிட்டேன்.

''மூணே மாசத்துல மறுபடியும் வியா பாரம் சீராக ஓடத் துவங்கிச்சு. பிள்ளை



டாக்டர் விஜயலக்ஷ்மி பந்தையன்

களும் இன்னிக்குக் கல்லூரியில படிக்கிறாங்க. என் கணவரோட மறைவு எனக்கு மிகப் பெரிய துக்கத்தை ஏற்படுத்தியது உண்மைதான். ஆனா, நான் அடிக்கடி நினைச்சுக்குவேன். இருபது வருடங்கள் அவருடன் நான் வாழ்ந்தது மிகவும் மகிழ்ச்சியான வாழ்க்கை. அந்த நினைவுகள் என் மனத்துக்கு இப்பவும் ஒரு நிறைவைக் கொடுக்கின்றன.

''என் மனம் இப்போது எந்தவித சலனமுமின்றி மிகவும் அமைதியாயிருக்கு. வாழ்க்கையும் சீராகப் போய்க் கொண்டிருக்கு.''

''நல்லது. அப்படியானால் உங்க பிரச்னைதான் என்ன?''

''பிரச்னை என்னிடம்தானா அல்லது மற்றவர்களிடமா என்பது எனக்கே புரியவில்லை''. இப்பொழுதுதான் அவரது கண்களில் சற்று கலக்கம் தெரிந்தது.

''எனது உறவினர்கள் அல்லது தெரிந்தவர்கள் யார் என்னைப் பார்த்தாலும் ''எப்படி இருக்கே?''ன்னு கேட்கிறாங்க. அப்ப, ''நான் நல்லா இருக்கேன்''னு உண்மையைச் சொன்னால், உடனே அவங்க முகபாவமும் குரலும் மாறிடுது. ''அப்படியா? வேறு திருமணம் செய்து கொள்ளப் போறியா''ன்னு சந்தேகமா கேட்கறாங்க. அப்படி எதுவும் இல்லைன்னு நான் எடுத்துச் சொன்னாலும் அவங்க நம்பறதா இல்லை. என்னைக் கிண்டலா பார்க்கிறாங்க.

''இப்ப எனக்கு ஒரு குழப்பமே வந்துடுச்சு. கணவரை இழந்தபிறகும் நான் மகிழ்ச்சியா, நிம்மதியா வாழறது தப்பா? இல்ல, அதை வெளிப்படையா சொல்றதுதான் தப்பா? நான் எப்படி நடந்துக்கணும்? இந்தக் குழப்பத்தால எனக்கு யார்கிட்டயும் பேசவே பயமாயிருக்கு. எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்துக்க பிடிக்கலை'' என்று பரிதவித்தார்.

''நந்தினி, நீங்க தேர்ந்தெடுத்த வழிதான் ரொம்ப சரி! கணவர் இறந்தபிறகு தன்னிரக்கத்திலேயே மூழ்கி வாழ்க்கையை வீணாக்காம, உங்க தன்னம்பிக்கையை வளர்த்துக்கிட்டீங்க. அவர் விட்டுச் சென்ற தொழிலையும் நல்ல முறையில கவனிக்கிறீங்க. பிள்ளைகளையும் நல்லபடியா வளர்த்து வர்றீங்க. எல்லாவற்றுக்கும் மேலாக மனநிம்மதியுடன் வாழறீங்க. இவை எல்லாமே ரொம்பவே பாராட்டப்பட வேண்டிய விஷயங்கள்தான்.

''ஆனா, உங்க மனசுல ஒரே ஒரு சிறிய பலவீனம் இருந்திருக்கு. மத்தவங்க நம்மைப் பத்தி என்ன நினைக்கிறாங்களோ? அவர்களுக்குத் தகுந்தாற்போல் நாம பேசணுமேங்கிற சிந்தனைதான் அது. மத்தவங்க பல கேள்விகள் கேட்பது உங்கள் நிலையை அவங்க புரிஞ்சுக்கலை அல்லது அவங்களால ஜீரணிக்க முடிய

மைண்ட் பவர்

ஆத்மமனம்

ரூ.150/- பரிசு பெறும் பெட்டிக் கதை

சில்லறை!

சுமதி வழக்கமாக ஊறுகாய், வடாம் வாங்கும் மாமியின் வீட்டுக்குத் தோழி கீதாவோடு வந்தாள். ''மாமி! ரெண்டு பாக்கெட் அரிசி அப்பளமும், ஒரு பாக்கெட் கருவடாமும் தாங்கோ'' என்றாள்.

''இதோ தர்றேன்ம்மா... கடலை உருண்டை செஞ்சேன். உன் பொண்ணு மைதிலிக்குப் பிடிக்குமே? நாலு தர்றேன், குழந்தைக்குக் கொண்டு போ'' என்றபடி அவள் கேட்டவற்றைக் கொடுத்தாள். சுமதி ஆயிரம் ரூபாய் நோட்டைக் கொடுத்தாள்.



''சில்லறை இல்லையே சுமதி!''

''பரவாயில்லை மாமி! அடுத்த முறை கழிச்சுக்கலாம்!'' என்றபடி கிளம்பினாள்.

வெளியே வந்ததும், ''சுமதி, ஐம்பது ரூபாய் இப்பத்தானே கடைல சேஞ்ச் வாங்குனே; அப்புறம் ஏன் மாமிகிட்டே அப்படிச் சொன்னே?''

''கீதா, அந்த மாமி ரொம்பக் கஷ்டப்படறவங்க. ஆனால் கடன் வாங்காம உழைச்சுச் சாப்பிடணும்ங்கிறதுல திடமா இருக்காங்க. அவங்க பொண்ணு என் மக கிளாஸ்தான். அவ இன்னும் ஃபீஸ் கட்டலையாம், என் பொண்ணு சொன்னா; நான் உதவின்னு தந்தாலோ, கடன்னு கொடுத்தாலோ அவங்க வாங்க மாட்டாங்க; அதான் இப்படிக் கொடுத்தேன்'' என்றாள் சுமதி.

தோழியைப் பெருமையாகப் பார்த்தாள் கீதா.

- ஆர்.பிருந்தா இரமணி, பெங்களூரு

லைங்கிறதையே காட்டுது. இது அவங்களோட அறியாமைதான். அதை நினைச்சு நீங்க குழப்பமடையறது தேவையற்றது. அந்த நிலையைத் தாண்டிட்டீங்கன்னா உங்களுக்குப் பிரச்னையே இல்லை.''

''உண்மைதான். எனக்கும் அந்த பலவீனம் புரியுது. ஆனா, அந்த அளவுக்கு என் மனசை நான் எப்படி பலப்படுத்திக் கொள்வது?''

''அதற்கு நீங்க ஆல்ஃபா தியானம் பழகணும். ஆல்ஃபா நிலையில் உங்க ஆழ்மனம் திறந்திருக்கும். அப்ப, உங்களுடனேயே நீங்க பேசிக் கொள்ளலாம். உங்களுக்கு வேண்டிய மாற்றத்தை அங்கு வெகு சுலபமாக நீங்க உருவாக்கிக்கலாம்!''

நந்தினி ஆல்ஃபா மைண்ட் பவர் வகுப்பில் கலந்துகொண்டார். தினமும் தன் ஆழ்மனத்துடன் பேசி வந்தார்.

சில மாதங்கள் கழித்து நந்தினியைச் சந்தித்தேன். ''நீங்க சொன்னது எவ்வளவு உண்மை? ஆல்ஃபா தியானம் மூலம் என் மனசுல இருந்த சலனமும் மறைஞ்சுடுச்சு. இன்னிக்கு நான் உண்மையாவே மனநிறைவுடன் மகிழ்ச்சியாயிருக்கிறேன்!'' அவர் கண்களிலேயே அந்த மகிழ்ச்சி பளிச்சிட்டது.

அடுத்தவர்களின் எண்ணங்கள் நம்மை பாதிக்காத அளவுக்கு நம் மனத்தை பலப்படுத்திக்கொண்டு விட்டோமானால் தேவையற்ற காயங்களும் ரணங்களும் காணாமல் போகும். நம் வாழ்க்கை மிகத் தெளிவாக முன்னேறிச் செல்லும்.

(ஆழ்மனம் தொடரும்)


SOWBAGHYA®
www.sowbaghya.com
தொடத்தொட ஆசை...
சுடச்சுட தோசை!
இலவசம்*!
நான்- ஸ்டிக் தவா
நீங்கள் வாங்கும் சௌபாக்யா வெட் கிரைண்டர், இண்டக்ஷன் ஸ்டவ் அல்லது எலக்ட்ரிக் ரைஸ் குக்கருடன் நான்– ஸ்டிக் தவா இலவசம்*.
ஞாயிறு கடை உண்டு.
வெட் கிரைண்டர்
இண்டக்ஷன் ஸ்டவ்
எலக்ட்ரிக் ரைஸ் குக்கர்
32 A North Usman Road, T.Nagar, Chennai - 17 Ph:044-28341766 / 28342908
13/1 Sri Devi Apt, Lakshmikanthan Street, Pondy Bazzar, T.Nagar, Chennai -17 Ph: 24350142
5, Hasthinapuram Main Road, Chrompet, Chennai- 44 Ph:22234420
314,Perundurai Rd, Erode-638011 Ph:0424 2269965/ 2260245
1254, Mettur Rd, (E.V.N.) Rd, Erode-638011 Ph:0424 2224499
Dubai
M/s Hadi Enterprises
PO Box NO: 5833
Dubai Ph: 04 3470310
USA Ramraj Corp
1046 East El Camino Real Sunnyvale, CA 94087, USA
ph: 1-408-401-2471
e-mail: info@eastwestusastore.com url: www.eastwestusastore.com
Singapore
M/s Anacone Private Limited
128 Dunlop Street
Singapore 209447 Ph: 063341566



தேங்காய் அரைத்த குழம்பு

வெண்டை, பூசணி, சௌசௌ, முருங் கைக்காய் இவற்றுள் ஏதேனும் ஒன்றை உபயோகிக்கலாம். காய்த் துண்டுகளைப் புளியில் வேகவைத்துக் கொள்ளவும். சிவப்பு மிளகாய், உளுத்தம் பருப்பு, வெந்தயம் இவற்றை சிவக்க வறுத்து, தேங்காயுடன் சேர்த்து அரைத்து வெந்த காயுடன் கலக்கவும். கடுகு, கறிவேப்பிலை தாளித் துக் கொட்டவும். (குழம்பை மிக அதிகமாகக் கொதிக்க வைக்க வேண்டாம்)

துவரம் பருப்பு இல்லாமல்
சூப்பர் குழம்புகள்!

புளிசேரி

தேங்காயுடன் பச்சைமிளகாய், சிறு துண்டு இஞ்சி, சீரகம் சேர்த்து வெண்ணெய் போல் அரைத்து புளித்த மோரில் கலக்கவும். பூசணி அல்லது வெண் டைக்காய்த் துண்டுகளை உப்பு சேர்த்து வேகவைத்து, ஆறிய பின் அரைத்து விழுதைக் கலக்கவும். சாப் பிடுவதற்கு சற்று முன்பாக, குறைந்த சூட்டில், பொங்கும் வரை வைத்து இறக்கவும். (கொதிக்க வைத்தால் மோர் பிரிந்து விடும்)



குறிப்பு: இஞ்சி சேர்த்தும் சேர்க்காமலும் செய்யலாம். சளி, ஜுரம் உள்ள போது தயிர் சேர்க்கக் கூடாது. சாதத்தில் புளிசேரியைச் சேர்த்துச் சாப்பிடலாம்.

புளிக் குழம்பு

பூசணி அல்லது பரங்கித் துண்டுகளை உப்பு, மஞ்சள் பொடி சேர்த்து வேக வைக்கவும். சாம்பார் பொடியைச் சேர்த்து நன்கு கொதித்தபின் பொரி கடலைமாவு சற்று நீரில் கரைத்து, குழம்புடன் சேர்த்து ஒரு நிமிடம் கொதிக்க விடவும். கறிவேப்பிலை அல்லது கொத்துமல்லி சேர்க்கவும். கடுகு தாளிக்கவும்.

- சித்ரா மூர்த்தி, சென்னை





துவரம் பருப்பு, டைனோசர் விலை, காண்டாமிருகம் விலை விற்கிறது. இந்தக் குழம்பு வகைகளை ட்ரை பண்ணி பருப்புச் சிக்கனம் பிடியுங்க.. பாராட்டையும் வெல்லுங்க!

ஆரஞ்சுத் தோல் எள்ளுக் குழம்பு

தேவையான பொருள்கள்:

ஆரஞ்சு பழத்தோல் - ½ மூடி அளவு, வெள்ளை எள்ளு - 2 டீஸ்பூன், மஞ்சள் தூள் - ½ டீஸ்பூன், பச்சை மிளகாய் - 3, நல்லெண்ணெய், வெல்லக்கட்டி, புளி - தேவையான அளவு, கடுகு, வெந்தயம் - தாளிக்க

செய்முறை:

நல்லெண்ணெயில் கடுகு, வெந்தயம் வெடிக்க விடவும். ஆரஞ்சுத்தோலை சிறிது சிறிதாக கட் செய்து கொள்ளவும். தாளித்த எண்ணெயில் நறுக்கிய பச்சை மிளகாய், ஆரஞ்சுத் தோலை சேர்த்து வதக்கவும். இத்துடன் புளித் தண்ணீர், மஞ்சள் தூள், உப்பு, வெல்லக்கட்டி சேர்த்து கொதிக்கவிடவும். இறக்கும் முன் எள்ளை வறுத்துப் பொடி செய்து தூவி, ஒரு கொதி வந்ததும் இறக்கவும். 'கமகம' என்ற வாசனையுடன் மாறுதலான எள்ளுக் குழம்பு ரெடி.



- சியாமளா சுவாமிநாதன், திருவனந்தபுரம்

கதம்பக் குழம்பு

ஒரு டேபிள் ஸ்பூன் துவரம் பருப்பு, 1 டேபிள் ஸ்பூன் தனியா, ஒரு டீஸ்பூன் மிளகு, சீரகம், வெந்தயம், சுக்குப்பொடி, கடுகு (¼ ஸ்பூன்) இவற்றை வாணலியில் வறுத்துக் கொள்ளவும். எல்லாவற்றையும் மிக்ஸியில் பொடித்துக் கொள்ளவும். வெங்காயம், தக்காளி, ஆறு பூண்டு பற்கள் ஆகியவற்றை கடுகு தாளிப்பு செய்து வதக்கிக் கொள்ளவும். புளிக்கரைசலில் காரப்பொடி, மஞ்சள் தூள், உப்பு சேர்த்து, வதக்கியவற்றைப் போட்டு குழம்பைக் கொதிக்கவிடவும். நன்றாகக் கொதித்தவுடன் பொடி செய்ததைப் போட்டு கறிவேப்பிலை சேர்த்து திக்காக இறக்கவும். சுவையான கதம்பக் குழம்பு ரெடி. தோசைக்கும் சாதத்துக்கும் தொட்டுக் கொள்ள ஏற்றது. தயிர் சாதத்துக்கும் சூப்பராக இருக்கும்.



- பி. காந்திமதி, கில்நகர்

ஓமக் குழம்பு



வெயிற்காலங்களில் பசி அதிகம் எடுக்காது. தாகம் அதிகம் இருக்கும். தண்ணீர், குளிர்பானங்கள் அதிகம் குடிப்போம். இந்த ஓமக் குழம்பு கோடைக்கு மட்டுமல்ல, ஜீரண சக்திக்கும் ஏற்றது.

தேவையானது: புளி, உப்பு, சிறிது வெல்லம். இவற்றை அரைத் தம்ளர் வெந்நீரில் ஊற வைத்து, கரைத்துக் கொள்ளவும்.

வாணலியில் அரை குழிக்கரண்டி நல்லெண்ணெய் விட்டு, ஒரு டீஸ்பூன் கடுகு, ஒரு மிளகாய் வற்றல், கடலைப் பருப்பு, வெந்தயம், பெருங்காயம் இவற்றைப் போட்டு சிவக்க வறுக்கவும். மிளகாய்ப் பொடி, கறிவேப்பிலை போட்டு பொரிந்ததும் புளிக் கரைசலை விட்டு, அரை டீஸ்பூன் மஞ்சள் தூள் சேர்க்கவும்.

மற்றொரு வாணலியில் சுத்தம் செய்த ஓமத்தை நல்லெண்ணையில் போடவும். அது 'பட,பட' என பொரிந்ததும் அப்படியே கொதித்துக்கொண்டு இருக்கும் குழம்பில் கொட்டவும். குழம்பு கெட்டியானவுடன் நல்ல மணம் வரும். மூன்று நாட்கள் வரை கெடாமல் இருக்கும். இந்தக் குழம்பை சூடான சாதத்தில் போட்டு, பிசைந்து சாப்பிட... ஆஹா!! என்ன மணம்! என்ன ருசி!

- கோமளா நாராயணன், சென்னை

தீபாவளி திருநாள்.
நம் வாழ்வில் நல்லவை
இணைகின்ற நன்னாள்.



உங்கள் குடும்பத்தின் ஓர் அங்கமாய்...
உற்ற துணையாய் விளங்கி வருகின்ற
சிட்டி யூனியன் வங்கி - இந்நன்னாளில்
உங்கள் அனைவருக்கும்
தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

CITY UNION BANK LTD.

www.cityunionbank.com



தமிழக அரசு மக்களுக்கு இலவசமாக கேஸ், கலர் டீ.வி.க்களை தருவதை விட ஒரு பெப்பர் ஸ்பிரே மற்றும் கொசு மருந்துகள் தந்தால், கயவர்களிடமிருந்தும், நோய்களிலிருந்தும் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ளலாமே... அரசு யோசிக்குமா? **- கே.கனகலக்ஷ்மி, சாலிகிராமம்**

வீட்டிலிருப்பவர் வெளியூருக்குச் செல்லும் போது பொருள்களை எடுத்து வைக்க நாம் உதவலாம். ஆனால், டிராவல் பேக்கினுள் வைத்துக் கொள்வதை மட்டும் சம்பந்தப்பட்டவரே செய்ய வேண்டும். 'இதை எடுத்துக் கொண்டேனா, அதை மறந்துட்டேனா' என்று பாதி வழியில் டென்ஷனாகி வியர்க்காமலிருக்கலாம்!

- எஸ்.வைஷ்ணவி, திருச்சி

துளசி, இஞ்சி கலந்த சாற்றுடன் தேங்காய்ப் பால் சிறிது சேர்த்து மூன்று வேளை குடிக்க ஜல தோஷத்தால் ஏற்பட்ட மூக்கு வடிதல் உடனே நின்று விடும். **- ப்ரியா, சென்னை-4**



இவை எல்லாமே ஆஹா 50 தான்!

இப்போதெல்லாம் குழந்தைகளுக்கு உணவை ஸ்பூனால் கிளறி, ஸ்பூனால் வாயில் ஊட்டுவதுதான் சுத்தம் என்று எண்ணுகிறார்கள். கையால் பிசைந்து ஊட்டும்போதுதான் உணவு சூடாக இருக்கிறதா? குளிர்ச்சியாக இருக்கிறதா? மென்று விழுங்க முடியாத அளவுக்குக் கடினமாக உள்ளதா என்றெல்லாம் உணர முடியும். கையைச் சுத்தமாகக் கழுவி விட்டு கையால் உணவு ஊட்டுவது நல்லது. அந்த ஸ்பரிசமும் குழந்தைக்குத் தேவை. **- த.இராஜேஸ்வரி, சாத்தூர்**


புதுப் புடைவையை ஓரம் அடிப்பதற்கு முன் கோணலாக இருக்கும் பகுதியை வெட்டி எறிந்து விடாமல் பத்திரப்படுத்தினால் மேட்சிங் ப்ளவுஸ் எடுப்பதற்கு உபயோகப்படும். **- எஸ்.லக்ஷ்மி, மதுரை**

முதியவர்கள், தனியாக வெளியூர் செல்லும்போது (பேருந்தில்) இறங்குமிடம் வரும் முன்பே பொருள்களை சரிபார்த்து எடுத்து வைத்துக் கொண்டால், இறங்கும்போது சௌகர்யமாய் இருக்கும். **- டி.உமா, சென்னை-50**


சாதம் வடித்த கஞ்சியில் சூடான ரசம் சேர்த்துச் சாப்பிட்டால் சூப்பர் சூப். இதனோடு சீரகத் தூள் சேர்த்துக் குடித்தால் வயிற்றுப் பொருமல் அடங்கும்.

- ப்ரியா, சென்னை-4

ராஜஸ்தானில் உதய்பூருக்கு 48 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஸ்ரீநாதத்வாராவை வடஇந்தியத் திருப்பதி என்றே சொல்கிறார்கள். தசரா, தீபாவளிப் பண்டிகைகள் வந்தால் கேட்கவே வேண்டாம். ஜனசமுத்திரத்தில் ஊரே திக்குமுக்காடிப் போகும். அப்படி என்ன விசேஷம் என்கிறீர்களா? சின்னக் கண்ணன் ஸ்ரீநாதரின் கோயில் இங்குள்ளது.



சின்னக் கண்ணன்



'**ஸ்ரீ**நாதத்வாரா' என்றால் ஸ்ரீநாதரின் வாயில் என்று பொருள். கண்ணன் இங்கு பாலரூபம். இந்த விக்கிரகம், வைணவப் பெரியார் வல்ல பாச்சாரியாரால் பூஜிக்கப்பட்டதாம். அவரது வழித்தோன்றல்கள் காலத்தில் டில்லி அரசர் ஔரங்கசீப்பின் படை எடுப்புக்கு பயந்து ஸ்ரீநாத ரையும் மற்ற பூஜா விக்கிரகங்களையும் ரதத்தில் ஏற்றிக் கொண்டு ராஜஸ்தானில் அலைந்தார்களாம்.

மற்ற அரசர்கள், டில்லி அரசரைப் பகைத்துக் கொண்டு அவரது அதிருப்திக்கு ஆளாக விரும்பாமல் புகலிடம் அளிக்க மறுக்க, மேவார் ராணா ராஜ்சிங்

ஸ்ரீ நாதன்!

1671ல் அவர்களை வரவேற்று ஸ்ரீநாதருக்கு கோயில் எழுப்ப உதவியதுடன் 'சியத்' என்கிற கிராமத்தையும் மான்யமாகக் கொடுத்தாராம்.


சாதாரண முன் வாயிலுடன் துவங்கும் கோயிலை வெளியிலிருந்து பார்த்தால், அது கோயில் என்றே சொல்ல முடியாது. உள்ளே பெரிய பிராகாரமும் அங்கு பணியாற்றுகிறவர்களுக்கான அடுக்கு மாடிக் கட்டிடம் 'மோத்தி மஹாலும்' உண்டு. அதைத் தாண்டி இன்னொரு நுழைவாயிலைக் கடந்தால்தான், ஸ்ரீநாதரின் இருப்பிட அரங்கை நெருங்கிவிட்டோம் என்கிற உணர்வு ஏற்படுகிறது.

அதிகாலை ஐந்து மணியிலிருந்து துவங்கும் தரிசன நேரம் இடைவெளி விட்டு விட்டுத் தொடருகிறது. மங்களா (நிர்மால்ய தரிசனம்) சிருங்கார், கவால், போக், உத்யாபன், போக், சயன் என்று இவை பெயரில் மட்டுமல்ல, ஸ்ரீநாதருக்கான அலங்காரங்கள், அணிவிக்கப்படும் அஸ்திரங்கள், ஆபரணங்கள், பின்னால் தொங்கவிடப்படும் பேஜ்வாய் திரை, நிவேதனங்கள் எல்லாமே வெவ்வேறாக இருக்கும். ஆண்டு முழுவதும், ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய அலங்கார, நிவேதனங்களைப் பற்றிய விவரங்கள் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே எழுதி வைக்கப்பட்டுள்ளன. அந்த நியமங்களையே இன்றும் கடைப்பிடிக்கிறார்கள்.

ஸ்ரீநாதர் மற்ற கோயில்களில் உள்ளதைப் போல் தனி சிலை வடிவில் இல்லாமல் பலகை போன்ற கல்லில் செதுக்கப்பட்டிருப்பதால், அலங்காரங்களை, ஒருவிதப் பிசினைப் பயன்படுத்தி ஒட்ட நேரம் பிடிக்கிறது. சில சமயம் அலங்காரத்தை ஏற்காமல் கண்ணன் மோடி செய்வானாம். வஸ்திரமும், ஆபரணங்களும் நழுவி விழுந்து கொண்டே இருக்குமாம். அப்போது கிண்ணம் நிறைய வெண்ணெயும், பாதாம் பருப்பும் அல்லது கோவாவில் செய்த இனிப்பையும் வைத்து நிவேதனம் செய்து, ''என் கண்ணல்லவா? அலங்காரத்தை ஏற்றுக் கொள்'' என்று முக்யா (பூஜாரி) கெஞ்சுவாராம். பிறகுதான் அலங்காரத்தை முடிக்கவே முடியுமாம். அலங்காரம் முடிந்த பிறகு, 'ஸ்ரீநாதர் தரிசனத்துக்கு ரெடி' என்று மைக்கில் அறிவிக்கிறார்கள்.

குழந்தை கண்ணனுக்கு நிவேதனப் படைப்புகளில் காரம், புளி, எண்ணெய், கரம் மசாலா வகைகளைச் சேர்ப்பதில்லை. குழந்தைக்கு ஒத்துக் கொள்ளாதல்லவா? அது மட்டுமல்ல. நெய்யில்தான் சமையல்.

பாயசம், கத்தரிக்காய், பரங்கிக்காய், மோர்க்குழம்பு வகைகள் தினமும் உண்டு.



சர்க்கரைப்பூரி, பிஸ்தா பர்ஃபி, கோதுமை லட்டு போன்ற பிரசாதங்கள், திருப்பதி மாதிரி இங்கும் விற்கப்படுகின்றன.

ஸ்ரீநாதருக்கான பிரத்யேக சேவார்த்தங்களை மேற்கொள்கிறவர்களுக்கும், இங்கு பணியாற்றும் சிப்பந்திகளுக்கும் தினமும் பிரசாத சாப்பாடு விநியோகிக்கப்படுகிறது. பக்தர்கள் சேர்ந்து கொண்டு சமையலுக்குத் தேவையான அரிசி, பருப்பு, சர்க்கரை போன்ற மளிகைச் சாமான்கள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைக் கொண்டு வந்து சமர்ப்பிக்கிறார்கள். இன்னும் சிலர் கைங்கர

யத்தை 'சிரம தானமாக' செய்கிறார்கள். அதாவது பாத்திரங்களைக் கழுவுவது, காய்கறிகளை நறுக்குவது, அரிசி பொறுக்குவது, பூமாலைகள் கட்டுவது, பீடா தயாரிப்பது போன்ற வேலைகளைச் செய்து கொடுக்கிறார்கள்.

பக்தர்கள் கட்டணம் செலுத்தி, வாங்கி வந்த தேங்காயை சன்னிதிக்கு நேராக உள்ள ஜன்னலில் கட்டி, மனோபீஷ்டம் நிறைவேற பிரார்த்தித்துக்கொண்டு, அது நிறைவேறிய பிறகு வந்து அவிழ்த்து விடலாம். தீபாவளியின் போது, வட இந்தியர்களுக்கு வர்த்தக கணக்கு வழக்குகளை ஆரம்பிப்பதற்கான புது வருடம் பிறப்பதால் ஸ்ரீநாதரை வணங்கி அருளைப் பெற அண்டை மாநிலமான குஜராத்தைச் சேர்ந்த சிறிய பெரிய தொழில் அதிபர்கள், அதிக அளவில் வருகிறார்கள்.

தரிசனங்களிலேயே 'ராஜ் போக்' தரிசனம் முக்கியமானது. இது சுமார் நாற்பத்தைந்து நிமிடங்கள் நீடிக்கிறது. இங்கே அதற்காக க்யூ வரிசையில் காத்து நிற்கிற வழக்கம் கிடையாது. பெரிய அரங்கு போல் உள்ள கருவறையின் கதவுகள் திறக்கப்பட்டதும் மக்கள் பிரவாகமாய் உள்ளே பாய்கிறார்கள். கட்டுப்பாடில்லாத இந்த நெரிசலில் வயது முதிர்ந்தவர்களும், குழந்தைகளும் ஜாக்கிரதையாக முன்னேற வேண்டும். அந்தச் சில நிமிடங்கள் நமக்குச் சோதனை நேரம் என்றாலும், மேடை மீது எழுந்தருளியுள்ள ஸ்ரீநாதரை தரிசிக்கையில் மனம் ஆனந்தத்தில் திளைக்கிறது. பாலகனாய் இடதுகையில் கோவர்த்தன மலையை தூக்கிப் பிடித்துள்ள பாவனையில், வலது கையை இடுப்பில் வைத்துக் கொண்டு, 'இடுப்பளவு சம்சார சாகரத்தில் நீ மூழ்கி நின்றாலும் கரை சேர்க்க நானிருக்கிறேன்' என்பதைப் போன்ற கனிவு கசியும் முகத்துடன் நவரத்ன ஹாரங்கள் ஜொலிக்க, தங்க மணிமாலைகள் பளபளக்க புஷ்ப மாலைகள் மேனியை அலங்கரிக்க புன்னகையுடன் காட்சி தரும் ஸ்ரீநாதரைக் கண்டு சிலிர்க்கிறோம்.

வேதகோஷங்கள் முழங்க, 'ஸ்ரீநாதருக்கு ஜே' என்று மக்கள் எழுப்பும் வாழ்த்தொலியுடன் தீபாராதனை, பார்க்க வேண்டிய காட்சி. சன்னிதிக்கு நேர் மேல் உச்சியில் வேயப்பட்ட கூரையின் மீது, மேடை மேல் வீற்றிருக்கும் பெரிய கலசத்தின் மீது சுதர்சன சக்கரம் பதிக்கப்பட்டுள்ளது. இதுவே இந்தக் கோயிலுக்கு இத்தனை தன ஆகர்ஷண சக்தியை அளிக்கிறதாம். கலச மேடையில் நான்கு பக்கங்களிலும் காணப்படும் புலியின் உருவங்கள் நான்கு வேதங்களைக் குறிக்கின்றன.

சுதர்சன சக்கரத்தை அத்தரால் துடைத்து சுத்திப்பதும் பக்தர்கள் நேர்ந்து கொள்ளக் கூடிய சேவார்த்தம். இதைச் செய்ய ஸ்ரீநாதரின் விக்கிரகத்தைக் கண்டெடுத்த பாண்டே என்பவரின் வம்சாவளியினருக்கு மட்டுமே உரிமை உண்டாம். கலசத்தின் அருகில் செருகப்பட்டுள்ள பட்டுத் துணியால் ஆன கொடி, ஸ்ரீநாதர் கோயிலையும், மற்ற ஆறு பருத்திக் கொடிகள் (வெவ்வேறு நிறத்தவை) இந்தியாவிலுள்ள மற்ற முக்கியமான ஆறு கிருஷ்ணர் கோயில்களையும் குறிப்பதாக ஐதிகம். கோகுலம், கோவர்த்தனம், மதுரா, பிருந்தாவனம், துவாரகை, பூரி என்று அவற்றைச் சொல்லலாம்.

ஸ்ரீநாதரின் பெருமையை சொல்லி மாளாது. லட்சக்கணக்கான பக்தர்களை ஈர்க்கிற இந்த ஸ்ரீகாந்தனின் காந்த சக்தியே அதைச் சொல்லிவிடும்.

– 'ரஷ்மி', சென்னை



விருந்தின் போது மருத்துவர், வழக்கறிஞர், ஜோதிடர் போன்றவர்களைச் சந்தித்தால் இலவச ஆலோசனை பெற முயலாதீர்கள். தங்கள் தொழில் பிரச்னைகளிலிருந்து விடுபட்டு, சிறிது நேரம் உறவினர், நண்பர்களுடன் அளவளாவவே அவர்கள் வருகிறார்கள் என்பதை மறவாதீர்கள்!

– எஸ்.சரோஜினி, பெங்களூர்-72

கவிதை

உனைக் கண்டால்
உமிழ்நீர் ஊறுவதாலா,
உப்போடும் உரப்போடும்
உறவாடி கைகோத்து
என்றென்றும் எண்ணெயிலே
ஊறித் திளைப்பதாலா,
ஊறுகாய் என்ற பெயர்
உனக்கேதான் உண்டானது?

சித்தத்தை உன்பால் வைத்து
அதிகமாய் உனை கண்டால்
ரத்தத்தைக் கொதிக்க வைத்து
உடல்நலம் கெடும்படி
ஊறு விளைவிப்பதாலா,
ஊர் மக்கள் உனை
ஊறுகாய் என்று சீற்றத்துடன்
சீறி அழைத்திட்டார்?

மதி மயக்கும் மது, 'ரம்'- இவற்றின்
மதுரமான ஜோடியே!
மசக்கையிலே மகளிரும்
வந்திடுவார் உனை நாடியே,

நதிக்கரை நிலாச்சோற்றை
அமுதாக்கும் சிநேகிதியே!
தயிர் சாதக் கண்ணனவன்
மனம் கவர் ராதையே!

சாப்பாட்டு சதுரங்கத்தின்
சக்திமிகு ராணி நீ
பாடுபடும் பாட்டாளியின்
கஞ்சிக்கு என்றும் துணை நீ
முக்காலத்துக்கும் ஏற்புடையதால்
இலக்கணக் குறிப்பில்
வினைத்தொகை
எக்காலமும் உண்டுமகிழ
உன்னில்தான் எத்தனை வகை!

அழகழகாய் காய்கறிகள்
அறுசுவை கனிவகைகள்
இருந்திடினும், அவையாவும்
உனக்கிணை ஆகுமோ, தெரியில்
அம்மா

- மீனாட்சி பட்டாபிராமன்
மதுரை



சென்ற மாத கதைச்சுருக்கம்...

தன்னுடைய காலஞ்சென்ற மனைவி இந்திராவின் பர்சனல் டைரி ஒன்று ரமேஷின் கையில் கிடைக்கிறது. புற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்த இந்திரா, தனது கணவரின் நடவடிக்கைகள் பற்றி வருத்தப்பட்டு எழுதியுள்ள நாட்குறிப்புகளைப் படிக்க ஆரம்பிக்கிறார் ரமேஷ்...



மொழி பெயர்ப்புக் கதை

டைரி!

30.10.74

குழந்தைகள் மூவரும் பள்ளிக்குப் போயிருக்கின்றனர். இன்று மீண்டும் டைரியை எடுத்துள்ளேன். இன்று மூன்று குழந்தைகளையும் எவ்வளவு மோசமாக அடித்து விட்டார். குழந்தைகளின் மீது படும் ஒவ்வொரு அடியும் தாயின் இதயத்தின் மீதும் விழுகிறதே? ஏனோ தெரியவில்லை, ரமேஷ் மிகவும் மாறிவிட்டார். என் மீதுள்ள கோபத்தைக் குழந்தைகள் மீது காட்டுகிறார். நேற்று பள்ளியில் மீட்டிங் இருந்ததால் நேரமாகி விட்டது. பிரின்ஸிபால், தம் காரில் என்னை அழைத்து வந்து வீட்டில் இறக்கி விட்டுப் போனார். இதை வைத்து ரமேஷ் என் மீது கோபமாக இருந்தார். இரவு முழுவதும் எதுவும் பேசவில்லை. காலையில் தேநீர் எடுத்துச் சென்றபோது, கோப்பையைத் தரை மீது வீசி உடைத்தார். சத்தம் கேட்டுக் குழந்தைகள் ஓடி வந்தனர். அவர்கள் எதிரிலேயே பல்லைக் கடித்துக் கொண்டு கத்தினார்.

''காதுகளைத் திறந்து கேட்டுக்கோ.



ஹிந்தி மூலம் : நிருபமாராய்

மினி தொடர்

தமிழில் : ஜிஜி

பஜாரிப் பொம்பளை போல, கண்டவங்கக் கார்ல ஏறி வீட்டுக்கு வர்றதை இனிமேலும் பொறுக்க மாட்டேன்.''

நான் உறைந்து போனேன். என் தந்தைக்கு ஒப்பான ஒருவரின் காரில் நான் வீடு திரும்பியது பஜாரித்தனமா? உடல் முழுதும் வெறுப்பும், கோபமும் பாய்ந்தோடியது. இருந்தும் மௌனமாக இருக்கிறேன். இத்தனை பெரிய தாக்குதலுக்குப் பின்பும் மௌனம். பெண் அல்லவா? கணவனைப் பொறுத்துக் கொள்வதுதான் சமூக நீதியோ? ஆயினும் உடைந்து விட்டேன். இப்போது விலகிப் போகிறேன். மனத்தளவில், வெகு தொலைவில் விலகிப் போகிறேன்.

இதைப் படித்த ரமேஷ் சிலையாகிப் போனார். ''ஆனால், இந்து அன்று எதுவும் பேசவில்லையே? எப்போதும் போல் தன் வேலைகளில் ஈடுபட்டாளே? துயரத்தை முகத்திலும், அமைதியை உள்ளத்திலும் கொண்டவளாக இருந்தாளோ? வேதனையுடன் அடுத்த பக்கத்தைப் புரட்டினார் ரமேஷ்.



06.06.84

இத்தனை ஆண்டுகளாக உளவியல்ரீதியாகவும், உடலியல்ரீதியாகவும் விழுந்த அடிகளையும் காயங்களையும் தாங்கிக்கொண்டு வாழ்ந்து விட்டேன். ரமேஷுக்கு என் குறித்துச் சிறிது கூடச் சிந்தனையே ஏற்படவில்லையோ? மனைவியைக் கணவனின் அர்த்தாங்கினி என்கிறார்களே? பாதி உடல் வேதனையில் துடிக்க; மறுபாதி, உணர்ச்சியற்ற மரக்கட்டை போல இருப்பது இக் கருத்துக்குப் பொருந்தவில்லையே? நானாக அவரிடம் ஏதும் சொல்வதில்லை. எப்படியோ தெரியவில்லை. இன்று அவரே கேட்டு விட்டார்- ''இவ்வளவு வாட்டமா, மௌனமாவே இருக்கியே? ஏன்?'' கேட்ட கேள்விக்கு பதிலாக நான், ''சுமார் ஆறு மாசமா வயித்துல இலேசான வலி இருந்துக்கிட்டேயிருக்கு.''

இதைக் கேட்ட அவர் ஆறுதலாக ஏதும் கூறாமல் பட்டென்று சொன்னார் -

''நீங்க, பொம்பளைகள் கிட்ட இருக்கற கெட்ட பழக்கமே இதான்.எதையாவது புளிப்பும், காரமுமா தின்னுகிட்டே இருக்க வேண்டியது. வயிறு வலிக்காம என்ன செய்யும்? காலேஜிலேருந்து இப்பத்தான் அலுத்துச் சலிச்சு வந்திருக்கேன். நீ என்னடான்னா வலின்னு உக்காந்திருக்கே.''

நான் வாயடைத்துப் போனேன். அவர் கேட்டதால்தானே சொன்னேன்? இப்போது முடிவெடுத்து விட்டேன். செத்தாலும் சாவேனே ஒழிய இனி எதுவும் சொல்ல மாட்டேன்.


ரமேஷ் சிலையானார். அவர் உள்ளத்தில் சூறாவளி வீசியது.

10.10.88

இன்று மெடிகல் ரிப்போர்ட் வந்து விட்டது. கேன்சர்தான் என்று உறுதியாகி விட்டது. ஆனால், இதுவரை யாருக்குமே தெரிவிக்கவில்லை. எதைச் சொல்ல? அவருக்குத்தான் பேப்பர் படிக்கவே நேரம் போதவில்லையே? மனைவி ஒரு பொருட்டே இல்லாத ஜடம், ஒருதடவை கூட 'எங்கே போயிருந்தே?'ன்னு கேட்கவே இல்லையே? செய்தித்தாளின் கறுப்பு எழுத்துக்களில் தொலைந்து விட்டார். ஒரே ஒரு வினாடி கவனம் மாறி, ''ஓ, நீ வந்துட்டியா?'' என்றவர் மீண்டும் உலகச் செய்தியில் மூழ்கிவிட்டார். நானும் பிடிவாதக்காரி அல்லவா? எனக்கும் தன்மானம் இல்லையா, என்ன? 'உன் முகம் ஏன் இப்படி நிறம் மாறியிருக்கு? ஏன் இவ்வளவு பலஹீனமா இருக்கே?' என்று கேட்காத வரை நானாக எதுவும் சொல்ல மாட்டேன். கடைசி மூச்சு விடும் வரை எதுவும் கூற மாட்டேன்.

12.01.89

இப்போது வலி தாங்க முடியவில்லை. சில மாதங்களாகத் தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வருகிறேன்.



எலுமிச்சை சாதம் கலக்கும் போது கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு, மிளகாய் வறுத்து கரகரப்பாகப் பொடித்த பொடியையும் இரண்டு டீஸ்பூன் சேர்த்து செய்தால், சூப்பர் சுவையுடன் இருக்கும்.

- வி. பவானி, சென்னை- 73



மாவடு செய்தால் சில நாட்களிலேயே பூஞ்சை பிடித்து விடுகிறது. வடுமாங்காய் தயாரித்து ஒரு வாரம் கடந்தபின், அந்த நீரை வடிகட்டி கல் சட்டியில் விட்டு, சுண்டக் காய்ச்சி மீண்டும் ஜாடியில் ஊற்றி, வடுமாங்காய்களைப் போட்டு வைத்தால் பூஞ்சை பிடிக்காது.

- ஆர்.ராஜலக்ஷ்மி, ஹூப்ளி.



ஆனால், உடல் நிலை சீர்படவில்லை. என் நிறம் மாறிய முகம்; கண்களுக்குக்கீழே ஏற்பட்டுள்ள கருவளையம் இவரைச் சந்தேகப்பட வைக்கவில்லையா? இன்று சொன்னார்- 'இந்து, நீ கிழவியாயிட்டே பாரு. உன்கண்களுக்குக் கீழே கருவளையம், அதிகமாய்க்கிட்டே இருக்கு'' சொல்லிவிட்டுப் பெரிதாகச் சிரித்தார். நான் உள்ளுக்குள் நொறுங்கிப் போனேன். வாய் விட்டு அழுதேன்.

ரமேஷின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை பெருக்கெடுத்தது. இந்து, இந்த அளவு நோயாளி ஆகிவிடுவாள் என்று நான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. 'ஐயோ! அவள் தன் உடல்நிலை குறித்து ஒரு தடவையாவது சொல்லியிருந்தால், உயிரைப் பணயம் வைத்தேனும் அவள் சேவை எல்லாம் அவளுக்கே மறந்து விடுமளவு அன்பு காட்டி இருப்பேனே' கண்ணீர் நிற்கவே இல்லை. நடுங்கும் கைகளோடு பக்கத்தைப் புரட்டினார்.

15.04.89

இப்போது பசியே மறந்து விட்டது. எழுதும் சக்தியும் க்ஷீணித்து விட்டது. எனக்கு கேன்ஸர் என்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது. நான் சில நாள் விருந்தாளி என்பதும் தெரிந்து விட்டது. குழந்தைகள் வந்தார்கள். அன்பு காட்டி, ஆறுதல் சொல்லிப் போய்விட்டார்கள். இப்போது முற்றிலும் தனிமைப்பட்டு விட்டேன். ஆனாலும், ரமேஷின் கவலை தோய்ந்த முகம் பார்த்து, மனதிற்கு அளவற்ற நிம்மதி கிடைக்கிறது. ஹூம்... இப்போதாவது அவருக்கு என்னைப் பற்றிய கவலை ஏற்பட்டதே. 'பெண்கள் நோய்வாய்ப்பட்டதாகச் சொல்ல அவர்களிடம் ஆயிரம் சாக்குப் போக்குகள் உண்டு' என்று இனி சொல்ல மாட்டார் அல்லவா? இப்படிச் சொல்லித் தானே என்னை வதைத்தார்?

படபடக்கும் இதயத்தோடு ரமேஷ் கடைசிப் பக்கத்தைப் புரட்டினார்.

18.06.89

அநேகமாக இன்று கடைசி முறையாக டைரி எழுதுகிறேன். எழுதவே முடியாமல் ஒரே வலி. எப்போதும் கேட்பீர்களே எனக்குக் குளிர்ச்சியான பொருள்கள் மீது ஏன் வெறுப்பு? என்று. தெரிந்து கொள்ளுங்கள் ரமேஷ். நம் இருவரிடையே வளர்ந்து விட்ட 'குளிர்ந்த' உணர்வுகளே என் மனத்தின் அடி ஆழத்தில் வெறுப்பு விதைகளை விதைத்து விட்டன. உங்களுடைய வெம்மையான ஸ்பரிசம் கூட எனக்குக் குளிர்ச்சியாகவே பட்டது. மெள்ள மெள்ள என் மன உயிர்ப்பு கூடச் செத்துப் போயிற்று. இடையில் நம் உறவிலும் 'குளிர்ச்சி'யின் மறமறப்பு ஏற்பட்டு விட்டது.

உங்களுக்கு என் நடத்தை மீது எப்போதும் சந்தேகம் இருந்தது என்பதை நான் அறிந்தே இருந்தேன். என் மரணத்திற்குப் பிறகு நீங்கள் இந்த டைரியைப்



வியக்க வைத்த ஆட்டோக்காரர்!

நானும், எனது ஐந்து தோழிகளும் பி.எட். தேர்வு எழுத திருவாரூர் சென்றிருந்தோம். எங்கள் ஊருக்கும், தேர்வு மையத்திற்கும் அதிகத் தொலைவு என்பதால் திருவாரூரிலேயே விளமல் என்ற இடத்தில் அறை எடுத்துத் தங்கியிருந்தோம். எங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் ஆட்டோ ஓட்டுநர் செய்து கொடுத்தது மிகவும் வியப்பாக இருந்தது.

நாங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே சாப்பாடு எடுத்து வந்து தருவது, தேர்வு மையத்திற்கு எங்களை ஆட்டோவில் அழைத்துச் செல்வது என எல்லா உதவிகளையும் செய்தார். நாங்கள் தந்த பணத்தையும் வாங்க மறுத்துவிட்டார். அவரது அன்பைக் கண்டு நாங்கள் ஐந்து பேரும் மிகவும் நெகிழ்ந்துவிட்டோம். கடைசியாக ஊருக்கு வரும்போது, வற்புறுத்தி அவரது கையில் பணத்தைத் திணித்துவிட்டு நெகிழ்ச்சியுடன் விடைபெற்றோம்.

பொதுவாகவே, ஆட்டோ ஓட்டுநர்கள் என்றால் கசப்பான அனுபவங்களே பலருக்கும் இருக்கும். ஆனால் இப்படியும் சிலர் இருக்கின்றனரே என்று எண்ணி வியந்தோம்.

- ஆர்.பாரத்காந்தி, தஞ்சாவூர்

படிப்பீர்கள் என்பதையும் நான் அறிவேன். என் உணர்வுகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இல்லாவிட்டாலும், இதில் என் காதல் நிகழ்வுகள் விவரிக்கப்பட்டிருக்கலாம் என்பதற்காக வேணும் இதை அவசியம் படிப்பீர்கள் என்பது உறுதி. என்னை மிக மிக நேசிப்பதாக நீங்கள் அடிக்கடி பெருமைப்பட்டுக் கொள்வீர்கள். அதை நான் ஒருபோதும் அன்பாகக் கருதியதே இல்லை. அன்பு என்பது விலங்கு அல்ல. ஆத்மாவைக் கூடப் புளகாங்கிதமடையச் செய்யும் ஒரு சுதந்திர உணர்வு. மிகப் புனிதமான உணர்வு.

பெண் மனம் ஆத்மார்த்தமான அன்பிற்கு, இனிமை நிறைந்த உணர்வுப் பரிமாற்றத்துக்கு தான் ஏங்குவது. ஆனால், அது உங்களிடமிருந்து எனக்குக் கிடைத்ததா? என்ன கொடுத்தீர்கள் நீங்கள் எனக்கு? மன உளைச்சலும், உடல் வேதனைகளும்தானே? உங்கள் மீது ஒரு சமயம், அளவு கடந்த அன்பு இருந்தது. இப்போது இருப்பது வெறும் வெறுப்பு மட்டுமே. ஆம், அளவற்ற வெறுப்பு.

ரமேஷ் கழிவிரக்கத்தால் தலைகுனிந்தார். இவ்வளவு அவமானம், இவ்வளவு வேதனை, இவ்வளவு காயங்கள், இதுவரை அவர் அனுபவித்ததே இல்லை. உணர்ச்சிகள் மறந்தவராகக் கண்ணிமையால், இந்துவின் படத்தையே பார்த்தவாறு நின்றார். கண்கள், கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தன. கையில் பிடித்திருந்த டைரி தரையில் விழுந்து கிடந்தது. இந்து, தம்மை அளவற்ற வெறுப்புடன் பார்ப்பது போல் உணர்ந்தார். இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு குழந்தை போல் கேவிக் கேவி அழுதார். அமைதி நிறைந்த வீட்டில் அவருடைய ஒலியைக் கேட்கத் தான் யாருமில்லை.

(நிறைந்தது)



ஆல்பம்



தாத்தா: எஸ்.வரதன்
பாட்டி : வத்சலா வரதன்
பேத்தி : ஆர்.ஹரிணி



தாத்தா: ஆர். சங்கரன்
பாட்டி : எஸ்.ஜெயலக்ஷ்மி
பேரன் : வருண்



தாத்தா: ஜி.குமரவேலு
பாட்டி: கே.கலைச்செல்வி
பேரன்கள்:
பி.லோகேஷ், பி.ஜஸ்வந்த்



தாத்தா: ஜெயசந்திரன்
பாட்டி : ஹில்டா ஜெயசந்திரன்
பேத்தி : ஜோஸ்லின் ஒலிவியா



தாத்தா: செல்வராஜ்
பாட்டி : எஸ்.சிவகாமி
பேத்தி: நிவேதா, பேரன் : மாதவன்



தாத்தா: சி.சண்முகம்
பாட்டி : எஸ்.பானுமதி
பேத்தி: நேத்ரா

என் செல்லமே!





கால்கள் பட்டுப் போல் இருக்க வேண்டுமா? சிறிதளவு தயிரில் முல்தானிமட்டியைக் குழைத்து, கால்களில் பரவலாகத் தடவி உலர விடுங்கள். நன்கு உலர்ந்ததும் வெதுவெதுப்பான நீரில் காலைக் கழுவுங்கள். கால்கள் மின்னும்!

- சியாமளா ராஜகோபால், சென்னை-64

குழந்தைகள் மாடிப்படிகளில் ஏறுவதைத் தவிர்க்க, மாடிப்படியின் கீழ்ப் பகுதியில் சேஃப்டிகேட் அமையுங்கள். அந்த கேட் எண்பது சென்டி மீட்டர் உயரம் இருந்தால் கூட போதும். அலுமினியத்தால் உருவாக்கினால் செலவு குறையும்.

- எம்.பானுமதி, திருச்சி-8

சின்ன வெங்காயத்தை பிளாஸ்டிக் கவரில் போட்டு மூன்று மணி நேரம் ஃப்ரிஜ்ஜில் வைத்து, பிறகு நறுக்கினால் கண்ணில் எரிச்சல் வராது.

- கே.விஜயலக்ஷ்மி, திருச்சிராப்பள்ளி



இவை எல்லாமே ஆஹா 50 தான்!

தீபாவளி பலகார வகைகளை அன்று மட்டும் செய்யாமல், அதற்கு முன்பே ஒருநாள் செய்து பார்க்க வேண்டும். அப்போதுதான் சிறு குறை இருந்தாலும் பண்டிகை தினத்தில் செய்யும் போது நன்றாகச் செய்ய முடியும்.

- பி.சூடாமணி, சென்னை-26

குளிர்க்காலத்தில் ஸ்வெட்டர்களைக் கையால் துவைக்கும்போது ஷாம்பு போட்ட நீரில் ஊறவைத்துத் துவைத்தால் பளிச்சென்று இருப்பதுடன், கரையில்லாமல் வாசனையாகவும் இருக்கும்.

- வசந்தா மோகன், புனே

ஃப்ளாஸ்க் அழுக்கடைந்து காணப்படுகிறதா? வெந்நீரில் சிறிது உப்பைக் கரைத்து அதை ஃப்ளாஸ்கில் ஊற்றி, அரைமணி நேரம் ஊறவிடவும். பிறகு வேறு நீரால் கழுவினால் ஃப்ளாஸ்க் சுத்தமாகி பளிச்சென இருக்கும்.


- க.கலாவதிமணியன், பெரணமல்லூர்

கேசரி, ரவாலட்டு, பொட்டுக்கடலை லட்டு செய்யும்போது மொத்த மாவு, சர்க்கரை கலவைக்கு கால் பங்கு பால் சேர்த்துக் கலந்தால் மிக ருசியாக இருக்கும்.


- வே.சித்ரா வேடியப்பன், திருவண்ணாமலை


தேர்ந்தெடுங்கள்,
ஆயு:கேர் லவண தைலம்...
அதிகப்படியான
கொழுப்பிருந்து விடுபடுங்கள்,
உங்கள் அழகான உடல்
தோற்றத்தை மீட்டெடுங்கள்!
AYU: CARE
Lavana Tailam
Available in all Khadi Crafts centers of Coimbatore, Erode, Tirupur & Salem
ஆயு: கேர்
லவண தைலம்
ஆயுர்வேதிக் ஃபிகர் கேர்
மிக அதிகமான உடல் பருமன் மற்றும்
தொந்திக்கான அதிநவீன ஆயுர்வேத தீர்வு
AYU: CARE
Tamilnadu - 8056026701, 8056026700, 8056026702 Chennai, Kanchipuram - 8056026705, 8056026704 Villupuram, Cuddalore, Pondy, Vellore - 8056026706 Madurai, Virudunagar, Dindugal, Rameswaram, Sivagangai-8056026708, 8056026709 Kumbakonam, Tanjavur, Tiruvarur, Trichy- 8056026707 Salem, Dharmapuri, Hosur, Namakkal - 8056026711 Coimbatore, Tirupur, Nilagiris, Erode - 8056026710
AYU: CARE
Manufactured by: INSTITUTE OF INDIAN THERAPIES, Annamanada P.O. Thrissur-680 741. Kerala, India, email: ayucarecochin@gmail.com, cim@asianetindia.com, www.ayucaregroup.com Super Stockist: Chennai: Sun Enterprises 9283299999 Mumbai: Prakash Agencies: 022 23446533, 23429138, 9322762518 Karnataka: Rakesh Enterprises 080 23579251. Andra Pradesh: Vijayalakshmi Agencies Ph.040 66464454. Business & Export Enquiries: 0484 2351077, 0487 3211227, 2387553 Fax: 0487 2387558 For Trade Enquiries: 8056026700












கார்த்திகை ஸ்பெஷல்

தேவையான பொருள்கள்:

நல்ல தரமான பஞ்சு - 2 கிலோ

விபூதி - 1 பாக்கெட்







இலட்சம் திரிகளில் லக்ஷ்மிகரமான பூஜை!

'பூ' வத்திகள் செய்வது எப்படி? இந்த வத்திகளை உபயோகித்து 'இலட்சம் திரிகள்' பூஜை செய்வது எப்படி?

முதலில் நாம் 'பூ'வத்திகள் செய்முறையை பார்ப்போம்.

செய்முறை:

பஞ்சில் உள்ள கொட்டைகளை நீக்கி, தூசி, துகள்கள் இல்லாமல் சுத்தம் செய்யவும். அந்தப் பஞ்சை இரண்டு கைகளால் நன்கு பிரித்து, உதிர் உதிராகச் செய்யும் போது, அந்தப் பஞ்சு வெள்ளையான நுரை போல் வரும்.

படம் 1:

இதில் காட்டியதுபோல், இடது கையில் பஞ்சை வைத்துக் கொண்டு, வலதுகை, பெருவிரல், நடுவிரல், ஆள்காட்டிவிரல், இந்த 3 விரல்களை இணைத்து வைத்துக்கொண்டு, சிறிது விபூதியைத் தடவிக்கொண்டு, பஞ்சைக் கொஞ்சம் கொஞ்சமாக இழுத்து, நூலிழை போல் செய்து கொள்ளவேண்டும். பின்பு, தயாரித்த அந்த நூலிழைகளை இடது கைவிரல்களில், (ஆள் காட்டிவிரல், நடுவிரல்) 25 சுற்றுகள் சுற்றிக் கொள்ள வேண்டும்.

படம் 2: இரண்டு கைவிரல்களால், வளைவாகச் சுற்றிய பஞ்சை இழுக்க வேண்டும். இப்போது ஒரு கையில் 25 திரிகள், மற்றொரு கையில் 25 திரிகள் என்று இருக்கும்.

படம் 3: 50 திரிகளையும் ஒன்றாக வைத்துக் கொண்டு, வளைத்து, இரண்டு ஓரங்களையும் ஒன்றுசேர்த்து, கை விரல்களால், நன்கு முறுக்கி விட, நன்கு ஒட்டிக்கொண்டு விடும். இது மொட்டு போலிருக்கும். இதைப்போல 8 மொட்டுக்கள் தயாரிக்க வேண்டும்.

படம் 4: 8 மொட்டுக்களையும் ஒன்று







இடுப்பு வலியால் அவதிப்படுகிறீர்களா? தலையணை, மெத்தை எதுவும் இல்லாமல் உடம்பைத் தளர்வாக வைத்துக் கொண்டு தரையில் 20 நிமிடம் படுத்திருங்கள். இதனால் இடுப்பு வலியும் வராது. கூன் முதுகும் விழாது.

- உஷா ராமமூர்த்தி, கொல்கத்தா

சேர்த்து, எல்லா ஓரங்களையும் ஒன்றாக முறுக்கி வைத்துக்கொள்ளவேண்டும்.

படம் 5: முறுக்கி வைத்துள்ள மொட்டுக்களின் ஓரங்களில் கொஞ்சம், கொஞ்சமாக சேர்த்துக்கொண்டே, முறுக்கிவிடும்போது நீளமான மேல் நோக்கி கம்பீரமாக நிற்பது போல, திரி பார்க்க பூ வடிவில் அழகாக இருக்கும். விபூதியை தடவிக் கொண்டே செய்யும்போது, திரிகள் கெட்டியாக இருக்கும்.

இப்போது 'பூ' திரி தயாராகிவிட்டது. இனி, 'இலட்சம் திரிகள்' பூஜை செய்வது எப்படி என்று பார்ப்போம்.

ஒருவரே செய்தால் அதிக நாட்கள் பிடிக்கும். குடும்பத்தில் இருக்கும் அனைவருமோ அல்லது தோழிகள் எல்லோரும் சேர்ந்தோ திரிகளைத் தயாரித்து கோயிலில் விளக்கேற்றலாம். முதலில் 'பூ' வத்திகள் 300 செய்து கொள்ளவேண்டும். (1 வத்தியில் 365 இழைகளுக்கு மேல் இருக்கும்). 300 வத்திகள் செய்யும்போது, ஒரு இலட்சம் திரிகளுக்கு மேலேயே வரும்.

பொங்கல் பண்டிகைக்குப் பிறகு வரும் 'ரத சப்தமி' நன்னாளில், இந்த வத்திகளைச் செய்யத் தொடங்க வேண்டும். கார்த்திகை மாதத்தில், பௌர்ணமியன்று, (பௌர்ணமியன்று இயலாவிட்டால் அந்த மாதத்தில் வரும் திங்கட்கிழமையன்று செய்யலாம்) பெரிய கோலமிட்டு, அதிலே 100 பெரிய அகல்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு அகலிலும் 3 பூ வத்திகள் வைத்து நல்லெண்ணெய் ஊற்றி, பூக்கள் கொண்டு அலங்கரித்து அழகாக அமர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

கார்த்திகை மாதம், சிவபெருமானுக்கும், விஷ்ணுபகவானுக்கும் முக்கியம். அதனால், நாம், சிவபெருமானுக்கும், விஷ்ணுபகவானுக்கும், துளசி மாடத்துக்கும் பூஜை செய்து, பிறகு விளக்கு பூஜை செய்து, பிறகு அந்த அகல் விளக்குகளை ஏற்ற வேண்டும். விஷ்ணு சஹஸ்ரநாமம், லிங்காஷ்டகம், வில்வாஷ்டகம் படித்து முடித்து, சுமங்கலிப் பெண்களுக்கும், மஞ்சள், குங்குமம், தாம்பூலம், பிரசாதம் கொடுத்து அவர்களை அன்புடன் வழியனுப்பி வைத்தால் லக்ஷ்மி கடாட்சம் பொங்கும்.

இந்தப் பூஜை செய்வதன் பலன் என்னவென்றால், நாம் முன் ஜென்மங்களில், தெரிந்தோ, தெரியாமலோ, செய்த பாவங்கள் தொலைந்து, புண்ணிய பலன் கிட்டும். மறுபிறவி இல்லாத முக்தி நிலை கிடைக்கும்.

கவனத்தில் கொள்ளவேண்டியது:

'பூ' வத்திகளை, மாதவிலக்கு நாட்களிலும், திங்கட்கிழமைகளிலும் செய்தல் கூடாது. சாயங்கால வேளைகளில் 6 மணியில் இருந்து 7 மணி வரை செய்யக்கூடாது. இந்த வத்தி செய்யும்போது, ''ஓம் நமோ நாராயணா'', என்றும், ''ஓம் நமச்சிவாய'' என்றும் ஜபித்துக்கொண்டே பக்தியுடன் செய்ய வேண்டும்.

எங்கள் ஆந்திர மாநிலத்தில் பரவலாக இந்தப் பூஜை செய்யப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் செய்யப்படும் இப்பூஜையை எல்லோரும் கடைப்பிடித்து, இறையருளைப் பரிபூரணமாகப் பெறவேண்டும்.

- எ.ஜோதிலக்ஷ்மி,
சூளூர்ப்பேட்டை


Wake up to a great day. Every single day.
அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!
duroflex ©
MATTRESSES
Springtek INNER SPRING MATTRESS
FREE SUPER SOFT PILLOWS & HIGH QUALITY BED SPREAD with every Springtek mattresses
FPS The Full Prone Support System
Rush to
DUROFLEX SHOWROOMS
Chennai : Ph : 044-24321587, 24918516, 26259940, 26400740. Hosur : Ph : 04344-242958.
Coimbatore : Ph : 0422-2498359, 4372895 Trichy : Ph : 0431-2706454 & 4011664
Erode : Ph : 0424-2267809. Madurai : Ph : 0452-2621087, 3013554
Tirunelveli : Ph : 0462-2320530. Puducherry : Ph : 0413-2226360.
e-mail : mattressgallerycbe@rediffmail.com
* Conditions Apply
ALSO AVAILABLE WITH SELECTED FURNITURE DEALERS

கவிதை



ப்ளீ...ஸ்!


எதிர் வீட்டு பாபுவைப் பார்
படிப்பில் என்றும் முதல்; அவன் போல் இரு;
பக்கத்து வீட்டு பாஸ்கரைப் பார்
ஓட்டப்பந்தயத்தில் முதல்; அவன் போல் இரு;
மாடி வீட்டு மல்லிகாவைப் பார்
பாட்டுப் போட்டியில் முதல்; அவள் போலாவது இரு;
இப்படியே என்னை யாருடனோ ஒப்பிட்டுப்
பார்க்கும் என் இனிய அம்மா அப்பாவே, என்னை
எனக்காக, நானாய் என்று பார்ப்பீர்கள்?
எனக்கும் ஒப்பிடத் தெரியும்;
பென்ஸ் கார் ஓட்டும் வெங்கிட்டு மாமாவோடும்;
ஜிம்முக்குப் போய் ஸ்லிம்மாய் இருக்கும் கலா ஆன்ட்டியோடும்.
ஆனால் எனக்கு சைக்கிள் வைத்திருக்கும் என் அப்பாவும்
குண்டாயிருக்கும் என் அம்மாவும்தான்
பிடிக்கும்; வேண்டும்
நீங்கள் நீங்களாய் இருக்க நான் விரும்பும்போது
நான் நானாய் இருக்கவும் விடுங்களேன்! ப்ளீ...ஸ்!

-பிரஸன்னா வெங்கடேஷ், நவி மும்பை

அப்பா ஏன் இவ்வளவு சோகமாக இருக்கிறார்? ஊரில் இருந்து வந்ததிலிருந்து எப்படியோ இருந்தார். நான் எதுவும் கேட்கவில்லை. ஆனால், என் முகத்தை நிமிர்ந்து பார்க்காமலே அவர் பேசியதும் உட்கார்ந்திருப்பதும் எனக்குச் சங்கடமாக இருந்தது.

அம்மா இறந்த பிறகு நான் அதிகமாக பிறந்த வீட்டுக்குச் செல்வதில்லை. என் குடும்பம், அன்பான கணவர், அழகான குழந்தைகள் என்று மகிழ்ச்சியாகப் போய்க் கொண்டிருக்கிறது. என் மூத்த மகள் பாரதிக்கு பத்து வயசு. பள்ளியை விட்டு வந்தவளை, ''தாத்தாகிட்ட போய்ப் பேசு என்றேன்...'' பார்த்ததும் அப்பா ஓடி வந்து, ''வாடா, பாரதி குட்டி!'' என்று அணைத்துக் கொண்டார்.

நான் அவருக்கு முதல் குழந்தையாகப் பிறந்தபோது அப்பாவும், பாட்டியும் படுத்திய பாட்டை அம்மா அடிக்கடி சொல்லியிருக்கிறாள். அப்பா, அம்மா முகத்தைக் கூடச் சரியாகப் பார்க்க மாட்டாராம்.



கண்டவன்!



குழந்தை பிறந்த போது பார்த்த தோடு சரி. அதற்கப் புறம் வந்து பார்க்கவே இல்லையாம். இவர்கள் வந்து அழைத்துச் செல்வார்களா மாட்டார்களா என்று அம்மாவும், பாட்டி வீட்டாரும் கவலைப்பட்டுக் கொண்டே இருந்தனராம்.

''பொட்டப் புள்ளைய பெத்து வச் சிருக்கா... அவளைப் போயி மெதுவா கூட் டிட்டு வந்தா... போதும் போ...'' இது பாட்டியின் ஆரவாரம்.

நான் வளர்ந்ததை அப்பா பார்த்தே இருக்க மாட்டார் என்று நினைக்கி றேன். எனக்குப் பிறகு பிறந்த தம் பிக்கு எப்போதும் ராஜமரியாதை. அப்பாவும், பாட்டியும் அவனை கொஞ்சிக் கொண்டே இருப்பார்கள். அவனை மட்டும் இங்கிலீக மீடியத் தில் படிக்க வைத்தார் அப்பா.

''அம்மா, எனக்கும் ஆசையா இருக்கும்மா...'' என்று கெஞ்சி னேன்.

''போதும்... போதும் உனக்கு இந்தப் பள்ளிக்கூடமே போதும்... நீ படிச்சு சம்பாதிச்சு நாளைக்கு எங்களுக்கா கொடுக்கப் போற?'' - பாட்டி கத்துவாள்.

அம்மா என்னை அணைத்துக் கொள்வாள்.



வெ. பாலசரசுவதி

''அப்பா... எழுந்து வந்து சாப்பிடுங்கப்பா.. உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமேன்னு கோழிக் குழம்பு வெச்சிருக்கம்பா...''

அப்பாவோடு அதிகம் ஒட்டாமல் வளர்ந்திருந்தாலும், அம்மாவோட அதிக ஒட்டுதலினால் குடும்ப உறுப்பினர்களுக்கு பிடித்தது, பிடிக்காதது அவர்கள் குண நலன்கள் என அறிந்து வைத்திருந்தேன்.

அப்பாவிற்குத் தட்டில் சாப்பாடு போட்டு குழம்பு ஊற்றினேன். அருகில் அமர்ந்து அவர் சாப்பிடுவதையே வாஞ்சையாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பா அழுகையை அடக்கிக் கொண்டே சாப்பிடுவது போல் இருந்தது.

''ஏய், மரகதா! டவுனுக்கு போயிட்டு வந்தேன். இத பையனுக்கு குடு...'' என்பார். தம்பிக்கு மட்டும் சில்லி சிக்கன் பார்சல்! அம்மா மனசுக்குக் கேட்காமல் எனக்கும் கொஞ்சம் கொடுப்பாள். ''அம்மா, இன்னும் கொஞ்சம் சாப்பிடணும்போல இருக்கும்மா...'' என்று அழுவேன். தம்பி எடுத்துக் கொண்டு ஓடி விடுவான்.

''போதும், போதும் பொட்டப்புள்ளைக்கு.. சீக்கிரம் வயசுக்கு வந்துட்டா. அதுவும் செலவுதான்!'' பாட்டி கத்துவாள். எனக்கு பாட்டி மீது எரிச்சலாய் வரும். அம்மா, பாட்டிக்கும் அப்பாவுக்கும் தெரியாமல் என்னிடம் காட்டிய அன்பை என்னால் மறக்கவும் முடியாது. மறைக்கவும் முடியாது. அம்மா எப்படி அப்பாவிடமும் தம்பியிடமும் அன்பு காட்டினாளோ, அப்படியேதான் நானும் இருந்தேன். நான் அவர்களை வெறுத்ததே இல்லை.

அப்பா சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ''இன்னும் கொஞ்சம் சாதம் போட்டுக்குங்கப்பா...'' என்று சுடச்சுட சாதம் பரிமாறினேன். எனக்கு ஏனோ பழைய சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது

அன்று அம்மா சாப்பாடு பரிமாறிக் கொண்டிருந்தாள். பாட்டி பக்கத்தில். ''வயசுக்கு வந்தாச்சு. இனி பள்ளிக்கோட படிப்பை நிறுத்திப் போடு... படிப்பெல்லாம் போதும்...''

''அம்மா, நான் படிக்கணும்மா...''

''போதும்... போதும்... கண்டவனுக்குச் சம்பாதிச்சுப் போடறதுக்கு இந்தப் படிப்பு போதும்'' பாட்டிதான் எப்போதும் பேசுவாள். அப்பா எதுவும் பேசாமலேயே அதைச் செயல்படுத்துவார்.

''தாய் சொல்லைத் தட்டாதே... மனைவி சொல்லைக் கேட்காதே...'' என்றே பாட்டி அப்பாவிற்குத் தாய்ப்பால் ஊட்டியிருப்பாளோ..?'' அம்மா எவ்வளவு சொல்லியும் என் படிப்பு நிறுத்தப்பட்டது.

என் திருமணத்தின் போது அப்பா ஒவ்வொரு செலவுக்கும் திட்டிக் கொண்டேதான் செய்தார். அம்மா எனக்காக அழுது அடம்பிடித்து முடிந்தவரை செய்தாள்.




மெழுகுவத்தியையும், தீப்பெட்டியையும் வீட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைக்க வேண்டும். அப்பொழுதுதான் மின்சாரம் தடைபடும்பொழுது, தேடிக் கொண்டிராமல் சுலபமாக எடுக்க முடியும்.

- ஜெயலக்ஷ்மி வசந்தராசன், தருமபுரி

வயதானவர்கள் காரில், பேருந்தில் நீண்ட நேரம் பயணம் செய்ய நேரிட்டால், 'கழுத்து காலர் பட்டை' (வலி இல்லாவிடில் கூட) அணிந்து கொள்ளலாம். ஒருநாள் முழுவதும் பயணம் செய்தால் கூட கழுத்துவலி தெரியாது. தூங்கினாலும் தொந்தரவு தராது.

-எம்.மனோரஞ்சிதா மனோகரன், சேலம்-6



''தோட்டமெல்லாம் என் பையனுக்குத்தான். கண்டவன் சாப்பிடறதுக்கா நான் சொத்து சேர்த்து வச்சிருக்கேன்?''

என் சிறு வயதில் இருந்து எதற்கெடுத்தாலும் என் அப்பாவும், பாட்டியும் கண்டவள் கண்டவன் என்று எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார்கள். ஆனால், என் திருமணத்தின் போதுதான் எனக்குத் தெரிந்தது அந்தக் 'கண்டவன்' எனக்கு வரப்போகும் கணவன் என்று!

அப்பா எழுந்து கைகழுவச் சென்ற போது, என் கணவர் அலுவலகத்திலிருந்து வந்து விட்டார்.

''வாங்க மாமா, நல்லாயிருக்கீங்களா... அங்க உங்க மகன், மருமகள், குழந்தைகள் எல்லாம் நல்லாயிருக்காங்களா?''

''ஏ... கவிதா உங்கப்பா, படுக்கறதுக்கு மெத்தையைப் போடு... பழம் வாங்கிட்டு வந்திருக்கேன். உரிச்சு குடு!'' என்று நன்றாய் உபசரித்தார்.

என் கணவர் என் அன்புக்குள் இருப்பவர். நான் ஒருநாளும் என் சிறு வயது கசப்பான அனுபவங்களை அவரிடம் சொன்னதில்லை. அம்மா என்னை அப்படித்தான் வளர்த்திருந்தாள். ஆனால், அப்பா என்ன நினைத்தாரோ தெரியவில்லை... மாப்பிள்ளையின் அன்பான கவனிப்பு அவருக்கு கூச்சத்தை அளித்தது போலும். அப்பாவின் அம்மாவும், என் அம்மாவும் இறந்தபின் அப்பா இரண்டு கைகளையும் இழந்தது போலத்தான் அவதிப்படுகிறார். இரண்டு பெண்களின் பலத்தில் வளர்ந்தவர் எப்படி தன் பெண் பிள்ளையை மதிக்க மறந்தாரோ என்று எனக்கு வருத்தம்.

நான் எல்லா வேலைகளையும் முடித்து விட்டு என் அப்பாவும், கணவரும் பேசிக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்றேன். அப்பா மனம் விட்டுப் பேச ஆரம்பித்தார்.

''மருமக என்னைக் கவனிக்க மாட்டேங்கறாம்மா... அவ்ளோ பெரிய வூடு... என்னைத் திண்ணையில படுக்கச் சொல்றாம்மா... இவனும் எதுவும் கண்டுக்க மாட்டேங்கறான். அவளோட சொந்த பந்தம்னு கண்டவனெல்லாம் வந்து சாப்பிட்டு நல்லாத் தூங்கி எழுந்திருச்சுப் போறாம்மா...'' என்று நிறுத்திவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்தார். 'கண்டவன்' என்ற வார்த்தை அவருக்கு உறுத்தலாயிருந்திருக்குமோ...

''அப்பா, என் புருஷன் உங்களை எதுவும் சொல்ல மாட்டாரு. நீங்க இங்கேயே இருக்கலாம்...'' என்றேன்.

அப்பா என்னை அன்போடும் மரியாதையோடும் பார்த்தார். 'பெத்த குழந்தைகளில் வித்தியாசம் பார்த்து விட்டோமே' என்று அந்தப் பார்வை மன்னிப்புக் கோரியது. ●

கேட்டதில் பிடித்தது!

ஒருவன் எண்ணெய் வியாபாரியின் வீட்டிற்குப் போய் எண்ணெய் வாங்கினான். வியாபாரி, வீட்டின் பின்புறம் 'செக்'கில் எண்ணெய் ஆட்டிக் கொண்டிருந்தார். எண்ணெயை அளந்து விட்டுக் கொண்டே, மாட்டை ஓட்டுவது போல் வாயினால் சப்தம் செய்தார். சுற்றும் முற்றும் பார்த்த இளைஞன், ''ஐயா! மாடு எதுவும் இங்கு வரலையே; ஏன் மாட்டை விரட்டுவது போல ஒலி எழுப்பறீங்க?'' என்று வியந்து கேட்டான்.

அதற்கு அந்த வியாபாரி, ''வீட்டின் பின்புறம் 'செக்கு' ஓடிக் கொண்டிருக்கிறது. அதில் கட்டப்பட்டிருக்கும் மாடுகள் சுற்றி வந்தால் தான் செக்கில் உள்ள பொருள் அரைபட்டு எண்ணெயாக வெளியே வரும். மாட்டின் கழுத்தில் மணி கட்டப்பட்டிருக்கும். அதனால், மாடு சுற்றி வந்தால் மணி ஓசை கேட்கும். மாடு சுற்றாமல் நின்று விட்டதால் ஓசை கேட்கவில்லை. அதான் மாட்டை விரட்ட ஒலி எழுப்பினேன்'' என்றார்.

இதைக் கேட்ட இளைஞன், ''ஐயா, மாடு ஒருவேளை நின்ற இடத்திலிருந்தே கழுத்தை மட்டும் ஆட்டி ஓசை எழுப்பினால் நீங்கள் மாடு சுற்றுவதாகத்தானே நினைத்துக் கொள்வீர்கள்?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டான்.



அவனைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்த வியாபாரி, ''நீ சொல்வது சரிதான்... ஆனால் மாடு உங்களைப் போல் பி.ஏ., எம்.ஏ. எல்லாம் படித்ததில்லை. அதற்கு ஏமாற்றத் தெரியாது'' என்றார்.

- *(சுகிசிவம் உரையிலிருந்து)*

- சங்கரி வெங்கட்,
பெருங்களத்தூர்



எல்.கே.ஜி. படிக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள், அவர்கள் படிக்கும் மழலைப் பாடலைப் பதிவுசெய்து வைத்துக் கொள்ளலாம். அவர்கள் பின்னால் கேட்கும் போது, தம் குரல் எப்படி இருந்தது என்று கேட்டு மகிழ் வார்கள்.

- க.உமாராணி இந்திரஜித், மதுரை

இரவில் தூக்கமில்லையா? ஒரு வாழைப்பழத்தை உரித்து, ஒரு டீஸ்பூன் வறுத்துப் பொடித்த சீரகத்தை தொட்டுக் கொண்டு இரவு சாப்பிட்டு வர ஆனந்தமான தூக்கம் வரும்.

- எஸ்.வத்சலா, சென்னை-64

விடுமுறை நாட்களில் நமது வாகனங்களுக்காக அரை மணி நேரம் ஒதுக்கி, துடைத்து சுத்தம் செய்து பராமரிக்கலாம். விரைவில் பழுது ஏற்படாது. திடீர் என்று செலவும் வைக்காது.

- பி.பாலாஜி கணேஷ், சிதம்பரம்

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

மாடர்ன் கிச்சன் வைத்திருப்பவர்கள், சிம்னியை ஆறு மாதத்துக்கு ஒருமுறை சுத்தம் செய்ய வேண்டும். இல்லாவிடில் சிம்னியில் உள்ள எண்ணெய்ப் பிசுக்கு எளிதில் தீப்பற்றிக் கொள்ள வாய்ப்புண்டு.

- வி.சஞ்சனா, சென்னை-42

கருஞ்சீரகம் (நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும்) நூறு கிராம் வாங்கிப் பொடித்து காலையில் வெறும் வயிற்றில் அரை டீஸ்பூன் தூளை, அரை டீஸ்பூன் தேனில் குழப்பி ஏழு நாட்கள் சாப்பிட, சிறுநீரகக் கற்கள் கரைந்து சிறுநீருடன் வெளியேறும்.

- பிரேமா ராஜன், ஆத்தூர்

கோயிலில், அர்ச்சனை செய்யும் போது, சில சமயம் தேங்காய் கெட்டிருக்கும். அப்போது மனசு சங்கடப்படும். முந்திரி, பாதாம், கல்கண்டு வாங்கி, அர்ச்சகரிடம் கொடுத்தால், அவர் அர்ச்சனை செய்து தருவார். அதை அங்கேயே பிரசாதமாக அனைவருக்கும் தரலாம்.

- பத்மாவதி வேங்கடம், பொன்னேரி

குழந்தைகளின் ஷூ லேஸ் அடிக்கடி தளர்ந்து விடும். ஷூ லேஸ் கட்டிய பிறகு, அந்த முடிச்சின் மேல் சிறிது தண்ணீர் தெளிக்கவும். இதனால் முடிச்சு டைட்டாகி எளிதில் அவிழாது.

- மகாலக்ஷ்மி சுப்ரமணியன், காரைக்கால்



ஜலதோஷத்தில் இருந்து காத்துக் கொள்ள மழைக் காலங்களிலும், குளிர்காலங்களிலும் வெண்டைக்காய் சாப்பிடக்கூடாது. சாப்பிட்டால் நோய் மேலும் கடுமையாகும்.

- கே.விஜயலட்சுமி, வேளாந்தாங்கல்

காய்கறிகளைத் தனித்தனியாக கவரில் வைத்து ஃப்ரிட்ஜில் வைப்போம். தினமும் ஒருமுறை கவரை திருப்பி காய்களைத் துடைத்து வைத்தால், காய்கள் உள்ளுக்குள்ளே அழுகிப் போவதைத் தவிர்க்கலாம்.

- திருமதி வாசுதேவன், தஞ்சை

ஏ.டி.எம்மில் அவசரத்திற்கு பணம் எடுத்தால் ரூ.500/-, ரூ.100/- எண்ணிக்கையிலும் வருகிறது. ரூ.50/-, ரூ.10/- எண்ணிக்கையிலும் இருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். வங்கி நிர்வாகங்கள் கவனிக்குமா?

-பெ.சுமதி, கல்பாக்கம்



இவை எல்லாமே ஆஹா 50 தான்!

அதிக உஷ்ணத்தினால் பெண்களுக்கு ஏற்படும் நீர்க்கடுப்புக்கு ஒரு டேபிள் ஸ்பூன் தனியாவையும், ஒரு டேபிள் ஸ்பூன் சோம்பு அல்லது சீரகத்தையும் சேர்த்து ஒரு தம்ளர் தண்ணீரில் கொதிக்கவிடவும். இதனுடன் கற்கண்டைச் சேர்த்து ஒருநாளைக்கு இரண்டு முறை குடிக்க உடனே குணம் தெரியும்.

- பிரபா டாக்கர், ஹைதராபாத்-4

ஊசியில் நூல் கோக்க பலமுறை திணறவேண்டியிருக்கிறது. எப்போதும் இரண்டு ஊசிகளில் வெள்ளை, கறுப்பு நூல்களைக் கோத்து வைத்திருந்தால், உபயோகமாக இருக்கும்.

- மஞ்சுதேவன், மும்பை

மிக்ஸி ஜார்களை அரைத்தவுடன், அதிக நேரம் சிங்கில் போடக் கூடாது. அரைத்ததும் ஜார்களை உடனே அலசி தனித்தனியே கவிழ்த்து வைத்து உலரவிட வேண்டும். அப்படிச் செய்தால் நீண்ட நாள் உழைக்கும்.


- ஆர்.சுபா ராமகிருஷ்ணன், ஈரோடு.

பெண்கள் வெளியில் நடந்து செல்லும்போது எப்போதும் குடையை விரித்துக் கொண்டு நடந்து செல்லலாம். செயின் திருடர்களிடமிருந்து தப்பிக்க நம் கையிலும் ஓர் ஆயுதம் இருக்கும்.

- ஆர்.சித்ரா ராவ், தஞ்சாவூர்

www.pankajakasthuri.in

PANKAJAKASTHURI
for life. for ayurveda



ப்ரீத் ஈஸி
ஷுகர் ஃப்ரீ மாத்திரைகள்
உணவுக்குப் பின் ஒவ்வொரு நாளும் இருமுறை



ப்ரீத் ஈஸி
சிரப்
உணவுக்குப் பின்
ஒரு வேளைக்கு 1 டேபிள் ஸ்பூன்
ஒரு நாளைக்கு 3 வேளைகள்.



ப்ரீத் ஈஸி
க்ரான்யூல்ஸ்
உணவுக்குப் பின்
ஒரு நாளைக்கு 2 முறை
1 வேளைக்கு 1 டேபிள் ஸ்பூன்.

100% இயற்கையானது | பிரிசர்வேடிவ்கள் ஏதும் இல்லை | பக்க விளைவுகள் அற்றது | பிற மருந்துகளுடன் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தாது |

இது கொஞ்சம் வருத்தத்தக்க உண்மைதான். சாதாரணமாக பலர், மருந்தின் முழுப்பலன் தெரிவதற்கு முன்பே, அந்த மருந்தை நிறுத்தி விடுகிறார்கள். நீண்ட காலமாய் சுவாச சம்பந்தமான பிரச்சினைகள் இருப்பவர்கள் கூட இவ்வாறு செய்கிறார்கள்.

நீண்ட காலமாக சுவாச சம்பந்தமான பிரச்சினைகளினால் அவதிப்படுபவர்களுக்கு, ஆயுர்வேத முறையில் உள்ள, மிகச் சிறந்த சக்தி வாய்ந்த நிவாரணம் ப்ரீத் ஈஸிதான் என்று சொல்லலாம். நமது சுவாச உறுப்புகளில், பிரச்சினைகள் ஏற்படுத்தக் கூடிய கிருமிகளை முற்றிலும் நீக்கிவிடுகிறது இது. உடலுக்கு வலுச் சேர்த்து, நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கிறது. பல நாட்களாக சுவாசப் பாதையில் ஏற்பட்டிருக்கக் கூடிய பாதிப்புகளையும் முற்றிலும் நீக்கி, ஆரோக்கியமாக ஆக்கிவிடுகிறது.
நல்ல பலன்கள் கிடைக்க, கொடுக்கப்பட்டுள்ள அளவில், ப்ரீத் ஈஸியை குறைந்த பட்சம் 6 மாதங்களாவது எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று, சுவாச சம்பந்தமான பிரச்சினைகளால் நீண்ட காலமாய் அவதிப்படும் லட்சக் கணக்கான மக்கள், ப்ரீத் ஈஸியையே நம்புகிறார்கள்.

22 ஆண்டுகளாய், காலத்தை வென்று நிற்கிறது. பயன்படுத்திப் பாருங்கள். நீங்களும் அதை முழுமையாய் நம்புவீர்கள்.

சுவாச சம்பந்தமான பிரச்சினைகளால்

நீங்கள் நீண்ட நாட்களாக அவதிப்படுகிறீர்களா?

நீங்களும் இதே தவற்றை செய்கிறீர்களா?

திறன்மிக்க செயல்பாட்டிற்கு
6 மாதங்கள்



HAMMER



ஆண், பெண் இருவருக்குமே திருமணம் என்னும் பந்தம் முக்கியமானது. அறிமுகம் இல்லாத இரண்டு அன்னியர்கள் சேர்ந்து வாழத் தொடங்கும் போது, மிகுந்த நெருக்கத்தால் சில சமயம் திணறலே ஏற்படுகிறது. அதே நேரத்தில் விலகிப் போனாலும் வலியைத் தருகிறது. திருமணம் என்பது நமது வாழ்க்கையை இன்பமயமாக ஆக்கக்கூடியது. அதே நேரத்தில் அதிக சிக்கல் நிறைந்ததும் கூட. சேர்ந்து பயணம் செய்யக்கூடியது. சமயங்களில் வெவ்வேறு பாதைகளில் செல்ல ஏங்க வைப்பது - வாழ்க்கையை ஆக்கவும், அழிக்கவும் சக்தி படைத்த இந்த உறவைப் பலப்படுத்தக் கூடிய பதில்கள் ஸ்வாமி சுகபோதானந்தாவிடமிருந்து...

ஒரு பெண் திருமணத்துக்குப் பின், தான் பிறந்து வளர்ந்த சூழ்நிலையையும், மனிதர்களையும் விட்டு, புதிய வாழ்க்கையைப் புதிய உறவுகளோடு தொடங்குகிறாள். இது சமுதாயத்தின் நிர்ப்பந்தத்தால் மட்டும்தானா, அல்லது வேறு வலுவான காரணம் இதற்கு உண்டா? ஏன் பெண்ணுக்கு மட்டும் இப்படி?

நிர்ப்பந்தம் என்பதை விட, சமுதாயத்தின் அமைப்பு என்று சொல்லலாம். இந்திய

வாழ்வியல் ஞானி சுவாமி சுகபோதானந்தா

உள்ளம், உறவு, உலகம்!

சமுதாயத்தில் பெண்ணானவள், திருமணத்தால் ஏற்படும் புதிய உறவுகளோடு வளர்வதென்பது வழக்கமாக இருக்கிறது. உண்மையில், கணவன்-மனைவி இருவருக்குமே சவால்களும், லட்சியங்களும் இருக்கின்றன. இந்தக் காலத்தில் இருவருமே வேலைக்குச் செல்லும் சூழ் நிலையில், நகர வாழ்க்கை மாறி வருகிறது. இருவரும் அதிக சுதந்திரத்தோடும், சிறிய குடும்பமாகவும் செயல்படுவதால், சமநிலை காணப்படுகிறது.

அதனால், ஒரு பெண், புகுந்த வீட்டை மனமுவந்து ஏற்றுக்கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல் சமாளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அலுவலகத்தில் வேற்று மனிதர்களான சக ஊழியர்களோடு ஒத்துழைத்து தன் கடமையைச் செய்வது போல, புகுந்த வீட்டு உறவுகளைச் சமாளிப்பதும் அவசியம்தான். இப்படிச் சாதுர்யமாகச் சமாளித்து வாழும் கலையைக் கற்க முயலாத போதுதான் பிரச்னைகள் தோன்றுகின்றன.

எதையுமே பிரச்னையாகப் பார்க்காமல், சாதிக்க வேண்டிய மற்றொரு சவாலாக அணுக முயன்றால், சுலபமாக இருக்கும். இருக்கும் சூழ்நிலையை ஏற்றுக் கொண்டு, அதில் முன்னேற்றம் காண்பதுதான் சரியான அணுகுமுறை. உற்றார் உறவினரை ஆட்கொண்டு, குடும்பத்தை அதிக அன்பும், அழகும் கொண்டதாக ஆக்க முயல்வது புத்திசாலித்தனம். அதை நிர்ப்பந்தமாக நினைக்காமல், மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுங்கள். சம உரிமையை நோக்கிச் செயல்படாமல் கடமைகளைப் பூர்த்தி செய்வதில் மனதைச் செலுத்துங்கள்.

உண்மையில், பெண்களுக்குத்தான் விட்டுக் கொடுக்கும் மனமும் வலிமையும் அதிகம் இருக்கிறது. அதனால்தான் அவர்களுக்கு அதைச் சார்ந்த கடமைகளும் பொறுப்புகளும் அதிகமாக உள்ளன. குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பேறு அவர்களிடம் இருப்பது அவர்களை மேலும் வலிமையாக்குகிறது.

வெற்றிகரமான திருமணங்களுக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் ரகசியம் என்ன?

சரியில்லாததை எண்ணிப் புலம்புவதை விட்டு, முழு மனதோடு செயல்படும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதிருப்தி அடைந்து புகார் செய்து கொண்டே இருப்பதால்தான் திருமணங்கள் தோற்கின்றன. அடுத்ததாக, நம்மில் எல்லாருக்கும் ஆறுதல் தரும் விஷயங்களும் இருக்கின்றன; அதிருப்தி தரும் விஷயங்களும் இருக்கின்றன. ஆரம்பக் காலத்தில், அதிருப்தி தருவனவற்றை முடிந்தவரை தவிர்த்து, ஆறுதல் தரும் விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். மூன்றாவதாக,



இதயத்தை இதமாய் வருடும் தொடர்! 2

ஒருவர் தன் உணர்ச்சிகளை வேண்டியவர்களிடம் பகிர்ந்து கொள்ளும்போது, அது அவர்களது மனஇறுக்கத்தைத் தளர்த்தும். மனதில் இருக்கும் பாரத்தை வெளியில் கொட்டி விடுவதால், சுமை குறைந்து விடுகிறது.

எதிர்பார்ப்புகளில் சிக்குண்டு தவிக்காமல், உறவு முறைகளை பலப்பட நாம் என்ன தர வேண்டும், நம்மால் என்ன செய்ய முடியும் என்று பார்ப்பதுதான் நல்லது.

ஒரு திருமணம் இன்பமாக இருக்க நாம் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது. இதில், செய்யக்கூடாதது என்ன? தம்பதியர், எந்த ஒரு விஷயத்தை ஒதுக்கினால், திருமணமானது பலப்படும்?

உறவுகளில் மனபேதங்கள் வருவது சாத்தியம் என்பதை முதலில் புரிந்து கொள்ளவும். சொல்லப் போனால் மன வேற்றுமைகள் இல்லையென்றால்தான் அதிசயம். இந்தச் சிறிய வேற்றுமைகள், சண்டையாக மாறாமல் பார்த்துக் கொள்வது முக்கியம். முரண்பாடாக நினைக்கத் தொடங்கி விட்டால், வலிதான் மிஞ்சும். பிறகு இந்த வலியையே பிரதானமாக்கி, மனம் அதையே அசைபோடச் சொல்லும். இது அதிகரித்தால், காயங்கள் மேலும் ரணமாகி பழி தீர்ப்பதற்கும், குத்திக் காட்டுவதற்கும் மனம் நினைக்கும். இந்த நிலை வராமல் இருக்க வேண்டும் என்ற உணருதலோடு, விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். அப்போதுதான் வேற்றுமைகள் விரிசலாக மாறாமலிருக்கும்.

கணவன், தன் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாமல், அவரைப் பெற்றவன் என்ற கடமையோடு, தாய்க்கே பரிந்து பேசுவதாக மனைவி புகார் செய்கிறாள். ஆனால் அவனது தாயோ, மனைவி பக்கம் நியாயமிருந்தாலும், மகன் மனைவிக்குப் பரிந்து பேசி விட்டால் காயப்படுகிறாள். இதில் சம்பந்தப்பட்ட மனைவி, கணவன், அவர் தாய் என்ற மூவரும் இந்த நிலைமையை எப்படி அழகாகக் கையாள வேண்டும்? ஒவ்வொருவரும் மற்றவர் மெச்ச வாழ்வது சாத்தியமா?

வலியையும், கோபத்தையும் என்னதான் நியாயப்படுத்த முயன்றாலும், அது நமக்கே பங்கம் விளைவிக்கக் கூடியது என்பதை நாம் உணர வேண்டும். ஒருவர் மனதளவில் பாதிக்கப்படும் போது, காயங்களும், அதனால் தழும்புகளும் உண்டாகின்றன. இதன் பிறகு எல்லாவற்றையும் அந்தக் காயத்தின் கோணத்திலிருந்தே பார்க்கவே முயல்வோம். ஆக, அந்தச் சூழ்நிலை தரும் வலியை விட, நாம் எதிர்கொள்ளும் முறையால் ஏற்படும் வலி அதிகமாகிறது. இந்தத் தெளிவையும், உணருதலையும் கொண்டு நாம் பழக வேண்டும்.

ஒருவர் தன் உணர்ச்சிகளை வேண்டியவர்களிடம் பகிர்ந்துகொள்ளும்போது, அது அவர்களது மனஇறுக்கத்தைத் தளர்த்தும். மனதில் இருக்கும் பாரத்தை வெளியில் கொட்டி விடுவதால், சுமை குறைந்து விடுகிறது. மற்றவர் தன் மனத் தாங்கல்களைக் கூறும்போது, அத்தகைய இறுக்கத்தை இறக்கி வைக்கக்கூடிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று நாம் கொள்ள வேண்டும்.

சக குடும்பத்தினரிடத்து மனம் நிறைய அன்போடு, அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய செய்திகளை, உணர்ச்சிப்

பூர்வமாக அணுகாமல், புத்திசாலித்தனமாக யோசித்துச் செயல்படுங்கள். இதனால், காயமில்லாமல் அதிலிருந்து வெளியே வரலாம். அதோடு, அடுத்து என்ன செய்யலாம் என்ற வழியும் தன்னால் பிறக்கும். நம் மனதில் காயத்தை ஏற்படுத்திக் கொண்டு, அந்தக் கோணத்திலேயே சிந்திக்கும்போது, நிலைமை இன்னும் மோசமடைகிறது. அதுவே ஞானத்தோடு செயல்பட்டால், பாரமெல்லாம் விலகி தெளிவு பிறக்கும்.



திருமணத்தைப் பொறுத்தவரை, மகிழ்ச்சி என்பதை விட, சவால்கள் நிறைந்தது என்ற எண்ணம்தான் இளைய தலைமுறையிடம் மேலோங்கிக் காணப்படுகிறது. ஆண்-பெண் இருவரிடமுமே பொறுமை என்பதும் குறைந்திருக்கிறது. இவற்றால், திருமணங்கள் உடையும் நிலை அதிகரிக்கிறது. பெற்றோர் என்ற முறையில், அடுத்த தலைமுறையின் மனதில், திருமணம் என்ற இந்த உன்னதமான பந்தத்தில் எப்படி நம்பிக்கையை உண்டாக்க வேண்டும்?

பெற்றோருக்கும் சரி. இளையதலைமுறையினருக்கும் சரி, முக்கியமான இரண்டு தேவைகள் உண்டு. பாதுகாப்பான தேவை, பாதுகாப்பின்மைக்கான தேவை. முரண்பாடாகத் தோன்றினாலும், பாதுகாப்பின்மைக்கும் தேவை இருக்கிறது. சவால்களைச் சந்திப்பது, துணிகரமானச் செயல்களில் ஈடுபடுவது. அபாயங்களை தைரியமாக எதிர்கொள்வது போன்ற பாதுகாப்பின்மையைக் குறிக்கும் தேவைகளைச் சரியான முறையில் பார்ப்பது அவசியம்.


வயது ஆக, ஆக, பாதுகாப்பையும், நிம்மதியான வாழ்க்கையையும் நோக்கி நம் தேவை செல்கிறது இல்லையா? ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தீர்களானால், இவை உங்களுக்குப் புரியும். ஆனால் உண்மையில் ஆழ்ந்து சிந்திக்கத் தவறுவதால், நம் வாழ்க்கைக்கு ஆதாரம் எது என்பதே நமக்குப் புரியாமல் போய்விடுகிறது.

திருமணத்தை புத்திசாலித்தனமாக ஏற்கப் பழகிக் கொள்ளுதல் அவசியம். அதோடு, சவால்கள்-அமைதி என்ற இரண்டு முரண்பாடுகளும் சேர்ந்த வாழ்க்கைதான் சுவாரஸ்யமாக இருக்கும் என்ற ஏற்புத்தன்மையும் தேவை. உற்சாகம் இருக்கும் அதே நேரத்தில் விட்டுக் கொடுத்து அமைதியை நிலைநாட்டும் மனோபாவமும் தேவை. இந்தக் கோணத்தில் இளம்தலைமுறையினர் சிந்திக்கத் தொடங்கி விட்டால் கலக்கம் இல்லாமல், சுகம் உண்டாகும்.

தொகுப்பு :

உஷா ராமகிருஷ்ணன்

நிறுவனங்கள், மற்றும் பொது மேடைகளில் சுவாமிஜியின் உரைகளுக்கும் அவரது நூல்கள் பற்றிய விவரங்களுக்கும் www.prasannatrust.org என்ற இணையதளத்தை அணுகுங்கள்.



இப்போதெல்லாம் நிறைய பேருக்கு இளம்பருவத்திலேயே நரைக்க ஆரம்பித்து விடுகிறது. அது வெளியே தெரியாமல் இருக்க டை, ஹேர் கலரிங் என்று செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். ஹேர் கலர் என்பது கொஞ்சம் அதிகம் செலவு வைக்கும் சமாச்சாரம். அதனால் டையே போதும் என்று நினைப்பவரா நீங்கள்? நீங்க மிகுந்த எச்சரிக்கையாகக் கடைபிடிக்க வேண்டிய விதிகள் இதோ!

'டை' அடிக்கப் போறீங்களா?

டை (dye) பாக்கெட்டுகளில் மருதாணியும், நெல்லிக்காயும், ஆலோவீரா படமும் போட்டிருந்தாலும், அதில் சேர்த்திருக்கும் ரசாயனத்தின் பெயர்களை மட்டும் பொடி எழுத்தில் போட்டிருப்பார்கள். அதைப் படித்துப் பார்த்து முடிந்தவரை அதிகம் ரசாயனம் கலக்காத, சிறிது நேச்சுரலான ஹேர் டை மட்டும் வாங்கவும்.

முதன் முதலில் உபயோகிக்கும்போது அந்தப் பாக்கெட்டில் குறிப்பிட்டபடி உபயோகித்துப் பார்க்கவும். அலர்ஜி எதுவும் ஆகவில்லை என்று தெரிந்து கொண்டு பூசவும்.

நன்கு ஷாம்பூ போட்டு அலசி, வாரிய முடியில் மற்றொருவரின் உதவியோடு டை போட்டு நன்கு காயவைத்து சீப்பால் வாரி பாக்கெட்டில் குறிப்பிட்டுள்ள நேரம் மட்டும் ஊறிக் குளிக்க வேண்டும். டை போட்டு இரவு முழுவதும் ஊறி மறுநாள் குளிக்கக் கூடாது. அந்த ரசாயனம் மண்டையில் இறங்கி இரத்தத்தில் கலந்து ஆபத்தாகி விடக்கூடும்.

அதே போல் குளிக்கும்போது கண்டிப்பாக உச்சந்தலையில் நீர் ஊற்றக் கூடாது. அப்படிச் செய்தால் விரைவிலேயே கண்கள் பாதிப்படையும். தலைமுடியை முன் பக்கமாகப் போட்டு தலைகுனிந்தபடியே தலைமுடியை அலச வேண்டும்.

குளித்தவுடன் இறுதியில் டீ டிக்காஷன், எலுமிச்சைச் சாறு கலந்து டை போட்ட கூந்தலில் ஊற்றி, நன்கு பரவலாகத் தேய்த்து நீர் ஊற்றி அலசவும். கூந்தல் வறண்டு போகாமல் பளபளவென நன்கு சீவ வரும். டை போடும் நாளில் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். அப்போதுதான் டையில் இருக்கும் ரசாயனத்தின் வீரியம் குறையும்.

அதே போல் அடிக்கடி 'டை' போடக் கூடாது. 'டை' போடப் போட கூந்தல் இன்னும் அதிகமாக நரைக்க ஆரம்பித்து விடும். விதிகளை எச்சரிக்கையுடன் பின்பற்றி, கூந்தலைப் பராமரிக்கவும்.

- கலைவாணி, இராசிபுரம்



Whirlpool
Get spoilt for choice!
Distribution DES
Ensures uniform heating and perfect cooking
Microtawa™
Heats up to 210°C in two minutes and uses less oil
Concealed Quartz Grill
Heats 5 times faster and saves power
CRISP® Mode
Microtawa™ + Grill for better crisping and browning
Jog Dial
Rotate the knob to alter time even while cooking
Family Chef FT 337
27L Convection
Interesting khaana. Rozaana.
Jet Chef JT 368
31L Convection + Microtawa™
இந்த தீபாவளி திருநாளில் வேர்ல்பூல்
பொருட்களை வாங்கி, நிச்சயப் பரிசைப் பெற்றிடுங்கள்!
Reebok T-shirt Worth Rs. 1799/-
Starterkit worth Rs. 1299/-
26 piece Yera Dinner Set Worth Rs. 1599/-
Cookery Demo CD
Service
ek jodi kapda
இந்த பண்டிகை சீசனில்
உங்களின் பழைய துணிகளை
தானமாக அளித்திடுங்கள்..
ஏழை எளியவர்களின் முகங்களில்
புன்னகை மலரச் செய்யுங்கள்..
To give clothes, log on to www.ekjodikapda.com
or SMS <EJK> to 58558 or call us at
1860-180-4558/6000-8558*
CHENNAI : Jagan: 97910 73229 | Anant: 98417 04045 | Gowrishankar: 96000 13735 | Kumaran: 92824 11442 | Gautham: 98407 10716 | COIMBATORE & ERODE: Murugan: 99408 91048 | Vimal: 98438 85343 | MADURAI: Madan Kumar: 98421 51617 | Senthil Kumar: 92824 09226 | PONDY & CUDDALORE: Suresh: 92823 45304 | SALEM: Karthikeyan - 92824 01663 | TIRUNELVELI & NAGERCOIL: Sivan Pandian: 92824 24429 | TANJORE & TRICHY : Madan: 92824 46492 | Venkat: 94428 17046 | VELLORE Rajesh: 92823 45144
Whirlpool® Your magic in homemaking.

அனுஷா நடராஜன்



எஸ்.விஜயராணி, ஓசூர்-2.

நம் சமுதாயத்தைப் பாதிப்பதில் முதலிடம் யாருக்கு? அரசியல்வாதிக்கா? சினிமாக்காரர்களுக்கா? ஆன்மிகவாதிகளுக்கா? இப்படி ஒரு பட்டிமன்றம் நடத்தி, உங்களை நடுவராகப் போட்டால்...

நான் அதிகம் பாதிக்கப்படுவேன்!

எஸ்.யோகாம்பாள், பெங்களூரு

பிரபல எழுத்தாளர் ஆர்.சூடாமணி மறைந்து விட்டாரே?

''பல வருடங்களாக ஃபோனிலேயே பேசிக் கொண்டிருக்கிறோமே... நேரில் உங்களைப் பார்க்க ஆசை!'' என்று நான் வாய்விட்டு கேட்ட ஒரே பெண்மணி இவர்தான்.

''வாங்க!'' என்று சொன்னாரே தவிர, என்னைக் கூப்பிடவில்லை. அவரைப் பற்றிய பர்சனல் கேள்விகளுக்கும் மௌனம்தான் பதிலாக வரும். ஃபோட்டோ கூடத் தர மாட்டார். ரொம்பத் துருவிக் கேட்டதில், அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதும், மணமாகாத மூத்த சகோதரியுடன் இருப்பதாகவும் சொன்னார்.



இது நியாயமா

ஒரே ஒரு கதையை எழுதினாலே, ''நான் ரைட்டர் ஷோ அண்ட் ஷோ பேசறேன்!'' என்று ஆரம்பிக்கும் இந்த உலகில், ஒழுக்கமான, உயிர் ஜ்வாலிக்கும் எழுத்துகளுக்குச் சொந்தக்காரியாக இருந்தும் எத்தனை அடக்கம்? பணிவான பேச்சு!

என் கவலையெல்லாம்... நல்ல சிறுகதைக்கு இனி எங்கே போவது?







பானு பெரியதம்பி, சேலம்-30

காமன் வெல்த் கேம்ஸின் ஆரம்ப விழா பார்த்தீங்களா?

'ஸ்வாகதம்' என்று ஹரிஹரன் பாடிய பாடலுக்கு எண்ணற்ற குட்டீஸ் களின் 'வணங்கும் கரங்கள்' போன்ற வடிவமைப்பில் குதியாட்டம் போட்டது ஆஹா!

பாண்டிச்சேரியைச் சேர்ந்த கேசவ் என்ற குட்டிப் பயல் நடு நாயகமாய் அமர்ந்து, பெரிய வித்வானின் தோரணையோடு கனகச்சிதமாக தபலா வாசித்தது... ஓஹோ!

பெரிய வெண்மையான போர்வையின் கீழே மறைந்தபடி, ஒரே நிமிடத்தில் ராட்சச மெஹந்தி கைகளை சுறு சுறு குழந்தைகள் வரைந்து அசத்தியது... ரியலி சூப்பர்ப்!

சி.வசந்தி மதிவாணன், அரூர்-3

அனுஷா?

ஒரு பெண்ணுக்கு, ஒரு பெண்ணைப் பார்த்தே பொறாமை வருகிறதே?

தன்னை இன்னொருவரோடு ஒப்பிடுவதால் வரும் சிக்கல் இது. ''அவளால் முடிகிறது. நம்மால் முடியவில்லையே!'' என்கிற ஏக்கமும் இயலாமையும் பொறாமையாக வெளிப்படுகிறது. நம்மைப் போல் இன்னொருவர் இருக்க முடியாது என்பதே நமக்குப் பெருமை!

செந்தமிழ் ராம், செம்பொன்

அனுமேடம், நானும் ஒரு சினிமா ரசிகைதான். ஆனால் சமீபத்தில் ஒரு படம் ரிலீஸான போது, ரசிகர்கள் நடந்து கொண்ட விதம் மனத்தை வேதனைப்படுத்தியது. இளைஞர்கள் மட்டுமல்லாது, நடுத்தர வயசுக்காரர்களும், பெண்களும் கூட அலகு குத்திக் கொண்டது, முளைப்பாரி சுமந்தது, மண் சோறு சாப்பிட்டது... என்னை என்னமோ செய்தது.. இவர்கள் தங்கள் குடும்பத்துக்காக, பெற்

றோருக்காக, சகோதர சகோதரிகளுக்காக இப்படிச் செய்வார்களா? இதைப் பற்றிய தங்கள் கருத்து என்ன?

யார் யாரோ கோடிகளில் புரள்வதற்காக, இவர்கள் தெருப் புழுதியில் புரண்டது... கேலிக்கூத்து!

கே.பி.ஜெயந்தி, மதுரை

தன் மனவேதனையைக் கொட்டித் தீர்த்த வாசகிக்கு, ''நிதர்சனங்களை மென்றுத் தின்னப் பழகிக்கோங்க!'' என்று படு ஈஸியாக பதில் சொல்லிட்டீங்களே... இது நியாயமா அனுஷா மேடம்? இயந்திரத்தனமாக வாழ்வது தான் வாழ்க்கையா? இன்றைய இளைஞர்களுக்கு நல்லதொரு அறிவுரை சொல்லக்கூடாதா...? அப்புறம் யார்தான் திருத்துவதாம்?

ஃபோனிலும், மெயிலிலும் திட்டோ திட்டு! (எனக்குதான்!)

ஜெயந்தி... இந்தக் காலத்துப் பசங்களுக்கு நல்ல எண்ணத்துடன் அட்வைஸ் பண்ணிப் பாருங்க. அவங்க எதுவும் எதிர்த்துப் பேச மாட்டாங்க. ஆனால் நம்மை ஒரு மாதிரி ஊடுருவிப் பார்த்துட்டு, ''அப்புறம்... நம்ப ஊர்ல மழை கிழை பெய்யுதா?'' என்கிற மாதிரி ஒரு கேள்வியைக் கேட்டு விட்டுப் போய்க்கிட்டேயிருப்பாங்க! எனக்கும் ஆசைதான், கருத்து கண்ணம்மாவாக மாறி அட்வைஸ் பண்ண... ஆனால் அது படு வேஸ்ட்! அவர்களுக்கும் முதுமை வரும்; அப்பப் புரியும்!

வி.ஸ்ரீவித்யா, குடந்தை-1

உங்களிடமே உங்களுக்குப் பிடித்த குணம் எது அனுஷா?

உணவுப் பொருள், எரிபொருள், தண்ணீர், மின்சாரம் போன்றவற்றை நான் எப்போதும் வீணடிக்க மாட்டேன். ஒரு பொருளை வாங்கினால் அதை மிகவும் பயனுள்ள வகையில் உபயோகிப்பேன். அநாவசியமாக வீட்டில் சாமான் சேர்ப்பதில்லை. இலவசமாகத் தந்தாலும் தேவையற்ற பொருள்களை வாங்குவதில்லை.

மிக எளிய ஆனால் சௌகரியமான வாழ்க்கை. அதனால் எங்கள் சந்தோஷம் கூடத்தான் செய்கிறது.

சுப.நேசிகா, காயக்காடு

'எந்திரன்' பார்த்தாச்சா?

ஆஹா! லாஜிக் இல்லாத, பிரம்மாண்டமான, ஜாலி, சூப்பர் மேஜிக் ஷோ! ''ஹௌ ஈஸ் தி பிளாக் ஷிப்... மே... மே..'' இது ஒண்ணு போதுமே!

அனுராதா ரமேஷ், பாண்டிச்சேரி-4

உங்கள் கேள்வி-பதில் பகுதி பலரையும் கவர்ந்துள்ளதே... அதன் ரகசியம் என்ன?

வெரி ஸ்ட்ரெயிட்.. நோ உடான்ஸ்! ●



பொதுவாக இனிப்பு வகைகளைச் செய்யும் போது மினி ஜாங்கிரி போல எல்லாவற்றையும் சிறிய அளவில் செய்யலாம். தேவைப்படுபவர்கள் கூடுதலாக எடுத்துக் கொள்ளலாம். பெரும்பான்மையோர் டயட்டில் இருப்பதால் ஆரோக்கியம் பேணப்படும். உணவுப் பொருள் வீணாகாது.

- உமாமகேஸ்வரி, திருவெண்காடு






ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

No2-A, II Floor, மதுரா என்கிளேவ்,
பழைய எண்-95புதிய எண்.123, பெரம்பூர் நெடுஞ்சாலை, பெரம்பூர், சென்னை-600011.
தொலைபேசி எண்: 25511786 Cell: 9444035876



V.சீனிவாசன்
அமைப்பாளர்

(நாமசங்கீர்த்தனத்துடன் ஆன்மீக அன்பர்களை அழைத்துச் செல்லும் சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)

① **19.01.2011** முதல் **23.01.2011** வரை 5 நாட்கள் கொண்ட **அஹோபிலம், மந்த்ராலயம், ஸ்ரீசைலம், மகாநந்தி.** 2 x 2 டீலக்ஸ் பஸ் 35 இருக்கைகள் கொண்ட பஸ் பயணம், சாப்பாடு இரவு தங்குதல் உட்பட கட்டணம் **Rs.3600/-**

② **03.02.2011** முதல் **10.02.2011** வரை 8 நாட்கள் கொண்ட **கர்நாடக மாநில யாத்திரை மேல் கோட்டை, தலைகாவேரி, ஸ்ரீரங்கப்பட்டணம், தர்மஸ்தலா, உடுப்பி, மூகாம்பிகை, கோகர்ணம், சிருங்கேரி, கலசா அன்னபூர்ணா, பேலூர், ஹளபேடு** ஆகியவை இரயில், பஸ், சாப்பாடு உட்பட கட்டணம் **Rs.5100/-**

③ **18.02.2011** முதல் **24.02.2011** வரை 6 நாட்கள் கொண்ட **பஞ்ச ஆராமக்ஷேத்திரங்கள் (சிவ ஸ்தலங்கள்)** மற்றும் **விஜயவாடா கனகதுர்கா, சிம்மாசலம், பத்ராசலம், அன்னாவரம், துவாரகா திருமலை.** இரயில், பஸ் சாப்பாடு உட்பட கட்டணம் **Rs.3950/-**

④ **07.03.2011** முதல் **18.03.2011** வரை 12 நாட்கள் கொண்ட **காசி, கயா, அயோத்தியா, அலகாபாத், நைமிசாரண்யம், சென்னை - காசி- சென்னை** இரயில் பயணம், இதர இடங்களுக்கு 35 இருக்கைகள் கொண்ட டீலக்ஸ் பஸ் மூலமாக பயணம். **காசி, கயா** ஆகிய இடங்களில் தகுந்த பிராமணர்கள் மூலமாக பித்ரு காரியங்கள் நடத்தி வைக்கப்படும். (கட்டணம் சுமாராக **Rs.6000/-**) மேற்படி யாத்திரைக்கான கட்டணம் **Rs.7100/-**

⑤ **26.03.2011** முதல் **09.04.2011** வரை 15 நாட்கள் கொண்ட **பஞ்ச துவாரகை யாத்திரை. துவாரகை, டாகூர் துவாரகை, பேட்துவாரகை, ஸ்ரீநாத் துவாரகை, காங்கிரோலி துவாரகை மற்றும் புஷ்கர், ஜெய்ப்பூர், அம்பாஜி சோம்நாத், மாத்ருகயா, மவுண்ட்அபு** ஆகியவை இரயில் பஸ், சாப்பாடு உட்பட கட்டணம் நபர் ஒருவருக்கு **Rs.9600/-**

பங்குபெறுவீர்!!
பாக்கியவான்களாவீர்!!

டிக்கெட் மற்றும் விவரங்களுக்கு அணுகவும்.
அமைப்பாளர் **V.சீனிவாசன்** ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்.

Website: www.srimaruthitravels.com
E.mail: vsrinivasan1952@yahoo.com

ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

(An ISO 9001 - 2008 Certified Organisation Reg. No. CCPL/QMS/D1744)

72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர், (வழி) தாம்பரம், சென்னை-63. போன் : 22760612, 22762299,29710350
City Office No.7/4, வேலு தெரு, மேற்கு மாம்பலம், (அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை-600 033. போன் : 23714942

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 22 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய் தந்தையற்ற திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 150 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர். மேலும் கூடுவாஞ்சேரியில் உள்ள எங்களது குருகுலத்தில் 30 மாணவிகள் தங்கி படித்து வருகின்றனர்.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ. 1,000
• மதிய உணவு	ரூ. 1,000
• இரவு சிற்றுண்டி	ரூ. 1,000
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 1,000
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ. 1,000
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு,உடை,கல்வி)	ரூ.12,000
• உயர் கல்வி வைப்புத்தொகை (EDUCATION ENDOWMENT)	ரூ. 1,000

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் /வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்ற நாட்களில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ சாரதா சக்தி பீடம் ("SHIRI SARADHA SAKTHI PEETAM") என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில் - நிர்வாகம்

ஜாலி கற்பனை

சிவகாசிப் பட்டாசும்... சிவகாமி பேமிலியும்!

ராக்கெட் ரம்பா:

எனதருமை மாமியார். எப்பவும் தயார் நிலையில் இருக்கும் பி.எஸ். எல்.வி.ரக ராக்கெட் இது! யார் மேல், எதற்கு, எப்போது, எப்படிப் பாயும்னு கண்டுபிடிக்கவே முடியாது. பட், பாய வேண்டிய நேரத்துல கரெக்டா பாய்ஞ்சு ஒரு கை பாத்துடும்.

புல்லட் புஸ்வாணம்:

அன்பான மாமனார். எந்த ஒரு விஷயத்துக்காகவும், எந்த நேரத்திலும் வாயைத் திறந்தால் வேகமாய் வந்து விழும் புல்லட் வார்த்தைகள் (கருத்து) அத்தனையும் அருமை மாமியார் முன் புஸ்...



சரவெடி சண்முகம்: இது 'நம்ம' ஆளு. சாரி, என்னோட ஆளு! சர வெடி மாதிரி சகட்டு மேனிக்கு வார்த்தைகளை அள்ளி விடுவதில் வள்ளல். ஜாக்கிரதையா பார்த்துப் பேசாட்டி நாம் 'ஃபணால்' தான்!

சலங்கை சக்கரம் சிவகாமி: சாட்சாத் நாந்தேன்! குடும்பத்திலுள்ள அத்தனை பேருக்காகவும், மனதாலும், செயலாலும் சக்கரமாய் எப்போதும் சுழன்றுக் கொண்டிருக்கிறேனே!

ஆயிரம் வாலா அம்மு: 'செல்ல' மகள் சிங்காரி. உறவாகட்டும், நட்பாகட்டும் யாராயிருந்தாலும் மனசுல பட்டதை படீர்னு வெடிக்கிற வாயாடி. திறந்த வாயை மூடுனதா சரித்திரமே இல்லை. தூங்கும் போது கூட வாயைத் திறந்துக்கிட்டே தூங்குவான்னா பாத்துக்குங்களேன்!

பாம்பு மாத்திரை பப்லு: என்னோட அம்மாஞ்சி அழகுப் பையன். பாம்பு மாத்திரையைக் கொளுத்துனா வளைஞ்சு நெளிஞ்சு போற மாதிரி, குடும்பத்துல யாருக்காக வேணாலும் எப்பவும் அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்ளும் அற்புதப் பிறவி!

லக்ஷ்மி வெடி 'லக்ஷ்மண்' : களையான இளைய கொழுந்தனார் தான்! 'பணம்,' 'பணம்' என்று ஆளாய்ப் பறந்து கொண்டிருக்கும் பிஸினஸ்மேன். தனக்கு வரப் போற பொண்டாட்டி பேரு கூட 'லக்ஷ்மி'ன்னுதான் இருக்கணுமாம். பேரே லட்சுமியா இருக்கணும்னா 'சீரு' என்னத்த செய்யணுமோ!

- சோனா.மணிமொழி, மயிலாடுதுறை

ரூ.150/- பரிசு பெறும் பெட்டிக் கதை

தகுதி!



"ஆறடி பீரோ, டபுள் பெட் கட்டில் ஸ்ட்ராங்கா இருக்கணும். அப்புறம் டீ.வி., வாஷிங்மெஷின், ஃப்ரிஜ், டேபிள் டாப் அல்ட்ரா கிரைண்டர் எல்லாம் வாங்கிடுங்க. வெள்ளி, பித்தளை, செம்பு, வெண்கலம், எவர்சில்வர்ன்னு ரகம் ரகமாய் வாங்கிடுங்க. வெள்ளி மூணு கிலோ இருக்கணும். ஒரு கார் தந்துடுங்க. முடிஞ்சா ஒரு டூ-வீலரும் வாங்கிடுங்க" என்றாள் மகனைப் பெற்ற மகராசி.

"அப்புறம்?" என்று கேட்டார் பெண்ணின் பெரியப்பா.

"பெண்ணுக்கு அறுபது பவுன் போட்டாலும், மைனர் செயின், பிரேஸ்லெட், மோதிரம்னு மாப்பிள்ளைக்குப் பத்துப் பவுன் போட்டுடுங்க."

"சரி, இதையெல்லாம் எங்கே கொண்டு போய் வெச்சுப்பீங்க?" என்று கணபதிராமன் கேட்டதும், மாப்பிள்ளையின் அம்மா தயங்கிக் கொண்டே,

"இனிமேல் பெரிய வாடகை வீடாய்ப் பார்த்துர்றோம்" என்றாள்.

"சே... சே... அது நல்லாருக்காதே. முதல்ல பெரிசாய்ச் சொந்த வீடு, கார் ஷெட் வெச்சுக் கட்டுங்க. அப்புறம் இப்படிப் பெரிய பெரிய லிஸ்டோட வாங்க. இப்ப கௌம்புங்க" என்றார் பெண்ணின் பெரியப்பா கணபதிராமன்.

கேட்பதற்கும் தகுதி வேண்டுமே! மாப்பிள்ளை வீட்டார் என்கிற தகுதி மட்டும் போதுமோ?

- சரஸ்வதி உமேஷ், நெல்லை

serene

Retire to begin life.

Covai Property Centre - A brand name synonymous with trust and quality

- For the pastnineyears,Covai Property Centrehasdevelopedover750,000sq.ftofresidentialandcommercia prope inCoimbatore,one ofthefinestcitiesinTamilnadu.
- Promotedbyanex-serviceman,Covai PropertyCentreischaracterizedbyprofessionalism, credibility and transpare
- Thecompanyhaswonthe'MOSTECO-FRIENDLYGATEDCOMMUNITYAWARD'for the past two years in successic

Serene Pelican at Pondicherry is on the same concept of Serene Living projects. Located near Mahatma Ga Hospital on Cuddalore Road, the project will have 423 exquisitely designed villas for people above 50 years of Serene Pelican is designed to project cohesiveness of cross-cultural amalgamation of South Indian, French Ashram Architecture.

Destination Serene Pelican

Designed for those who want to spend their retirement in the lap of nature with comfort and care

Spread over 18 acres with about 1.40 acres reserved for common amenities

Located close to Mahatma Gandhi Medical College and Hospital

Excellent Specifications with Special Building Codes to suit senior living

Design Options:

Multiple Options in Villas ranging from single, two and three bedrooms. Title is free hold, subject to certain conditions.

Plot size varies from 1200 to 2400 sq ft.

Villas vary from 517 sq ft to 1676 sq ft

Cost of villas range from Rs.16 to 46.40 lacs with outstanding infrastructure and amenities.*

Bookings open

Serene Pelican
- Pondicherry



For more details, visit our web site :

Senior Care Beyond Compare

SOUNDARYAM @ IDIGARAI

ır experience in creating and managing care of Senior Citizens in Coimbatore, has taken us to ıe next level. We understand the concept of senior care. We match care with service and our facilities are NOT OLD AGE HOMES.

Project Highlights

ıundaryam @ Idigarai in Coimbatore is spread over five ıres and is 3 kms from Thudiyalur on Mettupalayam Road Coimbatore.

ırrounded by hills in the distance, pristine and eco friendly mosphere

ıudio Apartment (583 sq ft) 2BHK (890 to 1000 sq ft), ßHK (1429 sq ft) & Villas (1612 sq ft & 1676 sq ft)

ıcellent infrastructure to include Roads, Walkways, reen Belt, Storm water drains, Street Lights, RO Water, ıwage Treatment Plant, Solar Water Heaters, Tree-lined ıenues and Landscaped Gardens etc

ırdable cost of Rs.18.10 lacs, 27.60 lacs, 30 lacs, 55.15 lacs for Studio, 2BHK, 3BHK ırtments and three bedroom villas respectively

ı includes everything except registration and Service

Hidden Cost

Facilities

- Modern Club House with Lounge, Dining Room, Reading Room, Card & TV Room, Indoor Games, Kitchen, Pantry, Lift, Ramp, etc.
- Medical Centre with Ambulance
- Activity Centre
- Quarters for staff
- Guest Houses
- Resident Manager
- 24X7 Security
- Amenities include Open Air Theatre, Reading Room, access to Assisted Care Centre, Centre for Alzheimer being made available at Soundaryam Comfort Homes. Stand-by Generator for Common areas and lifts. UPS for Villas and apartments.



COVAI® PROPERTY CENTRE (INDIA) PRIVATE LIMITED

Covai Property Centre (India) Private Limited
727, Damu Nagar, Puliyakulam Main Road, Coimbatore - 641 045.
Phone : Coimbatore - 0422-2312367, 0422-6572625, 98943 17841
Chennai - 044-24463063 (Ms Gita Ramesh)

www.covaiprop.com

கிறவை கண்ணம்மா செய்யும் கறிவேப்பிலைத் துவையல், மைக்ரோ அவன் மைதிலி போட்டுக் காண்பிக்கும் மல்லி சுக்குக் காப்பி என படுசிம்பிளாக டீ.வி. 'தடபுடல் சமையல்' நிகழ்ச்சியை ஒப்பேற்றிக் கொண்டிருந்த தயாரிப்பாளருக்கு தீபாவளி ஸ்பெஷலா டைரக்டர் சங்கரை அணுகலாமே என்ற எண்ணம் ஏற்பட்டது. உடனே சங்கர் வீட்டுக்கு ஓடினார்.

புரோகிராம் டிஸ்கஷனையே ஈஃபிள் டவர் மேல்தான் பண்ணுவேன் என்று சங்கர் அடம் பிடிக்க, இந்தச் சிறப்பு நிகழ்ச்சிக்கு பசையுள்ள விளம்பரதாரர்கள் கிடைக்காமலா போய் விடுவார்கள் என்ற நப்பாசையோடு இவரும் இசையலானார்.

டைரக்டர் சங்கர்: அப்போ டேட்ஸ் எல்லாம் வாங்கிடுங்க!

தயாரிப்பாளர்: (பேரீச்சம்பழத்தை வைத்து சங்கர் ஸ்பெஷல் ரெசிபியை சொல்ல உத்தேசித்திருப்பார் என்று இவராக உத்தேசித்துக் கொண்டு) ஆஹா! வாங்கிட்டாப் போச்சு... எத்தனை பாக்கெட் தேவைப்படும்?

சங்கர் (கிராஃபிக்ஸ் இல்லாமலே முகம் கடுமையாக): என்ன ஸார் விளையாடறீங்களா? நான் கேட்டது ரஹ்மான் 'டேட்'டும், வைரமுத்து 'டேட்'டையும்!

தயாரிப்பாளர்: ஸார், நாம சினிமா படம் ஒண்ணும் எடுக்கலையே. எதுக்கு ரஹ்மானும், வைரமுத்துவும்?

சங்கர்: ஓகோ! இந்த அல்ப ஐம்பது கோடி பட்ஜெட்லே என்னை சினிமா படம் வேற எடுக்க வைக்கலாம்னும் உங்களுக்கு ஆசையிருக்கு போலிருக்கு.

தயாரிப்பாளர்: ஐயையோ ஐம்பது கோடி ஆகுமா? அத்தனை எதுக்கு?

சங்கர்: என்ன ஸார் வாயைப் பொளக்கறீங்க? நிகழ்ச்சியோட முதல் ஷாட்லேயே ஆயிரம் லாரிங்க அணிவகுத்து போற மாதிரி காட்டப் போறோம். தடபுடலா அதை ஆரம்பிக்க அமர்க்களமா ஒரு பி.ஜி.எம். எஃபெக்ட் கொடுத்தாகணும். அதுக்கு ரஹ்மான் 'சுவிஸ்' போய் கம்போஸ் பண்றாரோ, சிட்னி போய் ரெகார்ட் பண்ணுவாரோ யார் கண்டது?

தயாரிப்பாளர்: ஸார்! நாம் தயாரிக்கப் போறது சாதாரண சமையல் நிகழ்ச்சிதான். அதுக்கு இத்தனை ஸ்பெஷல் டிரீட்மெண்ட்டெல்லாம் தாங்குமா?

சங்கர் (கோபமாக எழுந்து): இதுக்குத்தான் நான் சின்ன பட்ஜெட் ஆசாமிங்களை அண்டவே விடறதில்லே.

தயாரிப்பாளர் (வெலவெலத்துப் போய்..): ஸார் கோவிச்சுக்காதீங்க. நான் ஒரு மடையன். இப்பத்தான் புரியுது. நீங்க செஞ்சு காட்டப் போற ஸ்வீட்டுக்குத் தேவையான கோதுமை



எந்திரன் ஸ்வீட்!

அகிலா கார்த்திகேயன்

மாவு, சர்க்கரை, நெய், முந்திரி எல்லாத்தையும் எல்லா நிகழ்ச்சிகளைப் போல கிண்ணத்திலே வெச்சுக் காட்டாம அதையெல்லாம் லாரி லாரியா வந்து இறங்கற மாதிரி பிரம்மாண்டமா காட்டிட்டு அப்பால ஸ்டுடியோ உள்ளே வந்து ஸ்டவ் கடாய் முன்னாலே நீங்க க்ளோசப்பிலே வருவீங்க... சரிதானே!

சங்கர்: நாசமாப் போச்சு! நிகழ்ச்சிக்கு நீங்க டைரக்டரா? நானா? உங்க ஸ்டுடியோவுக்குள்ளே அத்தனை சிம்பிளாவா இதைச் செய்ய முடியும்? ஒரு பிரம்மாண்டமான ஃபேக்டரியிலேதான் இந்த ரெஸிபி தயாரிப்பைக் காட்டியாகணும். பெரிய பெரிய 'ஃபர்னஸ்' அடுப்புல. சுமார் ஆயிரக்கணக்கான டிகிரியிலேதான் 'குக்' பண்ணப் போறோம். தயாரிச்சு முடிச்சதும் அதை கன்வேயர் பெல்ட் மூலமா கொண்டு, மலை மலையா குவிக்கற மாதிரி காட்டறோம். அது குதிச்சு நகரும் சுட்சிவேஷனுக்குத்தான் வைரமுத்து ஸாரை 'லிரிக்' போடச் சொல்லணும்னு இருக்கேன்.



தயாரிப்பாளர்: ஐயையோ... ஒரு அல்ப தீபாவளி ஸ்வீட் தயாரிப்பைக் காட்ட எதுக்கு இதெல்லாம்?

சங்கர்: நான் பண்ணிக் காட்டப் போறது அல்பமான ஸ்வீட்டா? இது எந்திரன் ஸ்பெஷல் ஸ்வீட். லாரியிலே அதுக்காக தாதுப் பொருள்களை ஏத்திட்டு வர்றதிலேர்ந்து ஆரம்பிச்சு, ஜெர்மனிக்கெல்லாம் போகாட்டாலும் பிலாய், ரூர்கேலான்னு நம்ப நாட்டிலேயாவது ஒரு ஃபேக்டரிக்கு போய்த்தான் 'எந்திரன் ஸ்வீட்'டை உருக்கி எடுக்கறாப் போல 'லைவ்'வா காட்டியாகணும்!

தயாரிப்பாளர்: என்ன உருக்கி எடுக்கப் போறோமா? இது என்ன இரும்புக் கம்பியா? தீபாவளி ஸ்வீட் ஸார்.

சங்கர்: எனக்கு நீங்க சொல்லித் தர்றீங்களா... இது தீபாவளி ஸ்வீட்தான். ஆனா எந்திரன் சாப்பிடற ஸ்வீட் டாச்சே! இரும்புத் தாதுவை உருக்கி, கம்பி கம்பியா முறுக்கி செய்யாமே எப்படிச் செய்யறதாம்!

ஈஃபிள் டவரிலிருந்து மயங்கி விழாமல் எப்படியோ சமாளித்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவந்தார் தயாரிப்பாளர்.

இயக்குநர் சங்கர் செய்யப் போகும் நிகழ்ச்சி என்று தடபுடலாக அறிவித்து விட்டதால், சங்கர் என்ற பெயரில் ஏதோ ஒரு அரசாங்கத் துறையில் இயக்குநராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஆசாமியைத் தேடிப் பிடித்து சமாளித்தாக வேண்டுமே என்று அடுத்த ஓட்டம் பிடித்தார். ●

ஜவாரி ரொட்டி (சோளமாவு ரொட்டி)



தேவையான பொருள்கள்:
சோள மாவு - 1 கப்,
உப்பு - தேவையான அளவு

செய்முறை: சோள மாவுடன் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்றாகக் கொதிக்கும் வெந்நீர் விட்டு சப்பாத்தி மாவு பிசைவது போல் பிசைந்து கொள்ளவும். அடுப்பில் தோசைக்கல் வைத்து நன்றாக இட்ட மாவினை ஒவ்வொன்றாக இரண்டு பக்கமும் போட்டுப் புரட்டி எடுக்கவும்.

இதை வாரம் மூன்று முறை இரவு உணவாக எடுத்துக் கொள்ளலாம்.

எண்ணெய் தேவையில்லை. உப்பும் அதிகம் தேவையில்லை என்பதால் எல்லா வயதினருக்கும் இது ஏற்ற உணவு. சர்க்கரை வியாதி உள்ளவர்கள், சப்பாத்திக்குப் பதிலாக இதனை எடுத்துக் கொண்டால் ஒரு மாதத்திலேயே சர்க்கரையின் அளவு குறைவதைக் காணலாம்.

இதற்குத் தொட்டுக் கொள்ள கொத்துமல்லிச் சட்னி, புதினா துவையல் ஏற்றதாக இருக்கும். குழந்தைகளும் இதை விரும்பிச் சாப்பிடுவார்கள்.

குறிப்பு: சோள மாவுடன் நறுக்கிய வெங்காயம், கேரட் துருவல், பச்சை மிளகாய், தாளிப்பு பொருள் சேர்த்தும் ரொட்டி செய்யலாம்.

- ஜி.பார்வதி சுதிர்மூர்த்தி, மகாராஷ்டிரா

குக்கரி க்வீன் போட்டிக்கு வந்து குவிந்த சமையல் குறிப்புகளைப் பொறுமையாக அலசி, சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்துத் தந்த ஸ்ரீபிரியா நாராயணனுக்கு நன்றி!



கான்செப்ட் சமையல் போட்டி

குக்கரி

தேவையான பொருள்கள்:

கொள்ளு (முதல் நாள் இரவு ஊறவைக்கவும்) - ¼ கிலோ,
தனியா - 2 டீஸ்பூன்,
சீரகம் - 2 டேபிள் ஸ்பூன்,
பூண்டு - 10 பல்,
வெங்காய வடகம், கறிவேப்பிலை, கொத்துமல்லித் தழை, எண்ணெய், உப்பு, மஞ்சள் தூள் - தேவையான அளவு.



கொள்ளுத் தொக்கு

செய்முறை:

ஊறவைத்த கொள்ளுவை, குக்கரில் போட்டு ஒரு தம்ளர் தண்ணீர் விட்டு உப்பு, தனியா, சீரகம், பூண்டு, மஞ்சள் தூள் போட்டு ஐந்து விசில் விட்டு எடுக்கவும். பின்னர் வாணலியில் எண்ணெய் விட்டு வெங்காய வடகம், கறிவேப்பிலை, கொத்து மல்லித் தழை தாளித்து குக்கரில் உள்ள கொள்ளில் (தண்ணீர் வடித்த) போடவும். ஆறியபின் மிக்ஸியில் ஒரு நிமிடம் சுற்றி எடுத்தால் கொள்ளுத் தொக்கு தயார்.

இதை சாதம் உடன் பிசைந்து சாப்பிடவும். மாலை நேரத்தில் சப்பாத்திக்கு சைட்டிஷ் ஆகவும் எடுத்துக் கொள்ளலாம். கொள்ளின் நீரை ரசம் வைத்து குடிக்கலாம்.

-செல்வி, கோயமுத்தூர்

> வாரம் இரண்டு முறை கொள்ளை சேர்ப்பதால் தேவையில்லாத கொழுப்பு குறையும். உடலுக்குத் தேவையான சுறுசுறுப்பு கிடைக்கும்.





பார்லி மசாலா சாதம்

தேவையான பொருள்கள்:
பார்லி - 150 கிராம்,
பீன்ஸ், கேரட்- தலா 100 கிராம்,
பட்டாணி - 50 கிராம்,
வெங்காயம், தக்காளி -தலா 2,
பட்டை, கிராம்பு - தலா 1,
கரம் மசாலாத் தூள்,
மிளகாய்த் தூள் - தலா 1 டீஸ்பூன்,
இஞ்சி, பூண்டு விழுது - 1 டீஸ்பூன்,
எண்ணெய், உப்பு,
கறிவேப்பிலை,
கொத்துமல்லி - தேவையான அளவு

பார்லியில் அதிகளவு நார்ச்சத்து உள்ளதால் இது உடல் பருமனைக் குறைக்கும். பார்லியை வெறுமனே சாப்பிடப் பிடிக்காதவர்கள், இப்படிச் செய்து சாப்பிடலாம். சுவையாக இருக்கும்.

செய்முறை: பார்லியை ஊறவைத்து நன்றாக வேகவைத்துக் கொள்ளவும். பீன்ஸ், கேரட்டை நறுக்கி பட்டாணியுடன் வேகவைக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு பட்டை, கிராம்பு, இஞ்சி, பூண்டு விழுது, நறுக்கிய வெங்காயம் தாளித்துக் கொள்ளவும். தக்காளி சேர்த்து வதக்கியதும், கரம் மசாலாத் தூள், மிளகாய்த் தூள், உப்பு சேர்த்து எல்லாம் ஒன்றாகக் கலந்து வரும் வரை வதக்கி வேகவைத்த பார்லி, கேரட், பீன்ஸை சேர்த்து நன்றாகக் கலந்து, கறிவேப்பிலை, கொத்துமல்லி தூவி சூடாகப் பரிமாறவும்.

- கவிதா கண்ணன், நாகை



கலர்புல் வெஜிடபிள் சாலட்

வாரத்தில் மூன்று நாட்கள் சாப்பிட்டு வந்தால் எப்போதும் ஸ்லிம் அன்ட் ட்ரிம்மாகவே இருக்கலாம்.

தேவையான பொருள்கள்:

பொடியாக நறுக்கிய வாழைத் தண்டு- 1 கப்,
குடைமிளகாய் - 1,
பொடியாக நறுக்கிய தக்காளி வெங்காயம்,
முள்ளங்கித் துருவல்,
கேரட் துருவல், வெள்ளரித்

வாழைத்தண்டு வெண்பூசணி ரசம்



தேவையான பொருள்கள்:
வாழைத்தண்டு - 1 (பெரிய துண்டு), வெண்பூசணி துண்டுகள் - ½ கப், மஞ்சள் தூள் - ½ டீஸ்பூன், புளி - கோலியளவு, எலுமிச்சம் பழம் - 1, பெருங்காயம் கட்டி - சிறு துண்டு, வெந்து குழைந்த துவரம் பருப்பு - ¼ கப், தனியாப் பொடி, மிளகு, சீரகப் பொடி, உப்பு - தேவை யானது.

தாளிக்க: **கடுகு, கறிவேப்பிலை, வர மிளகாய், எண்ணெய்**

செய்முறை: வாழைத்தண்டை தோல் நீக்கி, பெரிய துண்டுகளாக்கி மிக்ஸியில் அடித்து நீரை வடிகட்டி எடுத்து வைக்கவும். வெண் பூசணி துண்டுகளையும் மிக்ஸியில் அரைத்து நீரை வடிகட்டி எடுத்து வைக்கவும்.

ஒரு பாத்திரத்தில் இரண்டு கப் நீர் விட்டு உப்பு, மஞ்சள் தூள், புளி, பெருங் காயக் கட்டி, சிறிது கறிவேப்பிலை சேர்த்து அடுப்பில் வைத்துக் கொதிக்கவிடவும். இரண்டு நிமிடம் கொதித்ததும் பருப்பை நீர்க்கக் கரைத்து விட்டு (கொதிப்பதற்கு முந்திய நிலையில்) இறக்கி வாழைத்தண்டு, வெண்பூசணி சாறை விட்டு, பொடித்த மிளகு, சீரகம் சேர்த்து மூடி விடவும். சிறிது ஆறியதும் எலுமிச்சம் பழம் பிழிந்து விட சுவையான ரசம் ரெடி.

வாழைத்தண்டு போல உடம்பும் இலகுவாகி விடும். உடலில் தேவையில்லாத சதை நீங்கி உடல் பொலிவு பெறும்.

வாணலியில் நெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை, வரமிளகாய் இரண்டை கிள்ளிப் போட்டுத் தாளித்துக் கொட்டவும். இதனை சூப்பாகவும் அருந்தலாம். ரசமாகவும் பயன்படுத்தலாம்.

இதனையே மிக்ஸியில் அடிக்காமல் பொடியாக நறுக்கி, உப்பு, மிளகு, சீரகப் பொடி, கொத்துமல்லி சேர்த்து ஆடை நீக்கிய தயிரில் கலந்து ராய்தாவாகவும் செய்து சாப்பிடலாம்.

- கே.எஸ்.கிருஷ்ணவேணி, சென்னை

துருவல் - தலா ½ கப், ஊறவைத்த பயத்தம் பருப்பு - 1 கப், கொத்துமல்லி - கொஞ்சம், பச்சை மிளகாய் - 2 . உப்பு - தேவையான அளவு

தாளிக்க:
எண்ணெய் - ¼ டீஸ்பூன், கடுகு - சிறிதளவு

செய்முறை:

அகலமான பாத்திரத்தில் பொடியாக நறுக்கிய வாழைத்தண்டு, குடைமிளகாய், தக்காளி, வெங்காயம், துருவிய கேரட், முள்ளங்கித் துருவல், வெள்ளரிக்காய்த் துருவல், ஊறவைத்த பயத்தம் பருப்பு, கொத்துமல்லி, பச்சை மிளகாய், உப்பு சேர்த்துக் கலக்கவும். பின்பு எண்ணெய் ஊற்றி, கடுகு போட்டு தாளித்து சாலட்டில் சேர்க்கவும்.

வாழைத்தண்டை பச்சையாகச் சாப் பிடுவதால் கிட்னியில் உள்ள கல் கரைந்து போகும். கர்ப்பிணிப் பெண் களுக்குக் கொடுத்தால் நீர் நன்றாக இறங் கும். பார்ப்பதற்கு கலர்ஃபுல்லாக இருப்ப தால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பிச் சாப்பிடு வார்கள்.

- காயத்ரி, மைசூர்



சென்ற இதழ் தொடர்ச்சி...

சென்னை-மேற்கு வட்டாரப் போக்குவரத்து அதிகாரி கே.வி.கார்த்தலிங்கன் டிரைவிங் லைசென்ஸ், விலாச மாற்றம் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கிறார்.

டிரைவிங் லைசென்ஸ் பெறுவது எப்படி?



நிரந்தர உரிமம் பெறுவதற்கு விண்ணப்பிக்க தனி விண்ணப்பம் உண்டா?

நிரந்தர உரிமம் பெறுவதற்கு விண்ணப்பிக்க தனி விண்ணப்பம் உள்ளது. உரிய கட்டணத்தைச் செலுத்தி, பழகுனர் உரிமம் வழங்கப்பட்ட விவரங்களைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும். உங்களுடைய வாகனம் ஓட்டும் திறனும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர்களால் பரிசோதிக்கப்படும். வாகனத்துக்குரிய பதிவுச் சான்றிதழ், இன்ஷ்யூரன்ஸ், பொல்யூஷன் சர்டிஃபிகேட் போன்றவற்றையும் காட்ட வேண்டும். வாகனம் உங்கள் பெயரில் இல்லாதபட்சத்தில், வாகனத்தின் உரிமையாளரிடமிருந்து, தமது வாகனத்தை அளித்திருப்பதாக ஒரு சான்றிதழும் அவசியம்.

அதிகாரி, வாகனம் ஓட்டும் திறனைப் பரிசோதனை செய்து, டிரைவிங் குறித்த சில கேள்விகளையும் கேட்பார். அவருக்குத் திருப்தி ஏற்பட்டால் மட்டுமே ஓட்டுநர் உரிமம் வழங்க சிபாரிசு செய்வார். இதில் தேறாமல் போனவர்கள், மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதுதான்.

பொதுவாக, போக்குவரத்து அல்லாத வாகனப் பிரிவிற்கான நிரந்தர உரிமம் வழங்கும்போது, உங்களுடைய ஐம்பதாவது வயது வரை செல்லத்தக்க வகையில் அது அளிக்கப்படும். அதன் பிறகு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மருத்துவ அதிகாரியின் சான்றிதழின் அடிப்படையில் மீண்டும் புதுப்பிக்கப்படும்.

தற்போது ஆன் லைனிலேயே விண்ணப்பம் செய்யும் வசதி வந்துவிட்டது என்றாலும், பதிவுசெய்யும்போதே வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் அனுமதி வாங்கிக் கொண்டு எல்லா ஒரிஜினல்

டாகுமென்ட்களுடன் குறித்த நேரத்தில் நேரில் செல்ல வேண்டியது அவசியம்.

பழகுனர் உரிமம் பெற்ற ஒருவர் நிரந்தர ஓட்டுனர் உரிமம் பெற என்ன செய்ய வேண்டும்?

பழகுனர் உரிமம் பெற்ற முப்பது நாட்களில் அவர் சாலை விதிகளை நன்றாகப் புரிந்துகொண்டு, வாகனம் ஓட்டிப் பழகி, நெரிசல் மிகுந்த இடங்களிலும், வாகனத்தை ஓட்ட முடியும் என்ற தன்னம்பிக்கையைப் பெற வேண்டும். (பதினாறு வயதானவர்கள் 50 சி.சி.க்குக் குறைவான திறன் கொண்ட கியர் இல்லாத இரு சக்கர வாகனங்களை ஓட்ட உரிமம் பெறலாம் என்று சென்ற இதழிலேயே குறிப்பிட்டிருந்தோம்) பொதுவாக நீங்கள் வசிக்கும் பகுதிக்குரிய உரிமம் வழங்கும் அலுவலகத்தில்தான் லைசென்ஸுக்கு விண்ணப்பிக்க வேண்டும். நீங்கள் டிரைவிங் பயிற்சிப் பள்ளியின் மூலமாக பயிற்சி பெற்றவர் என்றால் அவர்கள் ஸ்கூல் மூலமாகவே உங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.

நேரடியாக விண்ணப்பிப்பவர்களுக்கும், டிரைவிங் ஸ்கூல் மூலமாக விண்ணப்பிக்கிறவர்களுக்கும்



யாரை, எங்கே, எப்படி?

படிவம் 4, படிவம் 5 என்று தனித்தனி விண்ணப்பங்கள் உண்டு. நிரந்தர ஓட்டுனர் உரிமம் பெற இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணம் ரூபாய் அறுபது.

விண்ணப்பப் படிவத்துடன் இணைக்க வேண்டியது.

1.உங்களுடைய பழகுனர் உரிமம்.

2.நீங்கள் ஓட்டிக் காட்டப்போகும் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ்.

3.அந்த வாகனத்தின் இன்ஷ்யூரன்ஸ்

4.மாசுக் கட்டுப்பாட்டு சான்றிதழ்.

5. வாகன உரிமையாளரிடமிருந்து, அந்த வாகனத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கும் கடிதம்.

6. ஒரு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம்.

நகல்கள் சரிபார்க்கப்பட்டதும் அன்றைய தினமே, உங்கள் புகைப்படம் கொண்ட, லேமினேஷன் செய்யப்பட்ட ஓட்டுனர் உரிமம் உங்கள் கைக்கு வந்துவிடும்.

டிரைவிங் தேர்வில் தோற்றுவிட்டால், மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கப்படுமா?

நிச்சயமாக வழங்கப்படும். ஒருமுறை ஓட்டுனர் தேர்வில் தவறிவிட்டால், ஏழு நாட்கள் கழித்து அவர் மீண்டும் தேர்வு எழுதலாம். அப்போதும் தவறிவிட்டால், மூன்றாவது முறையும் ஒரு வாய்ப்பு உண்டு. மூன்றாவது முறையும் தவறிவிட்டால், அடுத்தது ஒரு வருடத்துக்கு பிறகுதான் அவர் மீண்டும் தேர்வுக்கு வரலாம். இந்த ஓராண்டுக் காலத்

ஒருவர் வாகனம் ஓட்டும் போதெல்லாம் அவரது ஒரிஜினல் டிரைவிங் லைசென்ஸைக் கையிலேயே வைத்துக் கொண்டிருக்கவேண்டும் என்பது கட்டாயமா? நகல் பிரதியை கையில் வைத்துக் கொண்டால் போதாதா?

மோட்டார் வாகனச் சட்டப்படி, வாகனம் ஓட்டும்போது, ஓட்டுனர் உரிமத்தை வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். உங்கள் ஓட்டுனர் உரிமத்தைக் கேட்கும் அதிகாரி, நம்பிக்கையின்பேரில் பிரதியை ஏற்றுக்கொண்டால் பிரச்னை இல்லை. அல்லது சம்மந்தப்பட்ட அதிகாரியிடம் ஒரிஜினல் டிரைவிங் லைசென்ஸ் வீட்டில் இருக்கிறது; நாளை அதைக் கொண்டு வந்து காண்பிக்கிறேன்'' என்று சொல்லலாம். அதை அவரும் ஏற்றுக் கொள்ளக்கூடும்.

சில சமயங்களில், பரிசோதனை செய்யும் அதிகாரி ஒரிஜினல் இல்லாத பட்சத்தில் வழக்கு தொடர்ந்தால், ஐந்நூறு ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம். அல்லது மூன்று மாதம் சிறைத் தண்டனை வழங்கப்படும்.

தில் அவர் மீண்டும் பழகுனர் உரிமத்துக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருவரது வசிப்பிட விலாசம் மாறும்போது, புதிய விலாசத்தை ஓட்டுனர் உரிமத்தில் பதிவு செய்வது எப்படி?

ஓட்டுனர் உரிமம் மாநில அரசாங்கத்தால் வழங்கப்படும் ஆவணம் என்பதால், அது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. வாகனங்களை ஓட்டுவதற்கான அனுமதி சான்றாக மட்டுமின்றி, பல்வேறு இதர விஷயங்களுக்கும் மிகவும் உபயோகமாக உள்ளது. உதாரணமாக நீங்கள் அதை ஒரு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையாகப் பயன்படுத்தமுடியும். டிரைவிங் லைசென்சில் உங்களுடைய சரியான வசிப்பிட விலாசம் இடம்பெற்று இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது.

உங்கள் முகவரியில் மாற்றம் இருப்பின், அதற்குரிய ஆதாரத்துடன் விண்ணப்பித்து, புதிய முகவரியுடன் கூடிய ஓட்டுனர் உரிமத்தை வாங்கிக்கொள்ள வேண்டும். புதிய முகவரியுடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டை, பாஸ்போர்ட், எல்.ஐ.சி. பாலிசி, வீட்டு வரி ரசீது போன்றவற்றை ஆதாரமாக அளிக்கலாம். இப்படி ஏதும் இல்லை என்றால், ரேஷன் கார்டு, வீட்டு வரி ரசீது, டெலிஃபோன் பில் போல ஏதாவது ஒன்றை ஒரு நோட்டரி



பப்ளிக்கிடம் சான்றாக அளித்து, அவரிடமிருந்து புதிய முகவரிக்கான அஃபிடவிட் வாங்கியும் இணைக்கலாம்.

உள்ளூர் முகவரியாக இருந்தாலும் வேறு பகுதியாக இருந்தாலும் இதுதான் நடைமுறை.

வேறு மாநிலத்துக்குப் போகிறபோது, அங்கே புதிய லைசென்ஸுக்கு விண்ணப்பிக்க வேண்டுமா?

அவசியமில்லை. முகவரி மாற்றத்துக்குரிய நடைமுறையையே கடைபிடித்தால் போதும்.

ஆனால், இந்த மாநிலத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரியை அணுகி, தடையில்லா சான்றிதழ் (நோ அப்ஜெக்ஷன் சர்டிஃபிகேட்) வாங்க வேண்டும். போகிற மாநிலத்தில் உங்கள் புதிய வசிப்பிடத்துக்குரிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் இந்த என்.ஓ.சி.யுடன் விண்ணப்பித்தால், அவர்கள், சம்பந்தப்பட்ட மாநில அரசுக்குக் கடிதம் எழுதி, ஓட்டுனர் உரிமம் குறித்த தகவல்களை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு, புதிய லைசென்ஸ் வழங்குவார்கள்.

டூப்ளிகேட் டிரைவிங் லைசென்ஸ் பெறுவதெப்படி?

உங்களுக்கு எதற்காக நகல் லைசென்ஸ் தேவைப்படுகிறது என்பதற்கான காரணத்தை விளக்கி, விண்ணப்பிக்கவேண்டும். லைசென்ஸ் தொலைந்து போயிருந்தால், அதற்காக காவல்துறையினரிடம் புகார் அளித்து, அவர்களிடமிருந்து டிரைவிங் லைசென்ஸை தேடித்தர முடியவில்லை என்பதற்கான சான்றிதழைப் பெற்று, அதனையும் விண்ணப்பத்துடன் இணைத்து, சம்பந்தப்பட்டவரே நேரடியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கான கட்டணம் இப்போது 55 ரூபாயாக உள்ளது. நீங்கள் விண்ணப்பிக்கும் தினத்தன்றே டூப்ளிகேட் டிரைவிங் லைசென்ஸ் வழங்கப்பட்டுவிடும்.

(இன்டர்நேஷனல் டிரைவிங் லைசென்ஸ், ஆர்.சி.புக், வாகன வரி தொடர்பான விளக்கங்கள் அடுத்த இதழில்).

தொகுப்பு: எஸ்.சந்திரமௌலி

ரூ.150/- பரிசு பெறும் பெட்டிக் கதை

குரு பக்தி!

பிரேமாவுக்கு ஆச்சரியம். கிரிக்கெட் ஆட தெருக்கோடிக்கு போய்விடும் மகன் பரமேஷ், ஒரு வாரமாய் அக்கறையாய்ப் படிக்கிறான்.

"என்னடா செல்லம்! எக்ஸாம் நெருங்கிடுச்சா?"

"அப்படியும் வெச்சுக்கலாம்!" - மகன் புதிராய்ச் சொல்வதைக் கேட்டு அம்மா இன்னும் ஆச்சரியமானாள்.



மறுநாள், துள்ளிக் குதித்து வந்த பரமேஷ், "அம்மா, நான் சோஷியல் சயன்ஸ்ல 65 மார்க் வாங்கிட்டேனே!" என்றான்.


"காலாண்டுத் தேர்வை விட அரையாண்டுல பத்து மார்க்தானே கூட எடுத்திருக்கே!"


"இல்லம்மா, எங்க ஸ்கூல் மேனேஜ்மெண்ட்ல, எந்த சப்ஜெக்ட்ல மாணவர்கள் 60 மார்க்குக்கு கம்மியா எடுக்கிறாங்களோ, அந்த டீச்சருக்கு அதுக்கேத்த மாதிரி இன்கிரிமெண்ட்டை கட் பண்ணச் சொல்லிட்டாங்க. பாவம், எங்க சோஷியல் சயன்ஸ் மிஸ் எலிசபெத்துக்கு போன மாசம் 300 ரூபா சம்பளத்துல கட். அவுங்க ஹஸ்பெண்ட் வேலை பார்த்த கம்பெனியும் திடீர்னு மூடிட்டாங்களாம். ரொம்பக் கஷ்டப்படுறாங்க. அதான் நாங்களெல்லாம் நல்லா படிச்சு, 60 மார்க்குக்கு மேல எடுக்கணும்னு நினைச்சோம்."

- மகனின் உயர்ந்த குணத்தைக் கட்டியணைத்து உச்சிமுகர்ந்தாள் பிரேமா.

- அ.யாழினி பர்வதம், சென்னை-78







அலங்காரமாய்

துளசி கண்ணன்




தேவையான பொருள்கள்

வுட் (நியூ வுட்), பி.வி.சி. பைப் (ஒன்றரை அடி, 18 இன்ச் அளவு), கெமிக்கல் க்ளே, ஃபேப்ரிக் கலர்ஸ், அகல் விளக்குகள், வேஸ்ட் பாட்டில் மூடி அல்லது புஷ், ஃபேப்ரிக் கிளிட்டர்ஸ், ஃபேப்ரிக் க்ளூ, வார்னிஷ், பிரஷ், அலங்கரிக்க கண்ணாடிகள்.







செய்முறை:

★ மரக்கடையில் ஓரடி விட்டமுள்ள வட்ட வடிவ மரத்தட்டிலிருந்து சிறிது சிறிதாக விட்டம் குறைத்து ஐந்து மரத் தட்டுக்களை வெட்டவும். (படம் 1) தட்டின் நடுவில் பி.வி.சி. பைப் நுழையுமளவுக்கு துளையிருக்குமாறு வெட்டவும்.

★ ஓரடி விட்டமுள்ள மரத்தட்டின் அடியில் ஃபேப்ரிக் க்ளூ உதவியோடு, முக்கோண வடிவில் பாட்டில் மூடியை வைத்து ஒட்டி, பிவிசி பைப் நுழைக்கவும். படம் (2, 3)

★ மரத்தட்டுக்கும், பிவிசி பைப்புக்கும் சற்று இடைவெளிவிட்டு பி.வி.சி.








9


10


11

ஜொலிக்கும் அடுக்கு தீபம்!

பைப்பில் ஃபேப்ரிக் க்ளூ ஒட்டி அடுத்த தட்டை உள்ளே நுழைத்து (ஓரடி விட்டத்திலிருந்து சற்றுக் குறைந்த அடுத்த


12

தட்டு) ஒட்டவும். (படம் 4, 5)

★ ஒட்டிய பகுதி தெரியாமலிருக்க ஃபேப்ரிக் க்ளூ தடவி அதன் மேல் கெமிக்கல் க்ளேவை நன்றாக உருட்டி பிவிசியை சுற்றி ஒட்டி, அதைச் சுற்றிலும் க்ளேவால் திலகம் போல் செய்து ஒட்டினால் தாமரைப் பூ டிஸைன் போல் இருக்கும். (படம் 7, 8, 9) அடுத்து டிஸைனைச் சுற்றி ஐந்து அகல் விளக்குகள் வைத்து இடைப் பகுதியில் க்ளே வைத்து டிஸைன் செய்யவும்.


13


15

★ இதே போல் ஐந்து மரத் தட்டையும் பிவிசியில் இணைத்து க்ளேவால் டிஸைன் செய்து அகல்


14

தூரிகை ட்யூஷன்

விளக்கு வைக்கவும்.

★ மேல் வட்டத் தட்டின் துளையில் இருக்கும் பைப் தெரியாமல் இருக்க, அதன் மேல் விளக்கை கவிழ்த்து ஒட்டவும் (படம் 11). தேவையெனில் கவிழ்த்து வைத்த விளக்கின் மேல் மோல்டிங் சிலையை வைத்து அலங்கரிக்கலாம். இப்போது அடுக்கு தீப வடிவம் தயார்!





★ அனைத்துப் பகுதியிலும் கறுப்பு நிற ஃபேப்ரிக் நிரப்பி காயவிடவும். க்ளே ஒட்டிய பகுதி, மோல்டிங் சிலைக்கு ப்ரான்ஸ் நிறமும், விளக்குக்கு காப்பர் நிறமும் கொடுக்கவும்.

★ அகல் விளக்குகளுக்கு இடையில் கண்ணாடி ஒட்டி, மரத்தட்டின் பக்கவாட்டு ஓரங்களைச் சுற்றி ஃபேப்ரிக் க்ளிட்டர்ஸ் கொண்டு அலங்கரித்து, காயவிட்டு வார்னிஷ் அடிக்கவும்.



★ அடுக்கு தீபத்தில் விளக்கேற்றினால் அலங்காரமாய் ஜொலிக்கும்.

- லக்ஷ்மி

வற்றாத செல்வம் பெற...

தீபாவளி அமாவாசை அன்று லக்ஷ்மி பூஜை மிகவும் விசேஷம். லக்ஷ்மி படத்தை சுத்தமான இடத்தில் வைத்து, ஒரு தட்டில் நாணயம், வெள்ளி, தங்கம் வைத்து விளக்குகள் ஏற்றி தூப தீபம் காட்டி பூஜை செய்ய வேண்டும். இந்தப் பூஜையை அமாவாசை இருக்கும் சமயத்தில் செய்ய வேண்டும். அப்போது கீழ்க்கண்ட ஸ்லோகத்தைச் சொல்லவும்.



ப்ரதமநாமம் ஸ்ரீதேவிம்
த்விதீயம் ஸ்ரீ புவனேஸ்வரீம்
த்ருதீயம் கருணாமூர்த்தினம்
சதுர்தம் சந்த்ர சஹோத்ரீம்
பஞ்சமம் பத்மநேத்ரீம்
ஷஷ்டம் பில்வ நிலாயானம
அஷ்டமீம் ரமாயை
தசமீம் க்ஷீரஸாகர ஜனனீம்
ஏகாதசீம் லோக மாதே
த்வாதசீம் ஸ்ரீஹரிவல்லபே

இந்த ஸ்லோகத்தைச் சொன்னால் வற்றாத செல்வம் பெறலாம்.

- எம்.லீலா, சென்னை-28

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

வழங்கும்

சுற்றுலா புதிர் - 10


ரூ. 5,000 பரிசு



காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இயற்கை அழகும் பாரம்பரியப் பெருமையும் கொண்டு பார்ப்போரை வியக்க வைக்கிறது நமது இந்தியா. இந்தியா மட்டுமல்லாது சர்வதேச சுற்றுலா சம்பந்தப்பட்ட குறிப்புகளையும் தந்திருக்கிறோம். கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு குறிப்பும் ஒரு பிரபல சுற்றுலா தலத்தின் முதல் இரண்டு எழுத்துக்களைக் குறிக்கின்றன. அந்த சுற்றுலா தலத்தின் பெயரில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையை அந்தந்த குறிப்பின் இறுதியில் அடைப்புக் குறிகளுக்குள் உள்ள எண் குறிக்கிறது. இப்போது சுற்றுலா தலங்களை கண்டுபிடியுங்கள்.

உதாரணம்- **'பழையது அல்ல'** (5) என்று வைத்துக் கொள்வோம். விடை **'புதிய'** அல்லது **'புது'** என்று இருக்கலாம். நம் குறிப்பு உணர்த்தும் இரண்டு எழுத்து சொல்லைத்தான் அடிப்படையாக எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே **'புது'** என்று வைத்துக் கொள்வோம். **'புது'** என்று தொடங்கும் - அதேசமயம் 5 எழுத்துகள் கொண்ட - சுற்றுலா தலம் எது? **'புதுச்சேரி'** என்பதுதான் விடை.

கொடுத்துள்ள குறிப்புகளிலிருந்து எட்டு சுற்றுலா தலங்களின் பெயர்களைக் கண்டுபிடித்து சரியான விடை எழுதி, அனுப்புங்கள். குலுக்கல் முறையில் 20 பேருக்கு தலா ரூ.250/- பரிசளிக்கப்படும்.



1. தர்மம் (6)

2. சீக்கியர்களின் பெயர் பொதுவாக இப்படி முடியும் (6)

3. பெரிய (7)

4. முல்லை மன்னன் (3)

5. போதை அளிப்பது (3)

6. ஏ. ஆர். ரஹ்மானுக்கு ஆஸ்கார் பெற்று தந்த பாடலில் முதல் இரு எழுத்துக்கள் (5)

7. கேஸ் ஸ்டவ்வில் சிறியதாக எரியவிடுவதை '----மில் வைத்துக்கொள்வது' என்போம் (3)

8. ஆங்கிலத்தில் பணம் (4)

தொகுப்பு: **ஜி.எஸ்.எஸ்.**

போட்டி விதிகள் :

சுற்றுலா சம்பந்தப்பட்ட விடைகளை நிரப்பி இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்க. ஒருவரே எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். ஜெராக்ஸ் கூடாது.

அனுப்ப வேண்டிய முகவரி : சுற்றுலா போட்டி - 10 மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

கடைசித் தேதி : 15.11.2010


பெயர்: .... விலாசம்: ....

....

....

தொலைபேசி எண் : .... ஈ-மெயில்:................................


வண்ணக்



19 புள்ளி அடுத்து
17 புள்ளி 2 வரிசை
இரண்டு இரண்டாகக்
குறைத்து 5 ல் இரண்டு
வரிசை வைத்து ஒன்றில்
நிறுத்தவும்.
- ஹேமா செல்வராஜ், கூடலூ



13 - 7 வரை
(இடைப்புள்ளி)
- எஸ். ஜானகி
சுப்ரமணியன், திருப்பூர்



13 - 1 வரிசை
இருபக்கமும் 15, 17,
19, 19, 17, 15, 13, 11
வரை (நேர் புள்ளி)
- ஆர்.சித்ரா,
திருச்சிராப்பள்ளி

கோலங்கள்!

வாசல் அழகு



- அ.சே. சாரதா,
ஊரப்பாக்கம்



- பி.மீனா,
நாகர்கோவில்



21 புள்ளி - 11 புள்ளி
வரை (இடைப்புள்ளி)
- வி.முத்துலக்ஷ்மி,
சென்னை

அருணகிரிநாதரும் கிளம்பிவிட்டார். ஆனால், விராலிமலை எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. வனம் நிறைந்த பகுதியில் நள்ளிரவில் கால்கள் கடுக்க நடக்கிறார்.

எதிரே வருபவர் கண்ணுக்குத் தெரியாத இருள் கட்டி இருந்தது.



அழகன்



அழகன் முருகனுக்கு அருணகிரிநாத பெருமானின் அமுதத் திருப்புகழைக் கேட்க அளவற்ற ஆசை ஏற்பட்டது போலும். ''விராலிமலைக்கு வா'' என்று அழைத்தான். ''தாமரையின் மட்டு வாசமலர் ஒத்த'' என்ற வயலூர் திருப்புகழில் அருணகிரிநாதரை விராலி மலைக்கு அழைத்த செய்தியை நமக்குத் தெரிவிக்கிறது.

''ஐயனே, உன்னை எங்கே எப்பொழுது காண்பேன்?'' என்று அரற்றிக் கொண்டே நடந்தவரை குரல் ஒன்று தடுத்தது.

''யாரைய்யா, இந்தக் காட்டுக்குள்ளே இந்த இருட்டு நேரத்துல வர்றது?''

அருணகிரிநாதர் யாரென்று புரியாமல் அச்சப்பட்டார்.

''ஐயா, விராலிமலைக்குப் போக வேண்டும். என் ஐயனின் கட்டளை. வழி தெரியவில்லை. உம்மைக் கண்டதும் சற்று தைர்யம் வருகிறது. இந்த நேரத்தில் நீர் யாரய்யா இங்கு வந்து இருக்கிறீர்?'' என்று சற்று துணிச்சலுடன் கேட்டார்.

''நான் இக்காட்டில் வாழும் வேடன். இன்றைக்கு எதுவும் கிடைக்காமல் சுற்றித் திரிந்து கொண்டிருந்தேன். வாரும், நானும் விராலி மலைக்குத்தான் போகிறேன். வழிகாட்டுகிறேன்'' என்றான் அந்த வேடன்.

வள்ளிக்காக வேடனாக வந்த முருகக் கடவுள் அருணகிரிநாதருக்கும் வேடனாக வந்து வழிகாட்டிக் கொண்டு போகிறார். அருணகிரிநாதர் பெற்ற பேறுதான் என்ன?

முருகனிடம்...

கந்தவேள் பக்தி உலா...

லக்ஷ்மி ராஜரத்னம்

அநேக மகிமைகள் நிறைந்த விராலி மலையை நாமும் தரிசிக்கப் போகலாமா?



அருணகிரிநாதப் பெருமான் காடுமலை கடந்து போனாரே. நாமும் அப்படிப் பயணப்பட வேண்டுமோ என்று பயப்பட வேண்டாம்.

இத்தலம் புதுக்கோட்டையிலிருந்து 42 கி.மீட்டர் தொலைவில் இருக்கிறது. குளத்தூர் - மணப்பாறை ரயில் நிலையங்களிலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சுமார் 120 அடி உயரம் உள்ள இம்மலை மேல் செல்ல சுமார் 200 படிகள் உள்ளன.

படியேறும் இடத்தில் இடப்பக்கம் வீரேஸ்வரர் கோயில் இருக்கிறது. சுனையின் அருகில் கருப்பர் கோயில் இருக்கிறது.

சுமார் 100 படிகள் ஏறியதும் இடும்பன் சன்னிதி வடக்கு நோக்கி உள்ளது. அதன் அருகில் விநாயகர் - முருகன் காட்சியளிக் கின்றனர்.

அங்கிருந்து படியேறும் பொழுது சொக்கநாதர் - மீனாட்சி எழுந்தருளியிருக் கிறார்கள். மலையேறும் பொழுது நிறைய மயில்களைக் காணலாம். மலையேறியதும் தெற்கு நோக்கிய கோபுர வாசலைத் தரிசிக்கலாம். ஐந்து மாடங்களை உடைய அழகிய கோபுரம் காட்சியளிக்கிறது.

விராலி மலை இறைவனுக்கு ஷண்முகநாதர் என்று பெயர். இவரது அழகை வார்த்தைகளால் வர்ணிக்க நம்மால் முடியுமா? கொஞ்சம் முயன்று பார்க்கலாமே!

ஆறுமுகப் பெருமான் அமர்ந்திருக் கும் மயில், தெற்குப் பக்கம் பார்த்திருக் கிறது. அதனால், 'அசுர மயில்' என்று அழைக்கப்படுகிறது.

ஷண்முகநாதன் என்ற பெயருக்கு ஏற்ப ஆறுமுகம், அழகிய முடி, நீறணிந்த நெற்றி, அழகிய புருவம், ஒளிரும் கட்டி, மகரக் குண்டலத்துடன் அசையும் செவி, கண்டிகை பூண்ட கழுத்து, அகன்ற மார்பு, பன்னிருதோள், பவள வாய், அபயஹஸ்தம், தேவியர் இருவருடன் ஞான மயிலின் மீது அமர்ந்த சுந்தர வடிவம்... நம்மை ''வருக, வருக'' என்று அழைப்பது போலத் தோன்றுகிறான் அழகன் முருகன்.

இத்தல வரலாற்றைப் பார்ப்போமா?

இப்பொழுது கோயில் இருக்கும் இடத்தில் ஒரு குராமரம் இருந்திருக்கிறது. வேடன் ஒருவன் வேங்கையை வேட்டை யாடத் துரத்திக் கொண்டு வருகிறான். குராமரத்தை அடைந்தபொழுது வேங்கை காணாமல் போய் விடுகிறது. குராமரம் இருந்த இடத்திலேயே இறைவன் இருப்ப தாகக் கருதி வழிபாடு நடந்து வந்திருக் கிறது.

இக்கோயில் பற்றிய கர்ணப் பரம் பரையான கதையும் உண்டு. வயலூரரைச் சேர்ந்த ஞானவரோதயர் என்ற சிறுவன் பள்ளிக்குச் செல்லாமல் இங்கு வந்து ஒளிந்து கொண்டிருந்தான். அச்சிறு வனுக்கு முருகன் அருள் காட்டி இறை வன் மீது துதிகளைப் பாடும் ஆற்றலைக் கொடுத்தார்.



பெற்றோரும், உற்றோரும் அவரை மெச்சினர். ஒருநாள் அவர் கனவில் வந்த கந்தன், தனக்கு விராலிமலை மேல் கோயில் கட்டும்படி ஆணையிட்டான். அதே சமயம் பெரம்பூர் என்ற ஊரின் தலைவரான அழ கிய மணவாளரிடமும் கனவில் சென்று கோயில் கட்டும் தன் விருப்பத்தைத் தெரிவித்தார்.

இருவரும் சேர்ந்து இக்கோயிலைக் கட்டினார் கள். குமாரவாடி,

மருங்களபுரி போன்ற ஊர்களின் தனவந்தர்கள் இக்கோயிலுக்குத் திருப்பணி செய்தனர்.

குமாரவாடியைச் சேர்ந்த அமைச்சர் கருப்பமுத்துப்பிள்ளை என்பவர் தினமும் விராலிமலை முருகனைத் தரிசிக்கும் வழக்கம் உடையவர். ஒருநாள் அவர் முருகனை தரிசிக்க வந்தார். பெருமழை பெய்து மாமுண்டியாறு வெள்ளம் பெருக்கெடுத்தது. கரையிலேயே தவித்துக் கொண்டு நின்ற அவரை மனித உருவில் வந்து ஷண்முகநாதன், கைபிடித்து அழைத்துச் சென்று கோயிலில் விட்டதாகச் சொல்கிறார்கள்.



★ ஸ்தல விருட்சம்

இவ்வாலயத்தில் ஷண்முக மூர்த்தி மண்டபத்தில் உள்ள தூண்களில் குமாரவாடி வக்கமு நாயகர் அவருடைய பிரதிநிதிகள் உடையவும் சிலா வடிவங்கள் காணப்படுகின்றன. இந்த கருப்பு முத்துப் பிள்ளையும் நாயகரின் பிரதிநிதி என்று கருதப்படுகிறார்.

இக்கோயிலில் இறைவனுக்கு சுருட்டு நைவேத்யம் செய்யப்படுகிறது. இதற்கும் கருப்பமுத்துப் பிள்ளைக்கும் தொடர்பு இருக்கிறது. அதெப்படி?

வெள்ளத்தில் ஆற்றைக் கடக்க முடியாமல் தவித்துக் கொண்டு நின்ற கருப்பமுத்துப் பிள்ளை குளிரில் நடுங்கினார். இறைவனைத் தியானித்தபடியே சுருட்டு ஒன்றைப் பற்றவைத்துக் கொண்டு நின்றார். அப்பொழுது அவர் அருகே இன்னொருவரும் நடுங்கிய படியே வந்து நின்றார்.

அவர் மீது இரக்கப்பட்ட கருப்பமுத்து, "உங்களுக்கும் சுருட்டு வேண்டுமா?" என்று கேட்டு சுருட்டு ஒன்றையும் எடுத்து நீட்டினார்.

அந்த மனிதர் சுருட்டை வாங்கிக் கொண்டார். அந்த மனிதர்தான் ஆற்றைக் கடக்க உதவியவர். கோயில் வரை வந்தவர் சட்டென்று காணாமல் போய்விட்டார்.

வந்தவர் ஷண்முகநாதர்தான் என்பதற்கு என்ன அத்தாட்சி?

கருப்பமுத்துப் பிள்ளை விராலிமலை படியேறி சன்னிதி அடைந்து நின்ற பொழுது, முருகவேள் முன்பு சுருட்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அனைவரும் யார் இந்தச் சுருட்டை வைத்திருப்பார்கள் என்று திகைத்துப் போய்க் கேட்டுக் கொண்டார்கள்.

அமைச்சர் எதிரே இப்படி நடந்து விட்டதே என்று பயந்தார்கள். கருப்பமுத்துப் பிள்ளையே மாமுண்டி ஆற்றங் கரையில் நடந்தவற்றைக் கூறினார். அன்று முதல் ஷண்முகநாதருக்கு சுருட்டு நைவேத்யம் நடப்பது வழக்கமானது.

இடைக்காலத்தில் புதுக்கோட்டை மகாராஜா இந்தச் சுருட்டு நைவேத்யத்திற்குத் தடைவிதித்தார். முருகன், வயிற்று வலியால் துடித்த மகாராஜாவின் கனவில் தோன்றி, "இது மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப்பான்மையை

வளர்க்க வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, புகைக்கும் பழக்கத்திற்கு ஆதரவு தருவதற்கு அல்ல. பக்தன் தந்த சுருட்டு தகுதியற்றது என்றாலும் அன்போடு தந்ததற்காக ஏற்றுக் கொண்டேன். அதனால் இந்த சுருட்டு நைவேத்ய பழக்கம் தொடரட்டும். தடைசெய்யாதே'' என்று கூறி விட்டார். மகாராஜாவின் வயிற்றுவலியும் நீங்கியது.

18-ம் நூற்றாண்டிலிருந்து புதுக்கோட்டை சமஸ்தானத்தினரால் நன்கு இவ்வாலயம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

நிறைய கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கொடும்பாளூர் ஐவர் கோயிலிலிருந்து இங்கு காணப்படும் பல்லவ காலச் சிற்பங்கள் கொண்டு வந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.



● முருகனுடன் அருணகிரிநாதர்

இக்கோயில் சோழ மன்னர்களால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. விஜயநகர மன்னர்கள் காலத்திலும் பல திருப்பணிகள் நடைபெற்றிருக்கின்றன. இதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் இருக்கின்றன.

இத்தலத்தில் சதாசிவ பிரம்மேந்திராள் என்ற ஞானி சில காலம் தங்கியிருந்தார். பின்னர் கரூர் அருகில் உள்ள நெரூர் சென்று அங்கு சமாதியானார்.

இந்தப் பிரார்த்தனை ஸ்தலத்தில் என்னென்ன விசேஷம்?

திருவண்ணாமலைக்கு நிகரான மலை விராலிமலை. ஏராளமான சித்தர்கள் இம்மலையில் வாழ்ந்த, வாழுகின்ற தலம். கிரிவலம் விசேஷம். இத்தலம் பிரார்த்தனை தலம்.

குழந்தை இல்லாதவர்கள் முருகனை வேண்டி குழந்தை பிறந்ததும் குழந்தையை சுவாமியிடம் ஒப்படைப்பார்கள். பிறகு, குழந்தையின் மாமன்மார்களோ, உறவினர்களோ குழந்தைக்குப் பதிலாகத் தவிட்டைத் தந்து குழந்தையை சுவாமியிடமிருந்து பெற்றுக் கொள்வார்கள். பிறகு, குழந்தையைப் பெற்றவர்களிடம் ஒப்படைத்து விடுவார்கள்.

நோய், துன்பம், நீங்கவும், கல்வி, ஆரோக்யம், செல்வம், ஆயுள், விவசாயம் செழிக்கவும் முருகனிடம் வேண்டுகிறார்கள்.

முடி எடுத்தல், காது குத்தல், காவடி எடுத்தல், பால் குடம் எடுத்தல், ஷஷ்டி விரதம் இருத்தல் - ஆண்கள் அங்கப்பிரதட்சணம், பெண்கள் கும்பிடு தண்டமும் அடிப்பிரதட்சணமும் செய்கிறார்கள்.

ஷண்முகார்ச்சனை, ஷண்முக வேள்வி செய்கிறார்கள். கார்த்திகை விரதம் இருக்கிறார்கள். அன்னதானம் இக்கோயிலில் நடைபெறுகிறது. பிரார்த்தனை செய்து கொண்டு சுருட்டு வாங்கித் தருகிறார்கள். இரண்டு சுருட்டு நைவேத்யத்திற்கு வைத்தால் ஒரு சுருட்டை திருப்பித் தருகிறார்கள். அதை நம் வீட்டுப் பூஜை அறையில் வைத்துக் கொள்ளலாம்.

எந்த முருகன் கோயிலிலும் நடைபெறாத வகையில் ஆண்டுக்கு இருமுறை திருவிழா நடைபெறுகிறது. தேரோட்டம், தெப்பத் திருவிழா இரண்டும் வைசாக விசாகம், தை பூசம் ஆகியவற்றின் பொழுது விமரிசையாக நடைபெறுகின்றன.

(வலம் வருவோம்)



வேல்

அதிகாலையில் டெலிஃபோன் ஒலித்தது. யார் இந்த வேளையில் என்று பதற்றத்துடன் எடுத்து, 'ஹலோ' என்றேன்.

''நான்தாம்மா ப்ரியா பேசறேன்!'' என்றாள் அமெரிக்காவில் இருக்கும் என் பெண்.

''என்னடி? எப்பவும் வீக் எண்ட்தானே பேசுவே! என்ன திடீர்னு இப்ப கூப்பிடுறே... எல்லாரும் சௌக்கியம்தானே?'' படபடத்தேன்.

''அம்மா, டெலிஃபோன்னாலே பதற்றமா? முன்னெல்லாம் தந்திக்காரன் வந்தாலே நடுங்குவேன்னு சொல்லியே அது மாதிரி இருக்கு... சரி விடு... நீ அனுப்பின வேல் வெச்சு பூஜை செய்ய ஆரம்பிச்சது முதல், ஒரே சந்தோஷமான நியூஸ்தான் போ.''

நகைச்சுவை அனுபவம்

''வேலா? யார் கொடுத்தா? என்ன பூஜை? கொஞ்சம் விவரமாத்தான் சொல்லேண்டி!'' என்றேன் ஆச்சர்யத்துடன். யாராவது சாமி யாரைப் பார்த்திருப்பாளோ! நான் அனுப்பினேனு வேறு சொல்றாளே. எனக்கு ஒரே குழப்பமா இருந்தது.

''அம்மா! உனக்கு வரவர எதுவுமே ஞாபகம் இருக்கிறதில்ல; என் ஃப்ரெண்ட் இந்தியாவிலிருந்து வரும்போது கொடுத்தனுப்பிய பொருள்களுடன் வேலும் அனுப்பியிருந்தியே! மறந்துடுச்சா?'' என்று படபடத்தாள்.

''நிறுத்துடி! நான் வேல் எதுவும் அனுப்பலை. உன் ஃப்ரெண்ட் வேறே யாரோட பொருள்களையாவது உனக்குத் தவறுதலா கொடுத்திருக்கப் போறா... கேட்டுப் பாரு. அது சரி சந்தோஷமான நியூஸ் என்ன? அதைச் சொல்லு முதல்ல?'' என்றேன்.

''அதுவா உன் மாப்பிள்ளைக்கு பிரமோஷன் கிடைச்சிருக்கு; நீ பாட்டி

மாறல்!

யாகப் போற... நாங்க ஒரு வீடு வாங்கலாம்னு இருக்கோம். போதுமா!'' என்றாள் உற்சாகத்துடன்.

''எல்லாம் அந்த வேல் வந்த வேளைதான். தினம் பூஜை பண்ணி கந்தசஷ்டி கவசம், திருப்புகழ், பஜன்னு வீடே அமர்க்களம்தான். பஜன்க்கு எல்லாரும் இப்ப வந்துடுவா... நேரமாயிடுச்சு, நாளைக்குப் பேசறேன்!'' என்று ஃபோனை வைத்து விட்டாள்.

''காலங்கார்த்தாலே யாரோட வம்பு?'' என்று என் கணவர் நியூஸ் பேப்பரும் கையுமாக வந்து அமர்ந்தார். வேல் சமாச்சாரத்தைக் கேள்விப்பட்ட அவருக்கும் ஒண்ணும் புரியவில்லை. இப்படியே குழப்பத்துடன் ஒரு வாரம் கழிந்தன.

மறுபடி ஒருநாள் ப்ரியாவிடமிருந்து ஃபோன் வந்தது.

''அம்மா இன்னிக்கு பூஜைக்கு அப்பம் நைவேத்தியம் பண்ணணும். சட்டுன்னு ரெஸிபி சொல்லு'' என்றாள். விவரம் சொன்னதும்,

''அப்பக்குழி அனுப்பினியே? அப்பம் எடுக்க ஒரு கம்பி அனுப்பலியே'' என்று ஃபோனை அவசரமாக வைத்து விட்டாள்.

ஒரு வாரக் குழப்பம் அன்று யோசித்தபோது ஒருவழியாய்த் தீர்ந்தது. நாங்கள் அனுப்பிய பொருள்களுடன் இருந்த அப்பம் எடுக்கும் கம்பியைத்தான் 'வேல்' என நினைத்து அவள் பூஜை செய்து...

நினைக்க நினைக்க சிரிப்பு வந்தது.

- சங்கரி வெங்கட்,
சென்னை-63

''என் மருமக சுத்தத் தங்கம்.''

''அவ்வளவு நல்லவளா?''

''நீ வேறே. யாரும் பக்கத்திலேயே போக முடியாது.''

- எஸ். சுமதி, மதுரை - 14





எஸ். அன்னபூரணி

சக்கரவியூகம்!




காலை மணி பதினொன்று. திடீரென்று அலுவலக ஒலிபெருக்கியில் அறிவிப்பு கேட்டது. ஸ்விட்ச் போட்ட மாதிரி கிட்டத்தட்ட அனைத்து அலுவலர்களும் அந்த அறிவிப்பை உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டனர்.

அன்றைய வவுச்சர்களை அவசர அவசரமாகத் தயார் செய்து கொண்டிருந்த நானும் ஒருகணம் வேலையை நிறுத்திவிட்டு அறிவிப்பைக் கேட்கத் தயாரானேன்.

''நமது அலுவலகத்தில் பணியாற்றிய திருமதி ராகவி இன்று காலை எட்டு மணிக்கு மாரடைப்பால் காலமானார். அவரது ஆன்மா சாந்தியடைய அனைவரும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம். ராகவி அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மென்டில் பணிபுரிந்தவர்.''

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எங்கள் டிபார்ட்மென்ட் ராகவியா? விஷயத்தை ஜீரணிக்க முடியாமல் அனிச்சையாகக் கால்கள் எழுந்து நின்றன. மௌனம் காத்த அந்த இரண்டு விநாடிகளுக்குள்தான் மனம் எண்ணவோட்டங்களால் எத்தனை அலைபாய்ந்தது?

ஒரே டிபார்ட்மென்டில் இருந்தாலும் ராகவியுடன் நெருக்கமாகப் பழகும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எப்பொழுதும் சிரித்த முகம். ஆயினும் முகத்தில்



கவலை ரேகைகள், சோர்வை வெளியிடும் கண்கள். ஆனால் வேலையில் மிகவும் சுறுசுறுப்பு. நாம் தினமும் கண்டு வந்த அந்தப் பெண்ணின் அகால மரணத்துக்குக் காரணம் கண்டுபிடிக்க மனம் பரபரத்தது.

“**மா**தவன் ஸார், உங்களுக்கு ராகவியைத் தெரியுமா?”

“தெரியும்மா. ஓரளவுக்குத் தெரியும். அவங்க தினமும் ஆஃபீசுக்கு ஓடி ஓடி வருவாங்க. வரும்போதே மூச்சிரைக்கும். ‘என்னம்மா இது ஒருநாளைப் போல இத்தனை டென்ஷனோட வர்றீங்க. உடம்பு என்னத்துக்கு ஆகும்? கொஞ்சம் முன்னாடி கிளம்பி வரக்கூடாதா’ன்னு கேட்பேன்.”

“அதுக்கு என்ன பதில் சொல்வாங்க?”

''மாதவன் ஸார், சொந்த வீடு, அதுவும் இன்டிபென்டென்ட் ஹவுஸ் வேணும்னா சும்மாவா? விருகம்பாக்கத்திலே வீட்டைக் கட்டிக்கிட்டு, ஒருநாளைப் போல டாண்ணு ஒன்பதரை மணிக்கு ஆஃபீஸ் வரணும்னா ஓடித்தானே வரணும்? என்பாங்க.''

''முடியாம ஏம்மா சொந்த வீடு கட்டிக்கிட்டீங்க?''

''எங்க மாமனார் கண்டிப்பா சொல்லிட்டார். கட்டினா நிலம் வாங்கி தனி வீடுதான் கட்டணும்னு. அவர் பேச்சைத் தட்ட முடியுமா?'' அப்படிம்பாங்க.

என் மனத்தில் ஏதோ நெருடல். வீட்டில் பெரியவர்களின் வார்த்தைக்கு மதிப்பு கொடுக்க வேண்டியதுதான். ஆனால் அதனால் ஏற்படும் அதிகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு தர வேண்டாமா?

என் சிந்தனையை இடைமறித்தது பக்கத்து சீட் பானுவின் குரல்.

''பத்மினி மேடம், நாங்கள்லாம் ராகவி மேடம் வீட்டுக்குப் போகலாம்னு இருக்கோம். மேலதிகாரி கிட்ட அனுமதி வாங்கிட்டோம். நீங்களும் வர்றீங்களா?''

''கண்டிப்பாக வர்றேன்.''

கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டேன். என் மனதுக்குள் ஏதோவொரு நெருடல் இருந்து கொண்டேயிருந்தது. ராகவியின் திடீர் மறைவுக்கான சரியான காரணத்தைக் கண்டு பிடிக்காமல் மனம் ஆறுதலடையாது போலிருந்தது.

ஊழியர்கள் நான்கைந்து பேர் கால் டாக்ஸி ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டோம். நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. சக தோழியிடம் கேட்டேன்.

''என்ன போய்க் கொண்டே இருக்கிறதே. ஒவ்வொரு நாளும் இப்படியா பயணம் செய்து வந்து கொண்டிருந்தாள் ராகவி?''


மற்றொரு தோழி இடைமறித்தாள்.

''இதற்கே இப்படிச் சொன்னால் எப்படி? ஆஃபீஸுக்கு வருவதற்கு முன்னால அவள் தன் பையனை ஸ்கூல்ல விட்டுட்டு வரணும்.''

நான் திகைத்தேன்.

''என்ன ஸ்கூல்ல விட்டுட்டு வரணுமா? ஏன் வீட்டருகிலேயே ஒரு ஸ்கூல்ல சேர்த்திருக்கக் கூடாதா?''

''சேர்க்கத்தான் அவள் முயற்சி செய்தாள். ஆனா, அவ மாமியார் பேரனை புகழ்பெற்ற கான்வென்டில்தான் சேர்க்கணும்னு சொல்லிட்டாராம்.''



வயதான நோயாளிகளையோ, பிறந்த குழந்தைகளையோ பார்க்கச் செல்பவர்கள் 'குப்'பென அடிக்கும் சென்ட் பூசிக் கொண்டோ, வாசம் அதிகமான பூ வைத்துக் கொண்டோ செல்ல வேண்டாம். இது அலர்ஜி, மூச்சுத் திணறல் தரலாம்.
- கி. மஞ்சுளா, திருவாரூர்

''இவள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கலையா?''

''உன் பையன் நல்ல பள்ளியில் படிக்கணுங்கிற அக்கறை உனக்கில்லையா?'ன்னு மடக்கிட்டாங்களாம்.''

''இது என்ன அநியாயம்? எல்லாப் பொறுப்புகளையும் ஒருவர் தலையிலே கட்டிவிட்டால் எப்படி?''

இன்னொரு தோழி ஆற்றாமையில் புலம்பினாள்.

''அவள் க்ளர்க்கா இருந்தபோதாவது பரவாயில்லை. பத்து மணிக்கு ஆஃபீஸ் வந்தால் போதும். ஆஃபீஸர் ஆனவுடன் இன்னமும் சீக்கிரமாக ஒன்பதரை மணிக்கே வரணும்.''

கேள்விக்குறியுடன் அவளைத் தீர்க்கமாகப் பார்த்தேன்.

''என்ன மேடம் பாக்கறீங்க? நீங்க என்ன நினைக்கிறீங்கன்னு புரியுது. இவ்வளவு பிரச்னைகளுக்கு நடுவே அவள்

ஏன் ஆஃபீசர் எக்ஸாம் எழுதினான்னு தானே நினைக்கிறீங்க?''

ஆமாம் என்பது போல் தலையாட்டினேன்.

''அவள் எழுத மாட்டேன்னுதான் சொன்னா. அவ ஹஸ்பண்டுதான் வற்புறுத்தி எழுதச் சொன்னார்.''

''எதுக்காகவாம்?'' என்னையறியாமலே என் குரலில் கடுமை தொனித்தது.

''அவரோட நண்பர்களின் மனைவியெல்லாம் பெரிய பெரிய போஸ்ட்ல இருக்காங்களாம். அதனாலே இவளும் ஆஃபீஸரானாத்தான் அவருக்குப் பெருமையாயிருக்குமாம். அது தவிர ஆஃபீஸரானாத்தான் வீடு கட்ட ஹவுஸிங் லோன் அதிகம் கிடைக்கும் என்று சொல்லி விட்டாராம்.''



எனக்குள் மெல்லிய சீற்றம் எழுந்தது. பொம்மலாட்டத்தில் ஆட்டி வைக்கப்படும் பொம்மையா இந்த அப்பாவிப் பெண்!

ராகவி புது வீடு வாங்கிய போது கொஞ்சம், பையனை தொலைதூர பள்ளியில் சேர்த்தபோது கொஞ்சம், பதவி உயர்வு பெற்றபோது கொஞ்சம் என்று கொஞ்சங் கொஞ்சமாக அவள் இந்த முடிவை நோக்கித் தள்ளப்பட்டதை அவள் உட்பட எவருமே உணர்ந்திருக்கவில்லை, இப்பொழுது கூட உணர முடியாமல் குழம்பிக் கொண்டிருக்கின்றனர். இந்த அறியாமையை நினைக்கையில் என் மனம் வெதும்பியது. பொன் முட்டையிடும் வாத்து கதையாகி விட்டதோ?

மனம் எழுப்பிய கேள்விக்கு பதில் கிடைத்தாலும் சமாதானமடையவில்லை. இது ஏன்? எது, எங்கு தவறாகப் போயிற்று? செல்ஃபோன் ஒலித்தது.

''என்ன செல்வி?''

''பத்மினி மேடம். அடுத்த மாதம் நம்ம லேடீஸ் கிளப்போட ஆண்டு விழா. பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றி நீங்கள் பேசணும்.''

''நானா?''

''ஆமாம். இன்விடேஷன்ல உங்க பெயரைப் போட்டுட்டோம். ஒரு வாரம் முன்னாடி கூட நீங்க ஒத்துக்கிட்டீங்களே?''

''சரி. என்ன தலைப்பு?''

''அதை நீங்களே முடிவு செய்யுங்க.''

என் மனது முழுவதும் ராகவியே ஆக்ரமித்துக் கொண்டிருந்ததால், என்னால் தலைப்பைப் பற்றி உடனே முடிவெடுக்க முடியவில்லை. காலாற நடந்து கோயிலுக்குப் போகலாமென்று முடிவு செய்தேன்.

தரிசனம் முடிந்து கோயிலை விட்டுக் கிளம்பலாம் எனத் திரும்பியபோதுதான் கவனித்தேன். உபந்யாஸம் நடந்து கொண்டிருந்தது. கணீரென்று மைக்கிலிருந்து ஒலித்த வார்த்தைகள் எனக்கு போதி மரமாயின.

''யுத்தத்தில் அபிமன்யு சக்கர வியூகத்தை உடைத்துக் கொண்டு போனான். ஆனால் கௌரவர்கள் செய்த சூழ்ச்சியால் அதில் சிக்கிக் கொண்டு வெளியே வர முடியாமல் போயிற்று. அவன் மட்டும் வெளியே வரும் கலையையும் கற்றுக் கொண்டிருந்தால் அவன் தலையெழுத்து நல்லவிதமாக மாறியிருக்கும். இது நமக்குக் கற்றுக் கொடுக்கும் வாழ்க்கைப் பாடம் என்ன? பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும்போது எந்த

பஞ்சாமிர்தம்!



எள்ளுப் பாட்டி : மாரியம்மாள், கொள்ளுப் பாட்டி: அருணாசலம் அம்மாள், பாட்டி: கோமதி, அம்மா: புவனேஸ்வரி, குழந்தை : ஜனனி

அளவுக்கு நம்மால் தாக்குப்பிடிக்க முடியுமோ அந்த அளவுக்கு மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை எதிர்கொள்ளும்போது சிக்கல் நேர்ந்தால் அந்த வியூகத்தை உடைத்துக் கொண்டு வரும் வழியையும் கற்றுக் கொள்வதே விவேகம் ஆகும். இதுபற்றி திருவள்ளுவரே கூறியிருக்கிறார்.

'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்'

அதாவது மெல்லிய மயில் தோகை ஆனாலும் ஒரு வண்டி தாங்கும் அளவுக்கு மேல் அதில் ஏற்றினால் அந்த வண்டியின் அச்சு முறிந்து வண்டிக்கே சேதம் ஏற்படும்.''

அதற்கு மேல் வார்த்தைகளை கிரகித்துக் கொள்ள என் மனம் இடம் கொடுக்கவில்லை. ஏதாவது செய்ய வேண்டும். பெண்கள் தேவையானால் சக்கரவியூகத்தை உடைத்துக் கொண்டு வர வேண்டும் என்ற விழிப்புணர்வு தேவை. ஒரு நல்ல மனைவியை, ஒரு நல்ல தாயை, ஒரு நல்ல மருமகளை ஒரு குடும்பம் இழந்து விடாமல் இருப்பதற்காகவாவது வியூகத்தை உடைத்து மீண்டு வர ஏதாவது செய்ய வேண்டும். இந்த விழிப்புணர்வுத் தீயை உடனடியாக பற்றவைக்க முடியாவிட்டாலும், சிறு பொறியையாவது தூண்டி விட வேண்டும். தாமதிக்கக் கூடாது. கையிலிருந்த செல்ஃபோனை விரைவாக எடுத்தேன்.

''செல்வி, குறித்துக்கொள். நான் அடுத்த மாதம் லேடீஸ் கிளப் பெண்கள் கூட்டத்தில் பேசப் போகும் தலைப்பு 'சக்கரவியூகம்'.

செல்வியின் ஆச்சரியம் நிறைந்த நன்றியை ஏற்றுக்கொண்ட என் மனம் சட்டென்று புயலுக்குப் பின் வந்த அமைதியால் நிரம்பியது. வெகு நாட்களுக்குப் பிறகு நான் படுத்த உடனேயே உறங்கிவிட்டேன். ●

துல்லியமான கணிப்புகளும், எளிய பரிகாரங்களும்!



கணித்து வழங்குபவர் : சுவாமி கண்ணன் பட்டாச்சார்யா

குரு (வ)			கேது
	1.11.2010 அன்று ராசி கிரகநிலை		
			சந்திரன்
ராகு	செவ்வாய் புதன்	சுக்ரன் சூரியன்	சனி

கிரக நிலை

நவம்பர் மாதம் எப்படி?





அஸ்வினி,
பரணி, கார்த்திகை
1–ஆம் பாதம்

இந்த மாதம் பெரும்பாலும் நன்மை நடக்கக்கூடிய நிலை உண்டு என்றாலும் ராசிநாதன் செவ்வாய் ஆறுக்குடைய புதனுடன் கூடி இருப்பதால் அவ்வப்பொழுது சிறு சிறு சங்கடங்களையும் சந்திக்க நேரும். என்றாலும் அவை பெரிதும் பாதிக்க வழியில்லை என்பதால் பயம் வேண்டாம். உங்களிடம் உதவி பெற்ற சிலர் இப்போது உங்கள் உதவியை நாடி வரக்கூடும். மறைமுக எதிரிகளால் பாதிப்பும் இல்லை. என்றாலும் எச்சரிக்கை தேவை.

உத்தியோகஸ்தர்கள் தத்தம் பணியில் மிகுந்த கவனம் செலுத்தி வருவது நல்லது. இல்லையேல் உயரதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரும். வியாபாரம் நல்ல முறையிலேயே நடந்து வரும் என்றாலும் இப்போதைக்கு விரிவு படுத்தும் முயற்சி வேண்டாம்.

அயல்நாட்டுக் கடிதம் ஒன்று நற்செய்தியைத் தாங்கி வரும். புகழ் பெற்றவர்கள், மகான்களின் சந்திப்பு உண்டாகும். பெண்கள் மகிழ்ச்சியடையும் வகையில் நிறைய நிகழ்ச்சிகள் நடைபெறும். உறவினர் வருகை ஆடை அணிகலன் சேர்க்கை உண்டு. மகன் அல்லது மகளுக்குச் மருத்துவச் செலவு செய்யும் நிலை ஏற்படலாம்.

தொழிற்பிரிவினர் ஏற்ற இறக்கமான நிலையையே காண முடியும். கூட்டாளிகளிடம் சுமுகம் நிலவும். மாணவமணிகள் படிப்பில் சிறந்து விளங்குவீர்கள். கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் கிட்டும்.

பரிகாரம்:

துர்க்கைக்கு செவ்வாய்கிழமைகளில் தீபமேற்றி வழிபட்டு வாருங்கள். ஜோதிடரின் ஆலோசனை பெற்று நவக்கிரக சாந்தி பூஜை செய்யுங்கள். முன்னேற்றம் உண்டாகும்.

கார்த்திகை, 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி
மிருகசீரிஷம் 1,2 ஆம் பாதங்கள்



இந்த மாதம் ராசிநாதன் சுக்ரபகவான் சூரிய பகவான் சேர்க்கை பெறுவதால் நன்மையும், தீமையும் கலந்த பலன்கள் நடைபெறும். சேமிப்பு குறையும். சிக்கன நடவடிக்கைகளால் சில செலவுகளைக் குறைக்க முயலலாம். உடல்நலத்தில் சிறு உபாதை தோன்றி மறையும்.

புதுமனை புகுவிழா நடத்த நீங்கள் முயன்றாலும் அதற்கேற்ற சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை. சில தடங்கல்களுக்குப் பிறகே விருப்பம் நிறைவேறக் காண்பீர்கள். சிலர் குடியிருக்கும் வீட்டை மாற்றத் திட்டமிடுவீர்கள். வீண் வழக்குகள் உண்டாக இடமுண்டு. கூடுமானவரை எல்லாரிடமும் பணிவாகப் பேசவும்.

தொழிற்பிரிவினர் பணியாளர்களின் பிரச்னைகளைச் சந்திக்க நேரும். அது தொழில் வளர்ச்சியைப் பாதிக்காது என்றாலும் பக்குவமாக நடந்து கொள்ளவும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றை இப்போது எதிர்பார்ப்பதற்கில்லை. பெண்களுக்கு புத்திர வழியில் மகிழ்ச்சி ஏற்படும்.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு துளசியும், வெண்ணெயும் சாத்தி வழிபட்டு வாருங்கள். சகல முன்னேற்றங்களையும் அனுமன் தருவான்.



மிருகசீரிஷம் 3,4–ஆம் பாதங்கள், திருவாதிரை புனர்பூசம் 1,2,3–ஆம் பாதங்கள்

இந்த மாதம் ராசிநாதன் புதன் செவ்வாயுடன் சேர்ந்து சஞ்சரிப்பதால் நிலம், பூமி விஷயங்களில் நிதானப்போக்கு அவசியம். ரியல் எஸ்டேட், பெட்ரோல், எரிவாயு ஆகியவற்றில் தொடர்புள்ளவர்களுக்கு சில சங்கடங்கள் உண்டாகலாம்.

நீங்கள் திறமையாகச் செயல்பட்டாலும் ஓரிரு இடையூறுகளைத் தவிர்ப்பதற்கில்லை. நிதி நிறுவனங்களில் போட்ட பணம் திரும்பக் கிடைக்காமல் வருந்தி வந்தவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும்.

உத்தியோகஸ்தர்களுக்கு விருப்பமில்லாத இடமாற்றம் ஏற்பட இடமுண்டு. என்றாலும் உங்கள் முறையான அணுகுமுறையால் உயர் அதிகாரிகளின் ஆதரவைப் பெற்று, விருப்பமான இடத்துக்கு மாறுவீர்கள்.


திருமண வயதடைந்த பெண்களுக்கு திருமண முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆயினும் சிறிது காலத்துக்குத் தள்ளிப் போகவே செய்யும். இறுதியில் நல்ல முறையில் வரன் அமையும். வேலையில்லாதிருந்தவர்களில் சிலர் இப்போது ஏதேனும் ஒரு வேலையைப் பெற்று விடக்கூடும்.

பெண்கள் குடும்ப நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்துவீர்கள். மாணவமணிகளின் செயல்பாடுகள் திருப்திகரமாகவே இருந்து வரும். கணிப்பொறி பயிலும் மாணவர்கள் உங்கள் திறமைகளை நல்ல முறையில் வளர்த்துக் கொள்வீர்கள். இயந்திரங்களில் பணிபுரிவோர் கவனமாகச் செயல்படுவது அவசியம்.

பரிகாரம்:

தினமும் 'சண்முக கவசத்'தைப் படித்து வருவதுடன் நவக்கிரக சந்நிதியில் உள்ள செவ்வாய் பகவானை வணங்கி வருவது நல்லது. உங்கள் வாழ்வில் சகல நன்மைகளும் உண்டாகும்.

புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்



இந்த மாதம் அநேக கிரகங்கள் அனுகூலமாக சஞ்சரிக்காததால் நன்மையும் தீமையும் கலந்த பலன் ஏற்படும். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பழைய நண்பர்களோ, குடும்பத்தை விட்டு பிரிந்து சென்ற ஒருவரோ உங்களைச் சந்திக்கக்கூடும். வீடு கட்டத் திட்டமிட்டவர்கள் கணக்கிட்டதை விட இப்போது அதிகத் தொகையைச் செலவிட வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

மாணவமணிகள் படிப்பில் முன்னணி நிலையை அடைந்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் அமையும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பெண்கள் குடும்ப நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்துவர். வேலைக்குச் செல்லும் சிலர் பொன், பொருள், அசையாச் சொத்து வாங்குவீர்கள். பழைய நண்பரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு. பிற மொழி பேசும் ஒருவரால் அனுகூலம் வரும்.

சகோதர வழியில் மனக்கசப்பு தோன்றி மறையும். தெய்விகச் சிந்தனைகள் மேலோங்கும். வியாபாரம் நல்ல முறையில் நடைபெற்று வரும். வழக்குகளில் திருப்திகரமான நிலையே காணப்படுகிறது.

பரிகாரம்: தினமும் சுந்தர காண்டத்தைப் படித்து வாருங்கள். உங்கள் வாழ்வில் நற்பலன்கள் மேலோங்கும்.



மகம், பூரம், உத்திரம் 1–ஆம் பாதம்

இந்த மாதம் ராசி நாதன் சூரியன் மாதத்தில் பாதி நாட்கள் நீச்சம் பெற்று சஞ்சரிக் கிறது. பதற்றமில்லாமல் நடந்து கொள் வதன் மூலமே சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள முடியும். பொறுமையாகவே எதிலும் செயல்பட்டு வருவது அவசியம். உடல் நலத்தி லும் அக்கறை செலுத்த நேரும். சிறு குறைபாடு தானே என அலட்சியப்படுத்தாமல் மருத்துவர்கள் சொல்வதைக் கேட்கவும்.

தவணை முறையில் பொருள்கள் வாங்குவதைத் தவிர்க்கவும். இல்லையேல் பொருளாதார நிலையில் சிரமப்பட நேரும். புதிய வாகனம் அல்லது நகைகளை வாங்கும் வாய்ப்பு சிலருக்கு அமையும். மாணவ மாணவி கள் படிப்பில் மட்டுமல்லாமல் விளையாட்டு, போட்டிகளி லும் திறமையை வெளிப்படுத்தி பாராட்டு பெறுவீர்கள்.

வியாபாரத்தைப் பொறுத்தவரை திரவப்பொருள்கள், மளிகைப்பொருள்கள் வியாபாரம் லாபகரமாக நடைபெற்று வரும். மரவியாபாரம் சற்றே மந்த நிலையில் காணப்படும். வேலையாட்களின் ஒத்துழைப்பு நல்ல முறையில் அமைந்திருக்கும் என்பதால் தொழிற்பிரிவினர் வளர்ச்சி நிலையை எட்டுவார்கள்.

உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகம் தொடர்பான விஷயங்களில் அதிருப்தியான போக்கே நீடிக்கும். உயர் அதிகாரிகளுக்கு நல்ல அபிப்ராயம் ஏற்பட இன்னும் நீங்கள் கடினமாகப் பாடுபடுவது அவசியம்.

வயிற்றுவலி, முழங்கால் வலிகளால் அவதிப்பட நேரும். காணாமற் போன பொருள் ஒன்று திரும்பக் கிடைக்கப் பெற்று மகிழ்வீர்கள்.

பரிகாரம்:

நவக்கிரக சந்நிதியிலுள்ள குருபக வானை வணங்கி வருவதுடன், குருபக வான் காயத்ரியையும் 11 முறை தினமும் சொல்லி வரவும். உங்கள் வாழ்வில் வளமும் நலமும் என் றென்றும் பெருகும்.



உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள் அஸ்தம், சித்திரை 1,2–ஆம் பாதங்கள்

இந்த மாதம் பெரும்பாலும் நற்பலன் களை எதிர்பார்க்கும் நிலையில் ராசி நாதன் புதன், செவ்வாயுடன் சஞ் சரிப்பதால் சிறு தொல்லைகள் அவ்வப்போது ஏற்படும். எனினும் பொருட்படுத்தத் தேவையில்லை.

பிரிந்த தம்பதியர் சேர்ந்து வாழ இடம் உண்டு. தொழிற் பிரிவினர் படிப்படியாக வளர்ச்சியையும் வருமானப் பெருக்கத்தையும் கண்டு மகிழ்வீர்கள் பணப்புழக் கம் ஏற்படும். எனினும் சிக்கனமாக இருப்பது நல்லது. வியாபாரம் திருப்தி தரும்.

உத்தியோகஸ்தர் கள் அலுவலக விஷ யங்களில் ஏற்படும் மாற்றங்களை மறுக்கா மல் ஏற்றுக் கொள் ளுங்கள். உயரதிகாரி களின் ஆதரவைப் பெறும் வகையில் உங்கள் பணிகளையும் நடவடிக்கைகளையும் அமைத்துக் கொள்வது நல்லது.

எழுத்து, பத்திரிகைத் துறையினர் கூடுதலான வாய்ப்புகளைப் பெற்று மகிழ் வீர்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் அமையும். சிலர் தன– வரவைப் பெறச் சந்தர்ப்பம் உண்டு.

பரிகாரம்: சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கு எள்ளன்னம் நைவேத்தியம் செய்து, அதை உடல் ஊனமுற்றவர்களுக்கு விநியோகம் செய்து வாருங்கள். உங்கள் வாழ் வில் சகல நன்மைகளும் உண்டாகும்.



சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

இந்த மாதம் ஜன்மராசியில் சூரிய பகவான் நீச்சம் பெற்று சஞ்சரிப்பதால் எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. உங்களுக்கு எப்போதும் தெய்வபலன் துணையிருக்கும் என்றாலும் பொறுமையாக நடந்து கொள்வதில் தவறேதுமில்லை. திடீரென எந்த முடிவையும் எடுக்காதீர்கள். ஒருமுறைக்கு இருமுறை ஆலோசித்து நடக்கவும்.

மனைவி வழி உறவினர்கள் ஒத்தாசையாக இருந்து வருவார்கள். தொழிற்பிரிவினர் ஓரளவு பொருளாதாரச் சிக்கலுக்கு ஆளாக நேரும். எனினும் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட வழியில்லை.

பிறமொழி பேசுவோரிடம் எச்சரிக்கையாய்ப் பழகி வருவது நல்லது. வெளிப்படையாக எல்லாவற்றையும் பேசிவிடாதீர்கள். மாணவ மணிகள் வார முற்பகுதியில் ஞாபக மறதித் தொல்லையால் அவதிப்பட நேரும். பெண்கள் குடும்பப் பிரச்சனைகளைப் பக்குவமாகச் சமாளிப்பது அவசியம். பேச்சைக் குறைப்பது பிரச்சனையைத் தீர்த்து வைக்கும். கைப்பொருள்கள் களவு போகும் நிலை உள்ளதால் உடைமைகளின் மீது மிகுந்த கவனம் தேவை.

இயந்திரங்களில் பணியாற்றும் நபர்கள் எச்சரிகையாய்ச் செயல்பட வேண்டும். பழைய நகைகளை விற்று புதிய நகைகளைச் சிலர் வாங்கக்கூடும். உடலில் சிறுகாயம் ஏற்பட்டு பின் சீராகும். கேளிக்கைகளில் ஈடுபாடு கொள்வதைத் தவிர்ப்பது நல்லது.

பரிகாரம்:

வியாழக்கிழமைகளில் தட்சிணாமூர்த்திக்கு கொண்டைக்கடலை நைவேத்யம் செய்து வில்வத்தால் அர்ச்சனை செய்து வணங்கி வாருங்கள். உங்கள் வாழ்வில் செல்வச் செழிப்பு உண்டாகும்.



விசாகம் 4–ஆம் பாதம், அனுஷம், கேட்டை

இந்த மாதம் அஷ்டமாதிபதி செவ்வாய் ஜென்மராசியில் சஞ்சாரம் செய்வதால் நற்பலன்களை அதிகமாக எதிர்பார்ப்பதற்கில்லை. யாரிடமும் வெளிப்படையாக எதையும் பேசாமலும் நிதானமாக நடந்து கொள்வதும் பிரச்னைகளிலிருந்து விடுபட உதவும். யாருக்கும் எவ்விதமான வாக்குறுதியையும் கொடுத்து விடாதீர்கள். ஜாமீன் கையெழுத்துப் போடுவதோ, கடன் கொடுப்பதோ இப்போதைக்கு நல்லதில்லை.

நண்பர்களே உங்களுக்குத் தொல்லை தரக்கூடிய நிலை உள்ளதால் எல்லாரிடமும் எச்சரிக்கையாய் நடந்து கொள்வதே உத்தமம். பூமி, நிலம், வீடு சார்ந்த தொழில் செய்பவர்கள் சட்ட ஆலோசனையைப் பெற வேண்டியது அவசியம். பெண்களுக்கு சேமிப்பு கரையும். சிலர் பழைய ஆபரணங்களை மாற்றி புதிய ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பும் ஏற்படும்.

பத்திரிகைத் துறையினரின் திறமைகள் வெளிப்படும். வியாபாரம் நல்ல முறையிலேயே நடைபெறும். குறிப்பாக சிவப்பு, பொன் நிறப் பொருள்கள், லாபகரமாக இருந்து வரும்.

பரிகாரம்: சனிக்கிழமைதோறும் சனி பகவானை வணங்கி வருவதும், நள சரித்திரம் படிப்பதும் நன்மை தரும். ஏழைகளுக்கு எள்ளன்னம் தானம் செய்வது நல்லது.



மூலம், பூராடம், உத்திராடம் 1–ஆம் பாதம்

இந்த மாதம் சனி பகவான் அருளால் பெரும்பாலும் நற்பலன்களே நடைபெற்று வரும் என்றாலும் ஓரிரு சங்கடங்களும் ஏற்பட இடமுண்டு. உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்ற நன்மைகளை எதிர்பார்க்கலாம். உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்று மகிழ்வீர்கள்.

பெண்கள் நெருங்கிய உறவுகளின் வழியால் மகிழ்ச்சி அடைவர். சிலருக்கு பிரிந்த உறவுகள் தேடி வரவும் வாய்ப்புண்டு. எதிர்பாராத பரிசு பாராட்டும் கலைத்துறையில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும்.

கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற்று மகிழ்வீர்கள் என்றாலும் மூன்றாம் நபரை நம்பாமல் நேரடியாக நீங்களே முயற்சி செய்வதுதான் வெற்றியைத் தாக்கூடும். நண்பர்களின் உதவி, நல்ல முறையில் சமயத்தில் கிடைக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரக்கூடும்.

வியாபாரம் திருப்திகரமாகவே நடைபெற்று லாபம் தரும். சொந்தத் தொழிலில் பிரச்னை எதுவும் இராது. கூட்டுத்தொழில் செய்வோராயின் எச்சரிக்கை தேவை. அரசு வழியில் சில நன்மைகளை எதிர்பார்க்கலாம். மகன் அல்லது மகளுக்கு மருத்துவச் செலவுகள் ஏற்பட இடமுண்டு.

திட்டமிட்ட பயணம் ஒன்றைத் தவிர்ப்பதே நல்லது. சகோதர வழியில் மனக்கசப்பு ஏற்பட வழியுண்டு. மாணவமணிகள் பெரும் ஆர்வத்துடன் படிப்பில் ஈடுபட்டு பெற்றோரை மகிழ்விப்பீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும்.

பரிகாரம்:

சங்கடஹர சதுர்த்தி நாளில் விநாயகப் பெருமானுக்குரிய அபிஷேகப் பொருட்களை வாங்கித்தந்து, பிள்ளையாரை வழிபட்டு வாருங்கள். மங்காத வளமும், நலமும் பெருகும். அதிர்ஷ்டம் குவியும்.



உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள் திருவோணம் அவிட்டம் 1,2–ஆம் பாதங்கள்

இந்த மாதம் பத்தாம் இடத்தில் சூரியன் நீச்சம் பெற்று சஞ்சரிப்பதால் அதிருப்தி தரக்கூடிய பலன்களே நேரும். உங்களுக்கு வேண்டாத சிலர் தொல்லை கொடுக்க முயலுவர். அவர்களுடைய முயற்சி எதுவும் வெற்றி பெறாது. உங்கள் தெய்வ நம்பிக்கை உறுதுணையாக இருந்து வரும். உங்கள் முயற்சியில் வெற்றி பெறும் வாய்ப்பு நாளுக்கு நாள் கூடி வரும். உத்தியோகஸ்தர்களுக்கு உயரதிகாரிகளின் ஆதரவு இருந்து வரும் என்றாலும் அதற்கேற்ற வகையில் உங்கள் பணிகளில் ஒழுங்காக இருப்பது அவசியம்.

திருமணம் தடைப்பட்டவர்களுக்கு தாய் வழி உறவினர்களின் மூலம் திருமண முயற்சிகள் கைகூடி வரும். நீண்ட நாள் பிரிந்த நண்பர்கள் தேடி வருவதன் மூலம் நற்பலன்களைக் காணலாம். குடியிருக்கும் வீட்டை மாற்றும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும். நெருப்பு, மின்சாரக்கருவி ஆகியவற்றின் அருகில் பணிபுரிபவர்கள் மிகவும் கவனமாகச் செயல்படுவது அவசியம்.

பரிகாரம்: செவ்வாய்கிழமைகளில் துர்கா தேவிக்கு தீபமேற்றி வழிபட்டு வாருங்கள். உங்கள் வாழ்வில் சுபிட்சம் ஏற்படும்.

கும்பம்



அவிட்டம் 3,4–ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3–ஆம் பாதங்கள்

இந்த மாதம் ஜீவனஸ்தானத்தில் உள்ள புதபகவான் அருளால் பெரும்பாலான நன்மைகளுக்கிடையே சிறு இடையூறுகளையும் எதிர்கொள்ள நேரும்.

தொழிற்பிரிவினர் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண முடியும். என்றாலும் தொழில் தொடர்பாக சிறுசிறு பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும். அதன் விளைவாகப் பெரும் பயனை அடைவீர்கள் என்பதால் சிரமத்தைப் பொருட்படுத்தாதீர்கள்.

உத்தியோகஸ்தர்கள் இடமாற்றத்துக்கான உத்தரவுகளைப் பெறக்கூடும் என்றாலும் அங்கு செல்ல உங்களுக்கு விருப்பம் இராது. இருப்பினும், சிறிது காலம் பொறுமையாய் இருப்பதன் மூலம் மாறிச் சென்ற இடமே உங்களுக்குப் பிடித்துப் போகும். புதிய கடன் பெறுவதில் நிதானம் தேவை. ஆவணங்களைச் சரியாக பராமரிக்காவிட்டால் சிக்கல்கள் உண்டாகும். சக பணியாளர்களிடம் சுமுகமாகப் பேசிப் பழகி வருவதும் நல்லது.


சிறு விபத்து, காயம் போன்றவை ஏற்படும் நிலை தென்படுவதால் பயணங்களின் போது மிகுந்த கவனம் தேவை. தெய்வ அனுக்கிரகத்தால் தப்பி விடுவீர்கள். என்றாலும் கவனம் தேவை.

மனத்தில் தெய்விகச் சிந்தனைகள் மேலோங்கும். ஆலய தரிசனம் கண்டு வருவதற்காக குடும்பத்துடன் ஒரு பயணத்தை மேற்கொள்வீர்கள். பெண்களுக்கு முக்கியமான சில பொறுப்புகளை ஏற்கும் வாய்ப்பு நேரும். புத்திர வழியில் மகிழ்ச்சி கிட்டும்.

பரிகாரம்:

பிரதோஷ நாளில் சிவபெருமானின் அபிஷேகத்துக்குரிய பொருள்களை வாங்கிக் கொடுத்து வணங்கி வரவும். சகல முன்னேற்றங்களும் ஏற்படும். சௌக்கியமாக இருப்பீர்கள்.

மீனம்



பூரட்டாதி 4–ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

இந்த மாதம் பாக்கியஸ்தானத்தில் ஆட்சி பெறும் அங்காரகன் அருளால் பெரும்பாலும் நற்பலன்களே நடைபெறும். அவ்வப்போது சிறு தொல்லைகள் ஏற்படும். பொருளாதார நிலையில் சிறு சரிவு ஏற்படக்கூடும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் கடன் வாங்காமல் தப்பிக்கலாம்.

தொழிற்பிரிவினர் வளர்ச்சி நிலையை எட்ட வாய்ப்புண்டு. வருமானத்தில் பெரிய உயர்வுக்கு வழி இராது. குடும்பத்தினர் ஒருவர், கோபித்துக் கொண்டு சென்றவர், தாமாகவே தேடி வருவார். புதிய வாகன வசதி சிலருக்கு அமையக்கூடும்.

கலைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் சில கிடைப்பதுடன் பொருளாதார நிலையிலும் முன்னேற்றம் ஏற்படும். மாணவமணிகள் படிப்பில் முன்னணி நிலை பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு உயரதிகாரிகளின் ஆதரவு பெற வாய்ப்புண்டு. பிற மொழி பேசும் ஒருவரது அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு. சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அமையலாம்.

பரிகாரம்: தினமும் சண்முக கவசத்தைப் படித்து வருவதுடன், நவக்கிரக சந்நிதியில் உள்ள செவ்வாய் பகவானை வணங்கி வரவும். உங்களுக்கு சகல சௌபாக்யங்களையும் உண்டாக்கும்.

தேவை:
பச்சரிசி - 1 கப்,
பொடித்த வெல்லம் - ½ கப் (தேவைக்கு ஏற்ப),
தேங்காய் (சிறிய துண்டுகளாக நறுக்கியது) - 1 டேபிள் ஸ்பூன்,
ஏலத்தூள் -சிறிது,
மஞ்சள் வாழைப்பழம் (பழுத்தது) - 1 (விருப்பப்பட்டால்),
நெய் பாதி தேங்காய் எண்ணெய் பாதி- தேவைக்கு,
(தேங்காய் எண்ணெய்க்குப் பதில் ரீஃபைண்டு ஆயிலும் சேர்க்கலாம்)



திருக்கார்த்திகை வருகிறது. முத்து முத்துச் சுடரேற்றி, வீடெங்கும் வைத்து வழிபடவும். கூடவே, நெய் அப்பம் செய்து நைவேத்திய மாகப் படைக்கவும். நல் இனிப்பும், தூய மணமும் கொண்ட இனிய வாழ்க்கை அமையும்.

நெய் அப்பம்



செய்முறை:
பச்சரிசியை நீரில் கழுவி ஒரு மணி நேரம் ஊறவைக்கவும். ஊறிய அரிசியில் சிறிது தண்ணீர் தெளித்து நைசாக அரைக்கவும். பொடித்த வெல்லம்,

தலை வாழை

ஏலத்தூள் சேர்த்து அரைக்கவும். மசித்த வாழைப்பழத்துடன் அரைத்தெடுத்து பஜ்ஜி மாவு பதத்துக்குக் கரைக்கவும். அதில் பொடியாக அரிந்து வைத்துள்ள தேங்காய்த் துண்டுகளைச் சேர்க்கவும்.

ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் கழித்த பிறகு குழி பணியாரக் கல்லில் நெய், எண்ணெய் கலந்து ஒவ்வொரு குழியிலும் விடவும். நெய், எண்ணெய்க் கலவை சூடானதும் மாவைச் சிறிய கரண்டியால் எடுத்து ஒவ்வொரு குழியிலும் ஊற்றவும். முறுக்கு எடுக்கும் நீண்ட கம்பியினால் அப்பத்தைத் திருப்பிப் போட்டு வெந்ததும் எடுத்து சூடாகப் பரிமாறவும்.

குறிப்பு: அன்றே சாப்பிடுவதானால் மட்டும் பழம் சேர்க்கவும். ஒரு சில நாட்கள் வைத்துச் சாப்பிடுவதாக இருந்தால் பழம் சேர்க்க வேண்டாம்.

தேவிகா காளியப்பன்



பனியில்லாத மார்கழியா? பொரியில்லாத கார்த்திகை தீபமா? சுவாமிக்கு நிவேதனம் செய்து, நீங்களும் சுவைத்துப் பாருங்க!

தேவை:
அவல் பொரி (பொரித்தது) - 2 கப்,
பொடித்த வெல்லம் - ½ கப் தேவைக்கு,
வறுத்த முந்திரி - 1 டேபிள் ஸ்பூன்,
பொட்டுக்கடலை - ¼ கப்,
வறுத்த வேர்க்கடலை - ¼ கப்,
ஏலத்தூள், சுக்குப்பொடி - சிறிது.



கார்த்திகை பொரி

செய்முறை:

பொரித்த அவல் கடைகளில் கிடைக்கும். அதனை வாங்கி வந்து தூசு இல்லாமல் சுத்தப்படுத்தவும். பொடித்த வெல்லத்தில் சிறிது தண்ணீர் விட்டுக் கரைந்ததும் வடிகட்டி பிறகு அடுப்பில் வைத்துக் கொதிக்க வைக்கவும்.

பாகு நன்றாக தளதளவென்று கொதித்துக் கெட்டியானதும் பொரித்த அவல், பொட்டுக்கடலை, வறுத்த வேர்க்கடலை, வறுத்த முந்திரி, ஏலத்தூள், சுக்குப்பொடி கலவையில் விட்டு நன்றாகக் கலக்கவும்.

சமையல்! கிராமிய மணம் கமழும் சமையல் பகுதி! 6

குளிர்காலம் வந்து விட்டது. இரவில் சுடச்சுட சப்பாத்தியும், சப்ஜியும் சாப்பிடுவது உடலுக்கு நல்லது. இதோ சாஃப்ட் சப்பாத்தி செய்முறை...



மிருதுவான சப்பாத்தி

ஒரு அகன்ற பாத்திரத்தில் 1 டீஸ்பூன் எண்ணெய் அல்லது நெய் (அ) வெண்ணெய் ஏதாவது ஒன்று, அரை டீஸ்பூன் உப்பு, 2 டீஸ்பூன் தண்ணீர் விட்டு கையால் நன்கு தேய்க்கவும். சோப்பு நுரை போல நன்றாக நுரைத்துக் கொண்டு வரும்.

அதன்பின் தேய்ப்பதை நிறுத்திவிட்டு, அதன் மேல் கோதுமை மாவைப் போட்டுத் தேவையான தண்ணீர் விட்டு இளக்கமாகப் பிசையவும். சிறிது நேரம் ஊறவைத்து விட்டுச் சப்பாத்தியை இலேசாகத் திரட்டி, சூடான தோசைக் கல்லில் இருபுறமும் திருப்பிப் போட்டு அனலில் (காஸ் அடுப்பின் பர்னர் மீது போட்டால்) போட்டு எடுத்தால் உப்பிவிடும். இது தான் புல்கா.

மேலே சிறிது நெய் தடவி சூடாகப் பரிமாறவும்.

இன்னொரு முறை:

அனலில் காண்பிக்காமல் தோசைக் கல்லிலேயே மெல்லிய சப்பாத்தியைத் திருப்பிப் போட்டு சிறிது எண்ணெய் விட்டு மெல்லிய துணியால் அழுத்தினால் உப்பலாகும். இரு பக்கமும் திருப்பிப் போட்டு வெந்ததும் எடுத்துச் சூடாகப் பரிமாறவும்.

சப்பாத்தி மாவு பிசையும்போது மாவின் அளவில் 60 சதவிகிதம் தண்ணீர் சேர்த்து இளக்கமாகப் பிசையவும். உருட்டித் திரட்டும்போது வர மாவைத் தொட்டுக் கொள்ளலாம். சரியாகிவிடும்.

புல்காவுக்கு ஏற்ற இருவித கறி வகை தரப்பட்டுள்ளது. உங்க டேஸ்டுக்கு ஏற்ப அசத்துங்க!

தேவை:

பெரிய சைஸ் க
தரிக்காய்- 2, (வி
யில்லாத வேலூர் க
தரிக்காய்),
மிளகாய்த் தூள் - 1 டீஸ்பூன்
உப்பு - தேவைக்கு,
எண்ணெய் - 2 டீஸ்பூன்

தேவை:

கோவைக்காய் ¼ கிலோ
வறுத்த வேர்க்கடலை
1 டேபிள் ஸ்பூன்,
தேங்காய்த் துருவல் -
டேபிள் ஸ்பூன்,
வெங்காயம் - 2,
தக்காளி-2 (நறுக்கியது
இஞ்சி- 1 துண்டு,
பச்சை மிளகாய் - 2,
கொத்துமல்லி - 1 டீஸ்பூன்
சீரகத் தூள் - ½ டீஸ்பூன்
கரம் மசாலா - ½ டீஸ்பூன்
உப்பு - தேவைக்கு.

சீரகம் - ½ டீஸ்பூன், வெங்காயம் - 1, பச்சை மிளகாய் - 1 பூண்டு (அரிந்தது) - 3



கத்தரி மசியல்

செய்முறை:

பெரிய கத்தரிக் காயைத் தணலில் சுட்டு தோலுரித்து, மசித்து, உப்பு, மிளகாய்த் தூள் போட்டுக் கரண்டியால் மசிக்கவும். நன்றாகக் கலக்கவும்.

கடாயில் சிறிது எண்ணெய் விட்டு சீரகம் போட்டுத் தாளித்து வெங்காயம், பச்சை மிளகாய், பூண்டு சேர்த்து வதக்கி மசித்த கத்தரிக்காயில் சேர்க்கவும்.

செய்முறை :

கோவைக்காயை மெல்லிய துண்டுகளாக நறுக்கவும். கடாயில் எண்ணெய் விட்டு கடுகு, சீரகம் தாளித்து வெங்காயம் சேர்த்து வதக்கவும். பிறகு, இஞ்சி, தக்காளி, பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும். கோவைக்காயைச் சேர்த்து வதக்கி, தண்ணீர் தெளித்து, வேகவிடவும். வெந்தபின் உப்பு, கொத்துமல்லி, சீரகத் தூள், கரம் மசாலாத் தூள் சேர்க்கவும்.

தேங்காய், வறுத்த வேர்க்கடலை, காய்ந்த மிளகாய் ஆகியவற்றை விழுதாக அரைத்து கறியில் சேர்க்கவும்.

தேங்காயின் பச்சை வாசனை போக கொதித்தவுடன் இறக்கி சூடாகப் பரிமாறவும்.

(இதே போல கோவைக்காய்க்குப் பதில் கத்தரிக்காயிலும் செய்யலாம்)



அரைச்சு விட்ட கறி!

(விருந்து தொடரும்)

படங்கள் : ஸ்ரீஹரி

அடுக்குமாடி குடியிருப்புகளிலும் ஜோராக நாய் வளர்க்கலாமே!


வீட்டினுள் நாய் 'உச்சா' போய் விடுமோ என்ற பயம் அடுக்கு மாடி குடியிருப்புகளில் வாழ்வோர் சிலருக்கு இருக்கிறது. காலை, மாலை அல்லது ஏதேனும் ஒருவேளை நாயை நடைப்பயிற்சிக்கு அழைத்துச் சென்றால் வெளியிலேயே உச்சா போய்விடும். முழு ஈடுபாட்டோடு நடைப்பயிற்சி செய்வது நமக்கும் நல்லது. நாய்க்கும் நிம்மதியைக் கொடுக்கும்.

ஒரு மணி நேரம் நடைப்பயிற்சி செய்தபின் முதல் நாள் எந்த இடத்தில் உச்சா போனதோ அந்த இடம் வந்ததும் ''டாபி... போ... போ... ம்... ம்... உச்சா.. போ...'' எனத் திரும்பத் திரும்பத் தூண்டினால், ஊக்குவித்தால் படுசமர்த்தாக ஒன்றுக்கு இரண்டுக்கு எல்லாம் போய் விடும். எந்தக் காரணம் கொண்டும் அதட்டவோ அடிக்கவோ கூடாது. இப்படிப் பழக்கத்திற்குக் கொண்டு வந்து விட்டால் எக் காலத்திலும், வீட்டை அசுத்தம் செய்யாது. அவசரத்துக்கு நாய்க்கு 'உச்சா'





தோழா..


நாய்தான் நம் கண்களுக்குத்
தெரியும் காவல் தெய்வம்.
மிகவும் நுண்ணறிவு வாய்ந்த,
விசுவாசமிக்க அன்புத்
தோழன் நாய்!
தோழா!
முனைவர்
டி.கே.சிவராஜ்

போக வேண்டுமென்ற உணர்வு வந்தால் எழுந்து நின்று முனங்குவது போல் ஓசை எழுப்பும். (நாய் வளர்க்கும்போது நாய்களின் மொழி கொஞ்சம் கொஞ்சமாக பழக்கத்திற்கு வந்துவிடும்). உடனே வெளியே அழைத்துச் சென்றால் போச்சு. நாய் ரொம்ப சுத்தமான மிருகம். அடிக்கடி தன் உடலை நாவால் துடைத்து சுத்தம் செய்யும். ஒரு இடத்தில் படுப்பதற்கு முன்னர் சுத்தமான இடம்தானா என முகர்ந்து பார்த்து உறுதி செய்து கொண்ட பின்னரே படுக்கும். பழத் தோல், காய்கறிக் கழிவு, சிந்திய கழனி நீர், காலணிகளால் சேரும் அசுத்தமான மண் போன்றவை வீட்டினுள் இருந்தால் நாய் 'உச்சா' போகக்கூடிய இடம்தானோ என நினைத்து போய் விட வாய்ப்புண்டு. வளர்ப்பு நாய்கள் 'உச்சா' போகும் போது துர்நாற்றம் வீசுவதில்லை.

மாமிசமில்லாத நாய் வளர்ப்பு சாத்தியமே!

மாமிச உணவு வழங்கினால் நாய்கள் சந்தோஷப்படுமென்பது உண்மையே. ஆனால் இறைச்சி தந்தால்தான் எழுச்சியாக பணியாற்றுமென்ற எண்ணம் தவறானதாகும்.

நாய்களுக்கு பால், கோதுமைக் கஞ்சி, உளுந்துக் கஞ்சி, ரொட்டி, சப்பாத்தி, தயிர் சாதம், உருளைக்கிழங்கு ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை மாற்றி மாற்றி ஒருவேளை வயிறு நிரம்பக் கொடுத்தால் போதும். பிற வேளைகளில் அரிசி சாதம் கொடுக்கலாம். சைவ உணவு மட்டும் உண்ணும் நாய்களுக்கு ஆயுசு அதிகம்.

காவல் துறையில் நாய்கள் சிறப்பாகச் செயல்பட நாளொன்றுக்கு ஒரு முழுச் சாப்பாடும் இரண்டு வேளை அரைச்சாப்பாடும் கொடுப்பதாக அறிந்தேன். முழுச் சாப்பாட்டை காலையிலோ, மதியமோ கொடுக்கலாம். இரவு நேரங்களில் முழுச் சாப்பாட்டைக் கொடுத்தால் நாய்கள் காவல் காக்காமல் வீட்டிற்குள் படுத்து நன்றாகத் தூங்கி விடும். நாயின் பக்கத்தில் எப்போதும் சுத்தமான தண்ணீர் வைத்திருக்க வேண்டும். தேவைப்பட்ட நேரங்களில் குடித்துக் கொள்ளும். மீதமான உணவை அடுத்த வேளை சாப்பிட மறுத்தால் அரை ஸ்பூன் தேங்காய் எண்ணெயைக் கலந்து நன்றாகக் கிளறி வைத்தால் உடனே சாப்பிட்டு விடும். மிகப் பழைய உணவுகளைக் கொடுப்பதும், நாய்தானே என்ற அலட்சியத்தில் தூசி, மண் போன்றவைக் கலந்த உணவுகளை வழங்கினாலும், வாந்தி எடுக்கும். நோய்த் தொற்றவும் வாய்ப்புண்டு.

பல நாய்கள் வாந்தி எடுத்தாலும் தூசு, தும்புகளை நீக்கி விட்டு எஞ்சியுள்ள நல்ல உணவைச் சாப்பிடும் பழக்கம் கொண்டவை. உப்பு, இனிப்புப் பண்டங்களையும் நாய்க்கு வழங்கக் கூடாது. நாம் சாப்பிடும் போதெல்லாம் (உ.ம். நொறுக்குத் தீனி) நாய்க்கும் கொடுத்துப் பழக்கக்கூடாது. அடிக்கடி சாப்பிடும் நாய், சாப்பாட்டு ராமனாகி காவல் காப்பதிலுள்ள கவனம் குறையும். ஒரு வாரம் கூட சாப்பிடாமல் நாய்கள் உயிர் வாழும். ஆனால் ஒருநாள் தூங்காவிட்டால் உடல்நலம் கடுமையாகப் பாதிக்கப்படும். வெயில் நாயின் எதிரி. பதினைந்து நிமிடத்திற்கு மேல் வெயிலில் சுட்டி போடுவதைத் தவிர்க்க வேண்டும்.



நாம் ஒருவர் வீட்டிலிருந்து கிளம்பும்போது, "போய் வருகிறோம்" என்று சொல்வதே போதுமானதென்று நினைக்கிறோம். நம் வீட்டை அடைந்ததும் ஒரு ஃபோன் செய்து நல்லபடியாக வீடு வந்து சேர்ந்தோம் என்று கூறும்போது, அவர்களது உள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சியை அனுபவித்தால்தான் புரியும்!

- எஸ்.வைரம், பெங்களூரு

எந்த நாய் சிறந்தது?

வெளிநாட்டு நாய்களும், கலப்பின நாய்களும் உயரமாகவும், பருமனாகவும் இருக்குமென்பதால் பலர் அதனை விரும்புகிறார்கள். ஆனால் நம்ம ஊருக்கு நம் நாட்டு நாய்களே சாலச்சிறந்தன. இங்குள்ள

தோஷ்ண நிலையைத் தாங்காமல் வெளி நாட்டு நாய்கள் குறுகிய காலத்தில் இறக்கும் வாய்ப்புண்டு. அவற்றிற்கு அடிக்கடி நோய்த் தொற்றும். எனவே, வெளிநாட்டு நாய்களை வளர்ப்போர் கால்நடை மருத்துவரைக் கொண்டு மாதம் ஒருமுறையேனும் பரிசோதனை செய்து அவர்களது ஆலோசனைப்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நம் நாட்டு நாய்களுக்கு இங்குள்ள நோய்களை எதிர்க்கும் ஆற்றல் அதிகம். இருப்பினும் கால்நடை மருத்துவமனைகளில் போடப்படும் இலவசத் தடுப்பூசிகளை மட்டும் சிறு வயதிலேயே (மூன்றாவது மாதத்தில்) போட்டுக் கொண்டால் டெஸ்டம்பர் மற்றும் உயிர்க்கொல்லி வைரஸ் நோய்களிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கும்.



நாய் படுப்பதற்கு மெத்தை போன்ற கனமான சணல் சாக்கு, நான்காக மடித்துப் போட்ட பழைய படுக்கை விரிப்பு, நான்கைந்து செய்தித்தாள்களை ஒருங்கிணைத்து செய்த படுக்கை ஆகியவற்றைப் பயன்படுத்தினால் தினம் அதே இடத்தில் படுத்துக் கொள்ளும். நம்ம ஊரு நாய்கள் சாதுவாக, பொலிவன்றி இருப்பதாக சிலருக்குத் தோன்றக்கூடும். ஆனால் அது செய்யும் சேவைகளையும் இக்கட்டான நேரங்களில் தன்னிச்சையாய் சுயநிர்ணயத்துடன் செயல்பட்டு உதவுவதையும் பார்க்கும்போது முன் டச்சியில் முத்தமிடத் தோன்றும். கிராமப் புறங்களில் நாட்டு நாய்களை இலவசமாகவே பெறலாம்.

நாய்களால் அலர்ஜியா?

மாதமொருமுறை நாயின் உடம்பு முழுவதும் சுத்தமான வேப்ப எண்ணெயைத் தடவி நான்கு மணி நேரம் கழித்து சோப்புப் போட்டுக் குளிப்பாட்ட வேண்டும். நாய்களுக்கென பிரத்யேகமான சோப்பைப் பயன்படுத்தலாம். அதிக வாசனை கொண்ட சோப்களையோ, ஷாம்புகளையோ பயன்படுத்தக் கூடாது. குளிப்பாட்டும்போது நாய்களின் காதுகளில் தண்ணீர் இறங்கி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குழாய் கொண்டு தண்ணீரைப் பீய்ச்சியடித்துக் குளிப்பாட்டுவது தவறு.

வளர்ப்பு நாய்கள் வாயிலாக மக்களுக்கு அலர்ஜியோ, தொற்றோ ஏற்பட்டதாக ஆதாரபூர்வமானத் தகவல்கள் எதுவும் இதுவரை இல்லை. சிறுவர் சிறுமியருக்கு சிறுவயதிலேயே நாய் வளர்ப்பில் ஈடுபாட்டினை உருவாக்குவதன் மூலம் பொறுப்புணர்ச்சி, உண்மையான நட்பின் மகிமை, எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் மனோநிலை, எச்சரிக்கை உணர்வு, தன்னம்பிக்கை, நன்றியுணர்வு, துணிவு போன்ற உயர்ந்த கோட்பாடுகளின் முக்கியத்துவம் அவர் களின் உள்ளத்தில் பதியும்.

நாய் தரும் செய்தி!

வீட்டுப் பாதுகாப்புக்கு நாய்கள் வளர்ப்பது மிக முக்கியம். நாய்களுக்கு விஷம் வைத்துவிட்டு, திருட்டுச் செயல்களில் ஈடுபடுவது அதிகரித்து வருவதால், வீட்டில் உள்ளவர்களைத் தவிர, வேறு யாரும் உணவு வைப்பதையோ, பழகு வதையோ அனுமதிக்கக் கூடாது. நாயின் கழுத்தில் மெல்லிய சங்கிலியைக் கட்டி, வீட்டைச் சுற்றி வர வழிகாட்ட வேண்டும்.

நாய் குரைத்தாலோ, வினோதமான குரலை எழுப்பினாலோ, உடனே சுற்றும் முற்றும் கண்காணிக்க வேண்டும். நாய் குரைக்கிறது என்றால் ஏதோ ஒரு செய்தி அதனிடம் இருக்கிறது என்று பொருள். ●



ரவை, அரிசி தலா 1 கிலோ சேர்த்து மிஷினில் நைசாக அரைத்து வைத்துக் கொள்ளவும். தேவையான போது, நறுக்கிய பச்சை மிளகாய், தேங்காய், வெங்காயம் மிளகு, சீரகம் சேர்த்து நீர்க்கக் கரைத்து ரவா தோசை யைத் தேங்காய்ச் சட்னியுடன் சாப்பிட சுவையோ சுவை யாக இருக்கும். **- எஸ்.சரஸ்வதி, சென்னை-83**

ரயிலில் பயணம் செய்யும்போது கேட்டரிங் சர்வீஸ் ஆட்கள் எடுத்து வரும் காப்பி, டீயில் சர்க்கரை கலந்து எடுத்து வருகிறார்கள். நீரிழிவு நோய் உள்ளவர்கள் இதைக் குடிக்க முடியாது. ஓரிரு பிளாஸ்கிலாவது சர்க் கரை இல்லாத காப்பி, டீ எடுத்து வந்தால் சௌகரியமாக இருக்கும். ரயில்வே நிர்வாகம் கவனிக்குமா?

- ஸ்ரீவித்யா தினேஷ், ஹைதராபாத்

தேனை, மண், பீங்கான், கண்ணாடிப் பாத்திரங் களில் வைப்பதே சிறந்தது.

- ஏ.பிரீத்தா, தஞ்சாவூர்-7

இவை எல்லாமே ஆஹா 50 தான்!

பூஜையறைகளில் பழைய கிரீட்டிங் கார்டுகள், திருமண அழைப்பிதழ் போன்றவற்றை நீளவாக்கில் சுமார் ஒரு ஜாண் அளவுக்கு வெட்டி வைத்துக் கொண்டால் விளக்குகள் ஏற்ற சுலபமாக இருக்கும். விரல்களில் தீயின் சூடுபடாது.

- ஒய்.ஆர்த்தி, ஈரோடு

மோர்க்குழம்புக்குக் காய்கறிகள் எதுவுமில்லையெனில் உளுத்தம் பருப்பை ஊறவைத்து, மை போல் அரைத்து குட்டி உருண்டைகளாக எண்ணெயில் போட்டுப் பொரித்து, குழம்பில் போட, குழம்பு நல்ல வாசனையாகவும், சுவையாகவும் இருக்கும்.

- பி.சந்திரா பத்மநாபன், பொழிச்சலூர்

மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளின் காதில் செல்ஃபோனை வைத்துப் பிறர் பேச்சைக் கேட்கச் செய்வது கூடாது. கதிர் இயக்கத்தால் செவி நரம்பு களும், மூளை நரம்புகளும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

- எஸ்.லக்ஷ்மி, மதுரை

இருமல் பாடாய்ப்படுத்துகிறதா? இலுப்பக் கரண்டி யில் நெய்விட்டு உருகியவுடன் சில மிளகுகளைப் பொடி செய்து அதில் பொரித்துச் சாப்பிட்டால் இருமல் போய்விடும்.

- ஆர்.தேப்ரியா, ராசபுரம்


என்றும் உங்களுடன்
ங்கையர் மலர்
திருமணமலர்
மணமக்கள் :
வேல்முருகன்-துளசி
அழகன் முருகனிடம் ஆசை வைத்தேன்...

சரியான அறிவுரை



திருமணமாகிப் புகுந்த வீடு செல்லும் பெண்ணுக்கு அம்மாக்கள் என்ன அறிவுரை சொல்வார்கள்? என் அம்மா நாகசுப்புலக்ஷ்மி எனக்குச் சொன்ன ரத்தினச் சுருக்கமான அறிவுரை. ''உன் புகுந்த வீட்டு விஷயங்களை இங்கே சொல்லாதே. நம் வீட்டு விஷயங்கள் அவர்களுக்கு வேண்டாம்'' என்பதுதான்

நான் இந்த யோசனையை அப்படியே கடைப்பிடித்து நல்ல மருமகள் என்று பெயர் வாங்கியிருக்கிறேன். அடுத்தடுத்து தன் மூத்த மகனையும், கணவரையும் இழந்த என் அம்மாவுக்கு அண்மையில் உடல்நிலை மோசமானபோது, எண்பது வயதைக் கடந்த என் மாமியாரும், மாமனாரும், ''உன் அம்மாவை நாமே வைத்துக் காப்பாற்றுவோம். நீ ஆஃபீஸ் போனாலும், நாங்கள் எங்களால் முடிந்த அளவு பார்த்துக் கொள்கிறோம்'' என்று சொல்லும் அளவுக்கு சம்பந்திகளிடம் நல்ல உறவுப்பாலம் அமைத்தது அந்த மாயாஜால வார்த்தைகளே.

அம்மா சொன்ன அறிவுரை, எத்தனை மதிப்புள்ளது என்று இப்போது புரிகிறது!

- சித்ரா முரளி, சென்னை - 78

சமீபத்தில் என் நெருங்கிய குடும்ப நண்பரிடமிருந்து திருமண அழைப்பிதழ், அஞ்சலில் வந்தது. மணமகளுக்குப் பெற்றோர்கள் இல்லாததால், தாய் மாமன் பொறுப்பேற்று நடத்துகிறார். அதில் பெண்ணின் பெற்றோர்கள்- தெய்வத்திரு/ தெய்வத் திருமதி/ என்று பெயர்களுடன் இணைத்து, தங்கள் வரவை அன்புடன் நாடுகிறோம் என்றும் அச்சடித்துள்ளார்கள். படிக்கும் போது அதிர்ச்சி மேலிட்டது. மறைந்தவர்கள், நல்வரவை நாடுகிறோம் என்றால் வேறு மாதிரி அர்த்தம் ஆகிவிடாதா? ஆர்வக் கோளாறினால் செய்திருப்பதைத் தவிர்த்திருக்கலாம்.

- ஆர்.கே.சுந்தரம், வடபழனி.



இப்படி அழைக்கலாமா?


கல்யாணமே! வைபோகமே!
Wedding Creations
KASI YATRAI SET
ARTHI & VARISAI THATTU SET
VILAIYADAL SET
BRIDE & GROOM NEEDS
TAMBOOLAM BAGS
RETURN GIFTS
DECORATED DOLLS
PARUPTHENGAI KOODU
JAYBEE
CREATIONS
The Bag People
TRUSTED OVER 20 YEARS
235, R.K. Mutt Road, (Opp. to R.K. Nagar Tel. Exchange)
Mandaveli, Chennai - 28. Ph : 2461 5791 Mobile : 98840 70935
Email : jbbags@gmail.com Visit : www.jbbags.in
http://picasaweb.google.co.in/jbbags (Latest design..)
We also do decorative packings
BOOK YOUR ORDERS AT JAYBEE



எத்தனை எத்தனை தீபங்கள்!

மூன்று தேவியர்களின் வடிவமாகிய தீபத்தை ஏற்றுவோம். கோடி நன்மை பெறுவோம்!

சித்திர தீபம்:

தரை மீது மாக்கோலம் போட்டு விளக்குகளை ஏற்றி வட்டமாக பலவித கோலங்களில் வண்ண வடிவங்களில், சித்திரங்களில் அலங்காரமாக ஏற்றி வைப்பது சித்திர தீபம்.

மாலா தீபம்:

மாலை போன்ற வடிவில் தீபத்தட்டுகளை இருபுறமும் அமைத்து, கீழிருந்து மேலாக வட்ட அடுக்கடுக்காக பெரிய அளவிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து ஏற்றுவது மாலாதீபம். இதை அடுக்கு தீபம் என்றும் சொல்வார்கள்.

ஆகாச தீபம்:

கார்த்திகை மாதம், சதுர்த்தி நாளில் ஆகாச தீபம் ஏற்றி வழிபடுவது விசேஷம். உயரமான மாடிகளில் உயரமான கோபுரங்களில் ஏற்றுவது ஆகாச தீபம். ஆகாச தீபம் ஏற்றி வழிபட்டால் எமபயம் நீங்கும்.

ஜலதீபம்:

நீரில் மிதக்க விடும், சின்னஞ்சிறு தீபங்கள் ஜலதீபம் எனப்படும். ஹரித்வாரில் கங்கையில் ஜலதீபம் பிரசித்தம்.

நௌகா தீபம்:

